# மாகாண சபை முறையை வலுவூட்டுவதற்கான வேலைத்திட்டம் 2008

இருபது வருட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட

# தேசிய பரிந்துரைகள்

USAID
FROM THE AMERICAN PEOPLE

CPA
Centre for Policy Alternatives
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

**13வது அரசியல் சீர்திருத்தம் மற்றும் அதிகாரப் பகிர்வு**

| | | |
|---|---|---|
| ISBN | : | 978-955-1655-38-9 |
| முதற் பதிப்பு | : | **2008 மே** |
| பதிப்பாசிரியர் | : | **லயனல் குருகே** |
| கணனி வடிவமைப்பு | : | **சுகந்தி மணிமாறன்** |
| அச்சுப்பதிப்பு | : | **க்ளோப் பிரின்டிங் வேர்க்ஸ் - 2329739** |
| வெளியீடு | : | **மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**<br>**சமூகப் பங்கேற்பு நிகழ்ச்சித்திட்டம்** |

மாற்றுக்கொள்கை நிலையமென்பது சுயாதீன, அரசியல் கட்சி பேதமற்ற அமைப்பொன்றாவதோடு பிரதானமாக அரசாக்கம், முரண்பாடுகளைத் தீர்த்தலும் அதனுடன் இணைந்த முரண்பாடுகளின் பால் அவதானம் செலுத்தும். மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் 1996ம் ஆண்டு அமைக்கப்பட்டதற்கான காரணம் பொது மக்களின் கொள்கை தொடர்பான சம்பாசனைக்கான சிவில் சமூகத்தின் நேரடி ஒத்துழைப்பு தேவைப்படுவதாலும், அதைப் பலப்படுத்த வேண்டும் என்பது தொடர்பாக மிகுந்த நம்பிக்கையைக் கொண்டுள்ளது. பொது மக்களின் கொள்கை விமர்சன ரீதியாக விமர்சிக்கப்படல், மாற்று வழிகளை இணங்காணல், அதை விரிவாக்கல் தொடர்பான ஆய்வு, அழுத்தம் கொடுக்கும் நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அர்ப்பணித்துள்ளது.

மேலதிக விபரங்களுக்கு:

**மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்**
**சமூகப் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டப் பிரிவு**
32/7, ப்ஃளவர் வீதி, கொழும்பு - 07
தொலைபேசி: 011-2370801-4, ஃபக்ஸ்: 011-2370802
மின் அஞ்சல்: cpa@cpalanka.org
இணையதளம்: www.cpalanka.org


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# உள்ளடக்கம்


1. இச்சந்தர்ப்பத்தை நாங்கள் நழுவவிட முடியாது 4

2. அறிமுகம் 6

3. இறுதி யோசனைகள் (20 வருட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய பரிந்துரைகள் 23

4. மாகாண மட்டத்தில் இறுதி யோசனைகள் (மாகாண சபை தற்றுணிபுகள்) 27
   - மேல் மாகாண சபையின் பரிந்துரைகள் 31
   - வடமத்திய மாகாண சபையின் பரிந்துரைகள் 33
   - ஊவா மாகாண சபையின் பரிந்துரைகள் 35
   - வடமேல் மாகாண சபையின் பரிந்துரைகள் 37
   - மாகாண சபையை வலுவூட்டுதல் - காலக்கோடு 39
   - கிழக்கு மாகாண சபையின் பரிந்துரைகள் 42
   - சபரகமுவ மாகாண சபையின் பரிந்துரைகள் 46
   - தென் மாகாண சபையின் பரிந்துரைகள் 49
   - மத்திய மாகாண சபையின் பரிந்துரைகள் 51

5. மாகாண சபைகளின் அடிப்படை யோசனைகள் (2ம் படிமுறை) 53
   - மேல் மாகாண சபை 55
   - வடமத்திய மாகாண சபை 64
   - ஊவா மாகாண சபை 77
   - வடமேல் மாகாண சபை 87
   - கிழக்கு மாகாண சபை 96
   - சபரகமுவ மாகாண சபை 108
   - தென் மாகாண சபை 117

6. முழுமையான செயற்திட்டத்தில் மாகாண சபையால் பங்களிப்பு நல்கியோர் 127


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# இச்சந்தர்ப்பத்தை நாங்கள் நழுவவிட முடியாது

எமது நாட்டில் 20 வருட காலமாக செயற்பட்டு வந்திருப்பதுடன், பல்வேறு வாதப்பிரதிவாதங்களுக்கு உள்ளாகி வந்திருக்கும் மாகாண சபை முறை குறித்து திரும்பிப் பார்ப்பதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்ததுள்ளது. சர்வகட்சி மாநாட்டின் ஓர் இடைக்கால யோசனையின் பிரகாரம், 13 ஆவது அரசியல் யாப்பு சீர்திருத்தத்தில் உள்ளடக்கப் பட்டிருக்கும் அனைத்து விதமான அதிகாரங் களையும் மாகாண சபைகளுக்கு வழங்குவதற்கு ஜனாதிபதி அவர்களை உள்ளிட்ட பல தரப்பினர் இணங்கியுள்ளனர்.

அதிகாரப் பகிர்விற்கு ஊடாக இனப் பிரச்சினைக்கு அமைதியான ஒரு தீர்வு கொண்டு வரப் பட வேண்டு மென்பதே மாற்றுக் கொள்கை களுக்கான நிலையத்தின் நீண்ட கால எதிர்பார்ப்பாகும். அந்த வகையில், இந்த விடயத்தில் ஒரு தலையீட்டினை மேற்கொள்வது உசிதமானது என அது கருதியது. அதன் பிரகாரம் மாகாண சபை முறை குறித்து விரிவான ஓர் உரையாடலை ஆரம்பிப்பது எமது எதிர்ப்பார்ப்பாக இருந்தது.

இதனை வெவ்வேறு கட்டங்களுக் கூடாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்பதே எமது நோக்கமாக இருந்து வந்தது.
முதலாவது கட்டத்தின் போது, மாகாண சபைகளின் முதலமைச்சர் களையும் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகள் ஆகியோருடன் ஒரு கலந்துரை யாடல் நடத்தப்பட்டது. அதன் பின்னர் ஒவ்வொரு மாகாண சபைக்கும் தனித்தனியான விதத்தில் மூன்று நாள் செயலமர்வுகள் பல நடத்தப்பட்டன. இச்செயலமர்வுகளின் அடிப்படையில் மாகாண சபைகளின் தற்போதைய நிலைமை, அவற்றின் சாதனைகள் மற்றும் அவை எதிர்கொண்டிருக்கும் சவால்கள், மாற்றுவழிகள் என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் அறிக்கைகளை தயார் செய்தோம்.

இறுதியில் அனைத்து மாகாண சபைகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்ற ஒரு செயலமர்வில் இதன் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டது. இந்த அறிக்கையை மே 28 ஆந் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற உள்ள மாநாட்டில் மாண்புமிகு ஜனாதிபதி அவர்களிடம் கையளிப் பதற்கு எதிர்பார்க்கப் படுகின்றது. மேலும், அரசியல் கட்சிகள், அரசியல் தலைவர்கள், ஊடகங்கள் ஆகிய அனைத்துத் தரப்புக்களினதும் கவனத்திற்கும் இதனை எடுத்து வந்து, இது தொடர்பாக பரவலான ஓர் உரையாடலை ஊக்குவிப்பதே எமது எதிர்பார்ப்பாக இருந்து வந்தது.
இச்செயலமர்வுகள் நடத்தப்பட்ட காலப் பகுதியிலே கிழக்கு மாகாண சபைத் தேர்தல் இடம்பெற்றது. அத்தேர்தலையடுத்து அங்கு ஓர் மாகாண சபை உருவாக்கப்பட்டமை


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

இச்செயல்முறைக்கு வலுவூட்டிய ஒரு விடயமாக இருந்து வந்தது.

இச்செயற்பாட்டின் போது மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பாக்கியசோதி சரவணமுத்து, பணிப்பாளர் சபை உறுப்பினர் ரொஹான் எதிரிசிங்க, சோஷல் இன்டிகேடர் அமைப்பின் தலைமை அதிகாரி பிரதீப் பீரிஸ் மற்றும் ஜோசப் தவராஜா ஆகியோரை உள்ளிட்ட புத்திஜீவிகள் இது தொடர்பாக எமக்கு அர்ப்பணிப்புடன் வழிகாட்டுதல்களை வழங்கினார்கள். சி. தொடாவத்த எஸ்.சிவகுருநாதன் மற்றும் திம்பிரியாகம பண்டார ஆகியோர் இப்பணிக்கு வழங்கிய சிறப்பான ஒத்துழைப்பையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

வேலைத்திட்டத்தில் வளப் பகிர்வாளர்கள் என்று மாத்திரம் இருந்து விடாது 13வது சீர்திருத்தத்தின் கட்டமைப்பு, அதை செயற்படுத்துவதில் உள்ள பிரச்சினைகள் மற்றும் மாற்று வழிகள் பற்றி சீராக ஆராய்ந்த வண்ணம் பெறுமதி மிகு ஒன்றையும் வழங்கிய யாப்பு மற்றும் சட்ட ஆய்வாளர் அசங்க வெலிகல அவர்களுக்கு எமது கௌரவம் உரித்தாகிறது.

வளவாளர்கள் என்ற முறையில் பேராசியர் சுனமசிறி லியனகே, சட்டத்தரணி எஸ்.ஜி. புஞ்சிஹேவா, நிதி ஆணைக்குழுவின் தலைவர் அசோக குணவர்தன, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்பாளர் கே.டி.எஸ். ருவன் சந்திர, பேராசிரியர் நவரத்ன பண்டார மற்றும் நிதி ஆணைக்குழுவின் பணிப்பாளர் சாலிய தர்மவர்தன ஆகியோர் இம்முயற்சிக்கு அளப்பரிய பங்களிப்பை நல்கினார்கள். அதே போல மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் மக்கள் பங்கேற்பு நிகழ்ச்சித்திட்டப் பிரிவின் ஊழியர்கள் வழங்கிய ஒத்துழைப்பையும் இங்கு சிறப்பாக குறிப்பிடுதல் வேண்டும்.
இந்த யோசனைகளைத் தயாரிப்பதில் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய அனைத்து பல்கலைக் கழகங்களையும் சேர்ந்த மாணவ பிரதிநிதிகளின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பும் எமக்குக் கிடைத்தது. அது தொடர்பாக எமக்கு ஒத்துழைப்பு நல்கிய பல்கலைக்கழக ஆசிரியர் களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மாகாண சபை நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக, மாண்புமிகு ஜனாதிபதி அவர்களுடனான செயற்பாடுகளை ஒருங்கிணைப்பதில் ஒத்துழைப்பு வழங்கிய போக்குவரத்து அமைச்சர் டலஸ் அலகப்பெரும அவர்கள் வழங்கிய ஒத்துழைப் பையும் இங்கு நன்றியுடன் நினைவு கூர விரும்புகிறோம்.

எமது நாட்டில் இடம்பெற்று வரும் போர் பல தசாப்த காலமாக ஆயிரக்கணக்கான மக்களின் இரத்தத்தை மண்ணில் சிந்த வைத்துள்ளது. அப்போரை நிறுத்துவது ஓர் உடனடித் தேவையாக இருந்து வருகின்றது. கிழக்கு மாகாண சபைத் தேர்தல் அது தொடர்பான மிக முக்கியமான ஒரு திருப்புமுனையாக உள்ளது.

மாகாண சபைகள் எதிர் கொண்டிருக்கும் நெருக்கடியை ஆழமான விதத்தில் புரிந்து கொண்டு, தூர நோக்குடன் அதற்கு உசிதமான ஒரு தீர்வை முன்வைக்கக் கூடிய இந்த அரிய வாய்ப்பு தவறவிடப்பட்டால் எதிர்காலத்தில் எமது தாய்நாடு இதிலும் பார்க்க ஓர் பாரிய விலையை இதற்காகச் செலுத்த வேண்டியிருக்கும் என்பதே எனது கருத்தாகும். எனவே, இந்த இருண்ட கணத்தில் மனித நேயத்தின் பெயரில் பல்லாயிரக் கணக்கான தீபங்களை ஏற்றிவைத்து எம் அனைவருக்கும் ஒளிமயமான ஓர் எதிர்காலத்தை எடுத்து வருவதற்கு நாங்கள் திடசங்கற்பம் செய்து கொள்வோம்.

**லயனல் குருகே**
ஒருங்கிணைப்பாளர்
மக்கள் பங்கேற்பு நிகழ்ச்சித்திட்டப் பிரிவு
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

# அறிமுகம்

1978இன் அரசியலமைப்புக்கு 1987இல் ஆக்கப்பட்ட பதின் மூன்றாவது திருத்தம் இலங்கையில் மாகாண சபைகள் முறைமை யொன்றின் ஊடாக அரசியல் அதிகாரத்தின் பகிர்வுக்கான சட்டகத்தை வகுத்துரைக்கின்றது. அது தொடக்கத்தில் இத்தீவின் வடக்கிலும் கிழக்கிலும் அரசியல் அதிகாரத்துக்கான தமிழர் அபிலாசைகளை நிறைவேற்று வதற்கான ஒரு பதிற்செயலாக வடிவமைக்கப்பட்ட போதிலும் பல்வகைப்பட்ட அரசியற் சூழ்நிலைகளின் நிமித்தம் அக் குறிக்கோளை நிறைவேற்றுவதில் அது வெற்றி பெறவில்லை. எனினும் இம்முறைமை நாட்டின் எஞ்சிய பகுதியில் கடந்த இரு தசாப்தங்களாகச் செயற்பட்டு வந்துள்ளது.

சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழு (APRC) எதிர்காலத்தில் அதிகாரப் பங்கீட்டுக்கான மேலும் பொருள் செறிந்த முன் மொழிவுகளை அறிக்கையிடும் அத்தகைய காலம்வரை, ஓர் இடைக்கால நடவடிக்கையாக, அதில் வகுத்துரைக் கப்பட்ட அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை முழுமையாகச் செயற் படுத்துவதென்று இன்றைய அரசாங்கம் ஒத்துக்கொண்டுள்ள கொள்கையின் கீழ் பதின்மூன்றாவது திருத்தத்தின் மீதான ஆர்வம் புத்தூக்கம் பெற்றுள்ளது.

பதின்மூன்றாவது திருத்தம் இலங்கையில் சமாதானத்துக்கும் சனநாயகத்துக்குமான அரசியல் மற்றும் அரசியலமைப்புச் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய எதார்த்தமான அல்லது அடைந்து கொள்ளக் கூடிய அதிகாரப்பகிர்வுச் சட்டகமொன்றைக் குறிக்கின்றதா வென்பதில் கடுமையான சந்தேகங்கள் தொடர்ந்துமுள்ள போதிலும், மாகாண சபை முறைமையைச் செயற்படுத்துகின்ற அனுபவத்தை மதிப்பீடு செய்தலானது, தற்போதுள்ள முறைமையை 'முழுமையாகச் செயற்படுத்துவதிலும்' அதிகாரப் பங்கீட்டுக்கான எதிர்காலச் சட்டக மொன்றைத் திட்டமிடுவதில் தவிர்க்க வேண்டிய பிரச்சினைகளின் வகையை இனங்காண்பதிலும் அது படிப்பிக்கக்கூடிய பாடங்களுக்காகப் பயனுள்ளதாகும். எனவே CPA – USAID செயலமர்வுகளின் நிகழ்ச்சித்திட்டம், கொள்கை வகுப்பாளர் களுக்கும் அரசிய லமைப்பைச் சீர்திருத்துபவர்களுக்கும் பொது மக்களுக்கும் பயன்படக் கூடியதாக இம்முறைமையைச் செயற்படுத்துவதில் நேரடி அறிவுடை யவர்களின் கருத்துக்களையும் அனுபவங்களையும் வெளிக்கொணர்ந்து ஒப்பிட்டுப் பார்ப்பதற்கான ஒரு முயற்சியாகத் தொடக்கிவைக்கப்பட்டது.

தற்போதைய அறிக்கை, செயலமர்வு களில் கட்டமைக்கப்பட்ட கலந் தாராய்வுகளின் ஊடாக இனங்காணப்பட்ட சவால்களை, பரந்தளவில் அக்கலந் தாராய்வுகளிலிருந்து எழுந்த எட்டுப் பிரதான கருப்பொருள்களின் பிரகாரம் ஒழுங்கமைத்து முன்னிலைப்படுத்த முனைகின்றது. இவ்வறிக்கை செயலமர்வுகளில் முனைப்படுத்திக் காட்டப்பட்ட குறிப்பிடத்தக்க எல்லா


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

விடயங்களையும் ஆராயவில்லை; அவை அறிக்கைக்கான பின்னி ணைப்பாக எளிதாகப் பார்க்கக்கூடிய தான வடிவத்தில் மீளத் தரப்பட்டுள்ளன. பதிலாக இவ்வறிக்கை ஏறக்குறைய எல்லா மாகாணங்களினதும் அனுபவங்களை விளக்கிக் காட்டுகின்ற கூடிய முனைப்பான பிரச்சினைகளில் கவனத்தைக் குவிக்கின்றது. மேலும் இவ்வறிக்கை செயலமர்வின் குழு – வேலைத் தொடர்களில் முறைப்படி அறிக்கையிடப்பட்டவற்றுக்கு மட்டும் வரையறுக்கப்படவில்லை. அது முழுநிறைவுக் கூட்டக் கலந் தாராய்வுகள், கேள்வி- பதில் தொடர்கள், பங்கேற்பாளர்களுடனான முறைசாரா உரையாடல்கள் ஆகியவற்றின் மூலம் பெற்ற உள்நோக்குகளைப் பிரதி பலிப்பதுடன் இப்பரிமாற்றங் களிலிருந்து பெறப்பட்ட முடிவுகளையும் CPA இன் நிறுவன ரீதியான அறிவையும் கூடக் கொண்டுள்ளது.

இவ்வறிக்கை, அத்தியாயம் 3இல் தொடரவுள்ள கருப்பொருள் சார்ந்த ஆராய்வின் சூழல் பொருத்தத்துக் காக, அத்தியாயம் 1 இல் பதின்மூன்றாவது திருத்தச் சட்டகத்துக்கான ஒரு சுருக்கமான அறிமுகத்தைக் கொண்டுள்ளது. அது அத்தியாயம் 4 இல் ஒரு சுருக்கமான முடிவுகளின் தொகுதியுடன் முடிவுறுகின்றது.

# பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் அதிகாரப் பகிர்வுக்கான சட்டகம்

இந்த அத்தியாயத்தின் நோக்கம் பதின்மூன்றாவது திருத்தம் பற்றிய ஒரு சுருக்கமான அறிமுகத்தை வழங்குவதன் மூலம் அத்தியாயம் 3இல் செயலமர்வுத் தொடர்களில் உருவாக்கப்பட்ட கூடிய முனைப்பான கருத்துக்களைக் கருப்பொருள்ரீதியாகச் சமர்ப்பிப்தற்கான சூழமைவைக் காட்டுதலாகும். பதின்மூன்றாவது திருத்தம் சட்ட மாக்கப்பட்ட இருபது ஆண்டுகளின் பின்னர் செயலமர்வுத் தொடர்கள் எதனைச் சாதித்துள்ள தென்றால் அது, பிரதானமாக அதனைச் செயற்படுத்துவதிலும் நடைமுறைப் படுத்துவதிலும் மிக நெருக்கமாக ஈடுபட்டுள்ளவர்களின், அதாவது, மாகாண சபைகளின் தெரிவுசெய்யப்பட்ட மற்றும் நிருவாக அதிகாரிகளின், கண்ணோட்டத் திலிருந்து பதின் மூன்றாவது திருத்தத்தை ஒழுங்குமுறைப்படி மதிப்பீடு செய்தல்தான். இம் முயற்சி, இதனைச் செயற்படுத்தியவர்களின் கண்ணோட்டத் திலிருந்து இக்குறிப்பிட்ட அதிகாரப் பகிர்வுத் திட்டம் காட்டியுள்ள தோல்வி களையும் வாய்ப்புக்களையும் பற்றிய மிகையான உள்நோக்குகளை வழங்கியது. எனினும் ஓர் அரசியல் கேள்வியாக அதிகாரப் பகிர்வுக்கான அடிப்படைக் கோட்பாடு எவ்வாறு தாபிக்கப்பட்ட தென்பதையும் அதன் சட்டத் தோற்றம் எவ்வாறு பதின்மூன்றாவது திருத்தமென்ற வடிவத்தில் வந்ததென்பதையும் மீட்டிப்பார்த்தலும் முக்கியமானது. இது, முரண்பாட்டுத் தீர்வுக்கும் கூடிய சனநாயகமயமாக்கலுக்கும் ஒரு வழிமுறையாக அதிகாரப் பங்கீடு பற்றித் தொடர்ந்து நடைபெறுகின்ற பகிரங்க விவாதம் தொடர்பான பிரச்சினைகளை விரிவாக விளங்கிக்கொள்வதற்குத் தீர்வுக்கட்டமான ஒன்றாகும்.

பதின்மூன்றாவது திருத்தத்தைக் கண்டிப்பவர்களையும் அவர்களின் அடிப்படை வாதங்களையும் பரந்தரீதியில் இரண்டாகப் பிரிக்கலாம். ஆரசியல் அதிகாரத்துக்கான இனத்துவ – ஆட்சிப்பிரதேசக் கோரிக்கைகளுக்குப் பதிலளிக்கும் ஒரு வழிமுறையாக அதிகாரப் பங்கீட்டையும் பகிர்வையும் எதிர்ப்பவர்கள், அரசியலமைப்புக்கான திருத்தம் செய்யப்பட்ட அரசியல் மற்றும் சட்டச் செயல்முறை அடிப்படையில் சட்டமுறைகேடாதெனச் சுட்டிக்காட்டுவர். இன்றியமையாதவாறு உள்நாட்டுப்

பயங்கரவாதப் பிரச்சினையென்று காணப்பட்ட ஒன்றில் இந்தியாவின் தன்முனைப்பான பங்கு, அரசியலமைப்புக்கான திருத்தத்தை ஒப்பிட்டளவில் இலகுவாக நிறைவேற்றக் கூடியதாக 1987 இல் அரசாங்கத்தின் (1982இன் மக்கள் தீர்ப்பின் ஊடாக ஈட்டப்பட்ட) அளப்பரிய பாராளுமன்றப் பெரும்பான்மையின் சட்டமுறைகேடான தன்மை, சிங்கள அரசியல் சமூகத்தினுள் அதேயளவு அளப்பரிய அரசியல் எதிர்ப்புக்கெதிராக அதனைப் பயன்படுத்திய முறை போன்ற காரணிகள் இதன் தொடர்பில் சான்றாக எடுத்துக்காட்டப்படுகின்றன. மேலும் பதின்மூன்றாவது திருத்தம் செய்து முடிக்கப்பட்ட ஒரு காரியமான பின்னர் இக் கண்ணோட்டத்தில் மிகப் பிரபலமான வாதமாயிருந்தது. மாகாண சபைகள் ஊழல்களின் விளைநிலம், பெரும்செலவு பிடிக்கின்ற ஒரு மடமையான செயல், தோல்வியடைந்த அரசியல்வாதிகளுக்கான ஒரு கருவூலம் என்பதைத் தவிர அது உள்ளமையை நியாயப்படுத்துவதற்கு நியாயமான காரணம் எதுவுமில்லை என்ற கருத்து: நாகரீகமான முறையில் கூறுவதாயின் ‘வெள்ளை யானை’ என்ற வாதம்.

சித்தாந்த நிறமாலையின் மறுமுனையில், மையப்படுத்திய ஒற்றையாட்சி அரசில் நிலை நிறுவப்பட்டுள்ள பதின்மூன்றாவது திருத்தச் சட்டகம் பரந்தகன்ற அரசியலமைப்புச் சாதனத்தினுள் உள்ளக எதிர் முரண்பாடுகளையும் முற்றிலும் பொருத்தமற்ற தன்மையையும் கொண்டதென்றும் அது போதாத தென்பதுடன் நடைமுறைக்கு ஒவ்வாத ஒரு சட்டச் சட்டகமென்றும் வாதிடுவோர் உள்ளனர். இக்கருத்துக் கோணத்தின் பிரகாரம், ஓர் ஒற்றையாட்சி அரசினுள் பல்வகைமையையும் பல்லினவாதத்தையும் சமாளிக்கின்ற ஒரு கோட்பாடாக அதிகாரப் பகிர்வும் பிராந்திய சுயாட்சியும் பயன்பட வேண்டுமாயின், அது கருத்தாழமுள்ளதாகவும் மத்திய அரசின் இடைவிடாத உட்தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கப்பட்டதாகவும் இருக்க வேண்டும். எனவே அதிகாரப் பங்கீடு வெற்றியளிக்க வேண்டுமாயின் பதின்மூன்றாவது திருத்தம் உறுதியாக நிலைநாட்டப்பட்டுள்ள ஒற்றையாட்சி அரசென்ற அடிப்படை முரண்பாட்டில், அதனை முழுதும் மீண்டும் வகுத் தமைக்கும் நோக்குடன், கவனஞ்செலுத்த வேண்டுமென அவர்கள் வாதிடுவர். இறுதியான அரசியல் பகுப்பாய்வைப் பார்க்குமிடத்து, பதின்மூன்றாவது திருத்தம் வடக்கிலும் கிழக்கிலுமுள்ள தமிழ் பேசும் மக்களுக்குச் சமாதானமான அதிகாரப் பங்கீடென்ற அதன் பிரதான நோக்கத்திலும் பிரதம அடிப்படைக் கோட்பாட்டிலும் வெளிப்படையாகத் தோல்வி கண்டுவிட்டதென இவ்விமர்சகர்கள் சுட்டிக்காட்டுவர்.

பதின்மூன்றாவது திருத்தத்தின் மீதும் உண்மையில் இலங்கையின் ஒருமையை மெய்க்கோளாகக் கொண்ட வேறு எந்த வகையான அதிகாரப் பங்கீட்டின் மீதுமான மூன்றாவது வகுதிக் கண்ணோட்டம், ஐயத்துக்கிடமின்றி எல்.ரீ.ரீ.ஈ. வெளிப்படுத்தியவாறு, தமிழ் அரசியல் சமூகத்திலுள்ள செயற்பாட்டாளர்களின் கண்ணோட்டம்தான். வடக்கிலும் கிழக்கிலும் தனிவேறான அரசொன்றை நிறுவுவதென்ற அவர்களின் ஈடுபாட்டுக் கடப்பாட்டின் நிமித்தம் மேலும் கூடிய வலுவுள்ள அதிகாரப் பங்கீட்டு அல்லது அதிகாரப் பகிர்வு வடிவத்தைத்தன்னும் அவர்கள் நிராகரிப்பர்.

இக்கேள்விகளைப் பரிசீலனை செய்தலும் ஆராய்ந்து பார்த்தலும் தற்போதைய முயற்சியின் நோக்கமல்ல. எனினும், ஐயத்துக்கிடமின்றி, பதின்மூன்றாவது திருத்தத்தைச் செயற்படுத்துவதன் நன்மைகளும் தீமைகளும் அனுபவங்களும் பற்றிய ஒரு கலந்தாராய்வு இலங்கையில் அதிகாரப் பங்கீடும் சனநாயக மயமாக்கலும் பற்றிய பரந்த விவாதங்களுக்குள் புகுந்துவிடுவதில் வியப்பேதுமில்லை.


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# 2.1 அதிகாரப் பகிர்வுக்கும் பதின்மூன்றாவது திருத்தத்துக்குமான அடிப்படைக் கோட்பாடு

இலங்கைச் சமுதாயத்தின் இன, கலாசார மற்றும் சமயப் பல்வகைமை அரசின் அரசியலமைப்பு வடிவம் பற்றிய அரசியல் சச்சரவுக்கான ஒரு மூலமாக எப்போதும் இருந்துள்ளது. பொதுவாக எமது சுதந்திரத்துக்குப் பிந்திய வரலாற்றில் பெரும்பான்மைச் சிங்களச் சமூகம் அதன் பெருமளவு எண்ணிக்கையின் ஊடாக அரசை அது கட்டுப்படுத்தக்கூடியதான ஓர் ஒற்றையாட்சி அரசென்ற வடிவத்தில் சனநாயகத்தை ஆதரித்துவந்துள்ளது. எதிர் மாறாக, எண்ணிக்கையில் சிறிய தமிழ்ச் சமூகம் சிங்களப் பெரும்பான்மையின் ஆதிக்கம் பற்றி அச்சங் கொண்டிருந்ததனால் தமது நலன்கள் பாதுகாக்கப்படக்கூடிய அரசியலமைப்பு வடிவங்களைத் தேடியது. இந்த உரிமைக் கோரிக்கைகள் மத்தியில் அதிகாரப் பங்கீடு (எடுக்காட்டாகத் தேசிய சட்டசபையில் சமமான பிரதிநிதித்துவத்தின் ஊடாக), சமஷ்டி என்ற கருத்துக்களாகவும் 1970களிலும் 80களிலும் பிரிந்து செல்வதற்கும் தனி வேறான அரசொன்றைத் தாபிப்பதற்குமான கோரிக்கைகளாகவும் வெளிப்பட்டன. 1980களில் இந்த அரசியல் பதற்றங்கள் வன்முறையான இன மோதலாகவும் சிவில் யுத்தமாகவும் மாறிவிட்டன. அத்துடன் இக்காலத்தில் இலங்கையில் அதிகரித்த இன மோதல் புவியியல் சார்ந்த அரசியல் முக்கியத்துவம் பெறத் தொடங்கிவிட்டதனால் பிராந்திய வல்லரசான இந்தியா ஒரு தீவிரமான, ஒரு வேளை முரண்பாடான பங்கை வகிக்கத் தொடங்கிவிட்டது. அப்பாங்கில் அது பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கை அரசுக்கெதிராகத் தமிழ்ப் பிரிவினை வாதத்தை ஆதரித்ததுடன் அரசாங் கத்துக்கும் தமிழ்த் தேசியவாதக் குழுக்களுக்கும் இடையில் ஐக்கிய இலங்கையினுள் அரசியலமைப்புத் தீர்வொன்றை எளிதாக்குவதற்கான முயற்சியிலும் ஈடுபட்டது.

பின்கூறப்பட்ட வகையான இந்தியத் தலையீடு 1980களில், விசேடமாக 1983 கறுப்பு யூலை நிகழ்வுகளின் பின்னர், பேச்சுவார்த்தைத் தீர்வொன்றை எட்டுதலை நோக்காகக் கொண்ட பல்வேறு அடியெடுப்புக்களுக்கு வழிவகுத்திருந்தது. அவற்றில் ஒரு திருப்புமுனை 1985இல் திம்புவில் இடம்பெற்ற இந்திய ஏற்பாட்டிலான பேச்சுக்கள். தீர்வொன்றுக்கு உடன்படுமாறு இலங்கையின் முரண்பாட்டுக்கான தரப்புக்களை இணங்கவைப்பதற்கான இந்திய முயற்சிகளின் உச்சக் கட்டம்தான் 1987 ஆகஸ்டின் இந்திய - இலங்கை ஒப்பந்தம்.

## அவ்வொப்பந்தத்தின் குறிக்கோள்களாயிருந்தவை:

1. இலங்கையில் ஒருமையையும் இறைமையையும் ஆள்புல ஒருமைப் பாட்டையும் பேணுதல்.

2. எல்லாப் பிரசைகளும் சமத்துவமாகவும் பாதுகாப்பாகவும் இணக்கமாகவும் வாழவும் வளம்பெறவும் தமது அபிலாசைகளை நிறைவேற்றவும் கூடிய ஒரு பல்லின, பல மொழி பேசும் பன்மைச் சமுதாயச் சட்டகமொன்றினுள் ஒவ்வொரு இனக் குழுவினதும் தனிவேறான கலாசார மற்றும் மொழிசார்ந்த அடையாளத்தைப் பேணிவளர்த்தல்.

3. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இலங்கையின் தமிழ்பேசும் மக்களின் வரலாற்றுக் குடியிருப்புப் பிரதேசங்களாக அங்கீகரித்தல்.

இவ்வொப்பந்தம் அதன் குறிக்கோள்களைச் செயற்படுத்துவதற்கு அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் கூட்டிணைக் கப்படவிருந்ததும் ஓரளவுக்கு இந்தியத் தோற்ற அளவிலான அரைகுறை சமஷ்டித் திட்டத்தின் மாதிரியில் அமைந்ததுமான நிறுவனரீதியான சட்டகமொன்றை முன்மொழிந்தது. இது மாகாண சபைகள் ஊடாக அதிகாரப் பகிர்வுத் திட்டமொன்றைத் தாபித்த, 1978 இன் அரசியலமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தைத் தோற்றுவித்தது.

## 2.2 பதின்மூன்றாவது திருத்தத்தின் கட்டமைப்புச் சட்டகம்

1978 இன் அரசியலமைப்பினால் தாபிக்கப்பட்ட இலங்கை அரசின் வலிதாக்கப்பட்ட ஒன்றையாட்சிப் பண்பினாலும் கடுமையாக மையப் படுத்தப்பட்ட இயல்பினாலும், அதிகாரப் பகிர்வை அறிமுகப்படுத்த முனைந்த அரசியலமைப்புச் சட்டகம் பெருமளவுக்குக் கட்டுப்படுத்துவதாக இருந்ததுடன், அத்தியாயம் 3 இல் பின்னர் ஏற்பட்ட அனுபவம் காட்டுகின்றவாறு, அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வைக் கீழறுப்பதற்கும் பயன்பட்டது. பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பான வழக்கில் (1987) [2 SLR 312], உயர்நீதிமன்ற நீதிபதிகளில் பெரும்பான்மையோரின் கருத்தின்படி மாகாண சபைகள் மத்திய பாராளுமன்றத்துக்கும் சனாதிபதிக்கும் கீழ்நிலைப்பட்ட அமைப்புக்களாயிருந்தன. இலங்கை ஓர் ஒற்றையாட்சி அரசென்று பிரகரனப்படுத்துகின்ற அரசியலமைப்பின் வலிதாக்கப்பட்ட 2ஆம் உறுப்புரையுடன் பதின் மூன்றாவது திருத்தச் சட்டமூலத்தை ஒத்திசைவிப்பதற்கான ஒரேயொரு வழி இதுதானென்று பெரும்பான்மையான நீதிபதிகள் கருதினர். பதின்மூன்றாவது திருத்தத்துக்கு ஆதாரமானதாகவும் அதனை விரித்துக்கூறுவதாகவும் உள்ள நியதிச்சட்டமுறையான சட்டகமும் (1987இன் 42ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டம் திருத்தப்பட்டவாறு) ஒத்தவகையில் கட்டுப்படுத்துவதாயுள்ளது. இது அதிகாரப் பகிர்வுக்கான உண்மையான தேவையையும் நியாயப் படுத்தலையும் பற்றிய ஒரு மெய்யான கருத்தொற்றுமை இல்லாமையிலிருந்து எழுகின்ற, கடுமையான அவநம்பிக்கை கொண்ட அரசியல். ஆட்சித்துறை மற்றும் நீதித்துறையின் மனப்போக்கையும் அதிகாரப் பகிர்வின் மீதான எதிர்ப்பையும் கூடத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது.

அதிகாரப்பகிர்வுக்கான ஆட்சிப்பிரதேச அலகு மாகாணமாயிருந்தது. இலங்கையில் அத்தகைய ஒன்பது மாகாணங்கள் உள்ளன. எனினும் ஒப்பந்தத்தின் பிரகாரம், தமிழ்த் தேசியவாதிகளின் முக்கிய கோரிக்கையொன்றை நிறைவேற்றும் பொருட்டு வடக்கு மற்றும் கிழக்கு


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

மாகாணங்கள் 'இணைக்கப்படும்' என்ற அரசியல் பொறுப்பேற்பொன்று இருந்தது. கிழக்கு மாகாணக் குடியிருப்பாலர்கள் வடமாகாணத்துடன் இணைந்திருப்பதற்குத் தொடர்ந்தும் ஒப்புதல் அளிக்கின்றார்களா வென்பதைத் தீர்மானிப்பதற்குக் கிழக்கு மாகாணத்தில் மக்கள்தீர்ப்பு வாக்கெடுப் பொன்று நடத்தப்படுவதற்கு அமைவாக, சனாதிபதிக் கட்டளையொன்றின் மூலம் இது செயற்படுத்தப்பட்டது. 2006 வரை இந்த மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு வருடாந்தம் ஒத்திவைக்கப்பட்டது. 2006இல் உயர்நீதிமன்றம், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை தொடக்கத்தில் இணைக்கின்ற சனாதிபதிக்கட்டளை செல்லுபடியற்ற தெனத் தீர்ப்பளித்ததன் மூலம் செயல்விளைவுள்ள முறையில் இரண்டினதும் இணைப்பு நீக்கப்பட்டது. 2008 மேயில் கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் நடத்தப்பட்டது. பதின்மூன்றாவது திருத்தம் சட்ட மாக்கப்பட்டதைத் தொடர்ந்து சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரம், விகிதாசார பிரதிநிதித்துவ முறையில் தெரிவு செய்யப்பட்ட, எட்டு மாகாண சபைகளுக்குப் பகிரப்பட்டது. ஒரு மாகாண சபையின் நிறைவேற்று அதிகாரங்கள், சனாதிபதியால் நியமிக்கப்படும். அதன் ஆளநருக்கு உரித்தாக்கப்படுகின்றன. எனினும் ஆளுநர் அவ்வதிகாரங்களை, சில குறித்த சூழ்நிலைகளில் தவிர, முதலமைச்சரின் ஆலோசனைக்கிணங்கப் பிரயோகிக்கக் கடமைப்பட்டுள்ளார். ஆளுநர் மாகாண சபையில் ஆகக்கூடிய பிரதிநிதித்துவத்தைக் கொண்டுள்ள கட்சியின் தலைவரை முதலமைச்சராக நியமிக்கின்றார். மாகாண அமைச்சர்கள் சபை நான்கு அமைச்சர்களையும் முதலமைச்சரையும் கொண்டுள்ளது. மாகாண நிதி அதிகாரங்களும் ஆளுநருக்கு உரித்தாக்கப்பட்டுள்ளன.

விடயங்களின் நிரல்கள் மூன்றின் ஊடாகத் தகுதிகள் ஒதுக்கப்படுகின்றன: மாகாண சபை நிரல், தனிப்பட்ட மத்திய அரசாங்கத்தின் தகுதிக்குரிய ஒதுக்கு நிரல் மற்றும் ஓர் ஒருங்கியை நிரல். ஒருங்கியை நிரலிலுள்ள எந்தவொரு விடயத்திலும் மத்திய அரசாங்கச் சட்டம் மாகாணச் சட்டத்தை விட மேலோங்கியதாயிருக்கும். அத்துடன் ஒதுக்கு நிரல், பகிரப்பட்ட விடயங்கள் உட்பட எல்லா விடயங்களிலும் 'தேசியக் கொள்கை' யை வகுப்பதற்கு இயலச்செய்கின்ற ஏற்பாட்டின் மூலம் அதிகாரப் பகிர்வைக் கடுமையாகக் கீழறுப்பதற்கு மத்திய அரசாங்கத்துக்கு வலுவளிக்கின்றது. எஞ்சிய அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்துக்கு உரித்தாக்கப்பட்டன.

பதின்மூன்றாவது திருத்தம் ஒவ்வொரு மாகாணத்துக்கும் குற்றவியல் விடயங்களில் மூல, மேன்முறையீட்டு மற்றும் மீளாய்வு நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கின்ற மேல் நீதிமன்மொன்றைத் தாபித்து. அது மாகாண சபை நிரலின் கீழுள்ள எந்தவொரு விடயம் தொடர்பிலும் மீயுரிமை எழுத்தாணைகளை வழங்கும் அதிகாரத்தையும் கொண்டுள்ளது.

# செயலமர்வுக் கலந்தாராய்வுகள்: முக்கிய கருப்பொருள்கள்

செயலமர்வுத் தொடர்களின் கட்டமைக் கப்பட்ட கலந்தாராய்வுகளில் பங்கேற்பாளர்கள், பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழான அதிகாரப் பகிர்வுச் சட்டத்தைச் செயற்படுத்துகின்ற மாகாணக் கண்ணோட்டத்தில் அவர்களின் நடைமுறை அனுபவத்திலிருந்து எழுகின்ற சவால்களையும் அச் சவால்களுக்குச் சாத்தியமான தீர்வுகளையும் மாற்றுக்களையும் இனங்காணும்படி ஊக்குவிக்கப்பட்டனர். அச்சவால்களில் கவனஞ்செலுத்துவதற்கு அவர்கள் முன்மொழிந்த தீர்வுகளைச் செயற்படுத்துதல் தொடர்பில் மாற்றத்தின்

முகவர்களாக அவர்கள் யாரை இனங் காணுகின்றனர் எனக் கேட்கப்பட்டனர்.

இம் முயற்சியிலிருந்து வெளிப்பட்ட பெருந்திரளான எண்ணங்களிலும் பிரச்சினைகளிலும், பொருளாதார அபிவிருத்தியின் பிராந்திய ஏற்றத் தாழ்வுகள்; சார்பளவிலான வறுமையும் சுபீட்சமும்; சனத்தொகை, குடிச்சரிதவியல் மற்றும் இன ஆக்கஅமைவு; பிராந்தியத் தேவைகளும் விருப்புக்களும்; கொள்கைச் சவால்களும் முந்துரிமைகளும்; மத்திய அராங்கத்துடனான அரசியல் உறவுகள்; ஒவ்வொரு மாகாணத்தினதும் துறைசார்ந்த மற்றும் கைத்தொழில் சார்ந்த வெளித்தோற்றம் போன்ற காரணிகளின் அடிப்படையில் மாகாணங்களுக்கிடையில் கருத்துக்களில் இயல்பான வேற்றுமை காணப்பட்டது.

எனினும் மிகவும் வேறுபட்ட மாகாணங்களால் அதிகாரப்பகிர்வின் வெற்றிக்கான சவால்களாக (அத்துடன், உண்மையில், தீர்வுகளாக) இனங் காணப்பட்ட பிரச்சினைகளின் பரந்த பொதுத்தன்மை பெரிதும் குறிப்பிடத் தக்கதாயிருந்தது அவற்றின் பிராந்திய வேறுபாடுகள் எவ்வாறிருப்பினும் ஒவ்வொரு மாகாணமும் எதிர்கொள்வதாகத் தோன்றுகின்ற கொள்கைப் பிரச்சினை களின் இப்பரந்த தொகுதியைப் பின்வருமாறு கருப்பொருள்ரீதியாக முன்வைக்கலாம்:

- அரசியலமைப்புப் பிரச்சினைகள்: பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல்.
- அரசியல் மற்றும் நிர்வாகப் பிரச்சினைகள்: மையப்படுத்திய கலாசாரம்
- அரசிறை வருமான மற்றும் நிதிப்பிரச்சினைகள்: கட்டமைப்புக் குறைபாடுகளும் நடைமுறை அனுபவமும்
- மாகாண ஆட்சி முறை: கட்டமைப்பு மற்றும் அரசியல் பிரச்சினைகள்
- செயலாற்றல் பிரச்சினைகள்: மனிதவளங்களும் நிருவாகத் திறனும்
- சட்டப் பிரச்சினைகள்: சட்ட ஆட்சியின் கீழ் அதிகாரப் பகிர்வு
- மாகாணச் சிறுபான்மைகளும் மொழிக்கொள்கையும்: மாகாண சபைகளின் பங்கும் செயலாற்றலும்
- மாகாண சிவில் சமுதாயம்: பங்கேற்பு, பதிற்செயலாற்றல் மற்றும் வகைப்பொறுப்பு

இத்துணைக் கருப்பொருள்களின் மேல் கவிந்ததாகவும் அவற்றை ஊடறுப் பதாகவும் மிக நெருக்கமான தொடர்புடைய இரண்டு முக்கிய கருப்பொருள்கள் உள்ளன. முதலாவதாக, அவற்றில் அனேகமானவை பதின் மூன்றாவது திருத்தத்தில் வகுத் துரைக்கப்பட்ட அதிகாரப்பகிர்வுக்கான குறிப்பிட்ட அரசியலமைப்புச் சட்டகத்தின் கட்டமைப்புத் தாற்பரியங்கள் தொடர்பானவை. எனவே ஒருங்கினைய நிரல் பற்றிய ஒரு கவனம் தெளிவாக அதிகாரப்பகிர்வுத் திட்டத்தின் உயிர் நாடியாயுள்ள ஓர் அரசியலமைப்புப் பிரச்சினையாயுள்ள அதே வேளையில் அத்திட்டத்தின் கீழும் அதனைச் சுற்றியும் விருத்தியடைந்துள்ள நிதி மற்றும் நிருவாக நடைமுறைகள் பற்றிய கவனங்களும் அவ்வாறே. இரண்டாவதாக, அரசியல் மற்றும் ஆட்சித்துறை நடைமுறைகளும் நீதித்துறை மனப்பாங்குகளும் அரசியலமைப்பால் தாபிக்கப்பட்ட கட்டமைப்புகளுக்கு அர்த்தம் கொடுக்கப்படும் முறையில் மறுக்க முடியாதவாறு செல்வாக்குச் செலுத்துகின்றன.

எனவே வரைவு செய்தவர்களின் நோக்கங்கள் எவ்வாறிருப்பினும், மையப்படுத்தலை ஊக்குவிக்கின்ற ஒரு பணித்துறைக் கலாசாரம் அதிகாரப் பகிர்வுக்கான அரசியலமைப்புச் சட்டகமொன்றைக் கீழறுக்கக் கூடும். இதன் மறுதலையும் உண்மைதான். மையப் படுதத்திய நிறுவனக் கட்டமைப்புகள் கூட பன்முகப்படுத்தலுக்கு பணித்துறைக் கலாசாரத்தினதும் பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களினதும் நெருக்குதலின் கீழ் நடைமுறையில் பெரிதும் பன்முகப் படுத்திய முறையில் தொழிற்படக் கூடும். இவ்விரு கருப்பொருள்களும் பின்வரும் பிரிவுகளில் ஆராயப்பட்டுள்ளனவும் மேலே கூறப்பட்டனவுமான துணைக்கருப் பொருள்களின் கீழ் தொகுக்கப்பட்டுள்ள பிரச்சினைத் தொகுதிகள் ஒவ் வொன்றுக்கும் ஏற்புடையன.


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# 3.1 அரசியலமைப்புப் பிரச்சினைகள்: பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் அதிகாரங்களைப் பகிர்ந்தளித்தல்

முன்னர் ஆராயப்பட்டவாறு அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வுக்கான பிரதான தடைகளில் ஒன்று வலிதாக்கப்பட்ட ஓர் ஒற்றையாட்சி அரசென்ற கட்டுப்படுத்தும் சட்டகத்தின் கீழ் பதின்மூன்றாவது திருத்தம் தொழிற்படுகின்றதென்பது. இதன் ஓர் அம்சம், தேசியப் பாராளுமன்றம் அதன் சட்டவாக்க அதிகாரத்தை துறத்தலோ, எந்தவிதத்திலும் பராதீனப்படுத்துதலோ ஆகாது என்பதுடன், ஏதேனும் சட்டவாக்க அதிகாரம் கொண்ட ஏதேனும் அதிகார சபையான மாகாண சபைகளுக்கு ஏற்பாடு செய்கின்ற 154எ உறுப்புரையுடன் ஒத்திருப்பதாகத் தோன்றவில்லையெனச் சுட்டிக்காட்டப்பட்டது. இப்புறக் கட்டுப்பாடுகளினுள் தொழிற்படுவதனாலும், பதின்மூன்றாவது திருத்தம் அரசியலமைப்புடன் ஒத்திருப்பதாகப் பொருள்கொள்ளும் வகையில் பதின்மூன்றாவது திருத்தம் தொடர்பான வழக்கில் உயர்நீதிமன்ற நீதிபதிகளில் பெரும்பான்மையினர் எடுத்த அதிகாரப் பகிர்வு பற்றிய குறுகிய நோக்கினாலும் மாகாண சபைகளினால் அதிகாரங்களின் பிரயோகம், முரண்பாடான ஒரு சந்தர்ப்பத்தில் மத்திய அரசாங்கத்துக்கு மட்டும் சாதகமாகத்தீர்க்கப் படக்கூடிய, ஓர் அரசியலமைப்பு ஐயப்பாட்டுடன் தொடங்குகின்றது நிறைவேற்று அதிகாரத்தை (அத்துடன் பகிர்ந்தளிப்பு வாய்ப்புக்களுக்கான ஆதரவை) மையப்படுத்துகின்ற 1978 அரசியலமைப்பின் கீழ் மிதமிஞ்சிய வல்லமையுள்ள சனாதிபதிப்பதவி ஒத்திசைவான அதிகாரப்பகிர்வு முறைமைக்குப் பகையானதென்ற கருத்தும் நிலவியது. அதிகாரப்பகிர்வுக்கும் மாகாண சுயாட்சிக்கும் ஒரு முக்கிய இடர்பாடாக ஒருங்கியை நிரல் காணப்பட்டது. ஒருங்கியை நிரலில் கூறப்பட்ட விடயங்கள் மீதான சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரம் மத்திய அரசாங்கத்துக்கும் மாகாணங்களுக்குமிடையில் பகிர்ந்து கொள்ளப்படுதலை உறுதிப்படுத்த முனைகின்ற அரசியலமைப்பு ஏற்பாடுகள் எப்படியிருந்தாலும், அரசியலமைப்பின் வேறு ஏற்பாடுகளும் (எடுத்துக்காட்டாக உறுப்புரை 76 மற்றும் மேலும் குறிப்பாக மாகாணச் சட்டங்களுக்கு மேல் தேசியச் சட்டங்களுக்கு முந்து தலைமை வழங்குகின்ற உறுப்புரை 154எ) அதேபோன்று ஒருங்கியை அதிகாரங்களின் பிரயோகம் தொடர்பில் இரு தசாப்தங்களுக்கு மேலாக மத்திய அரசாங்கத்தின் நடைமுறையும், மாகாண சபைகள் அவ்வதிகாரங்களை அர்த்தமுள்ளமுறையில் அனுபவிக்க இயலாதவையெனக் காட்டியுள்ளன.

ஒருங்கியை நிரலின் துர்ப்பிரயோகத்துக்கான உதாரணங்கள் மத்தியில் கல்வி என்ற விடயம் முனைப்பாயுள்ளது. மாகாண நிரலின் இனம் 3 ‘கல்வியும் கல்விச் சேவைகளும்’, மாகாண நிரலின் பின்னிணைப்பு III இல் தரப்பட்டுள்ள அளவுக்கு, ஒரு மாகாண விடயமெனத் தாபிக்கின்றது. ஒருங்கியை நிரலின் இனங்கள் 2 மற்றும் 3 ‘கல்வியும் கல்விச் சேவைகளும்’ஓர் ஒருங்கியை விடயமெனவும் ஏற்பாடு செய்கின்றன. எனினும் மாகாண நிரலால் அனுமதிக்கப்பட்ட அளவுக்கு மட்டும்தான் ‘கல்வி’ ஒருங்கியை விடயமென இவ்வேற்பாடுகள் தெரிவிக்கின்ற அதேவேளையில், ‘கல்வி’ யை விரித்துக்கூறுகின்ற அந்நிரலின் பின்னிணைப்பு III ‘குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகள் அல்லாத எல்லா அரச பாடசாலைகளுக்கும் வசதிகளைச் செய்து கொடுத்தல்’ ஒரு மாகாண விடயமாக இருக்குமெனத் தெரிவிக்கின்றது. ‘குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகள்’ (ஏனையவற்றுடன்) அரசாங்கத்தின் கட்டுப்பாடு தேவைப்படுகின்ற ‘தேசிய பாடசாலை’ எதுவென்பது பற்றிய

© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

வரைவிலக்கணம் அங்கில்லை. எனினும் இதன் விளைவாக மத்திய அரசாங்கம், மாகாண சபைகளைக் கலந்தாலோசிக் காமலும் அறிவித்தலின்றியும் புறநிலையான எவ்வித நியாயப் படுத்தலின்றியும் மாகாண சபைகளின் நோக்கெல்லையிலிருந்து அரச பாடசாலைகளைச் சுவீகரிப்பதற்குப் பெரும்பாலும் இவ்வேறுபாடுகளைப் பயன்படுத்தியுள்ளது.

மாகாண அதிகாரங்கள் ஒத்தவகையில் பறித்துக்கொள்ளப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் வைத்தியசாலைகள், கமநலச் சேவைகள், நீர் வளங்கள், சுரங்கவேலை மற்றும் கனிப்பொருள்கள் தொடர்பானவை. அதேபோன்று நிகழ்காலத்தில் நவ நெகும, கம நெகும, நகெனஹிர நவோதய, தசதஹசக் வெவ் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற அரசியல் ரீதியாகக் குறிப்பிடத்தக்க அபிவிருத்தச் செயல்திட்டங்கள் ஒரு தொடர்வரிசையான மாகாண நியாயாதிக்கங்கள் மீது தாக்குகின்றன.

இதுபோலவே, 154ஒ உறுப்புரையினால் மாகாண மேல் நீதிமன்றங்களைத் தாபிப்பதன் ஊடாகக் குறித்தசில நீதித்துறை அதிகாரங்கள் பகிரப்படுகின்ற போதிலும் அதன் பின்னர், குறித்துரைக்கப்பட்ட நிதிப் பெறுமதிக்குக் கூடிய வழக்குகள் மீது நியாயாதிக்கம் கொண்டதாகக் கொழும்பில் தாபிக்கப்பட்ட வர்த்தக மேல் நீதிமன்றமும் மாகாண மேல் நீதிமன்றங்களுக்கிடையில் வழக்குகளை இடம்மாற்றுவதற்குப் பிரதம நீதியரசருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரமும் அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டை மீறுகின்றன.

ஒருங்கியை நிரலின் கட்டமைப்புக் குறைபாட்டுடன் நெருக்கமான தொடர்புடையதுதான் ‘எல்லா விடயங்களினதும் பணிகளினதும் மீதான தேசியக் கொள்கை’ என்ற தலைப்பில் ஒதுக்கிய நிரலிலுள்ள இனம். அது மாகாணங்களுக்குப் பகிரப்பட்ட விடயங்களின் மீது கூட வரையறையற்ற சட்டவாக்க மற்றும் நிறைவேற்று அதிகாரத்தை மத்திய அரசாங்கத்துக்கு அளிக்கின்றதனால் அதிகாரப்பகிர்வுக் கோட்பாட்டுக்கு முற்றிலும் ஒவ்வாததாயுள்ளது. எடுத்துக்காட்டாக மத்திய பாராளுமன்றம் 1991 இன் 4ஆம் இலக்க கமநலச் சேவைகள் சட்டத்தைத் திருத்துவதற்கு அதிகாரப்பகிர்வுக்குக் குந்தகமான முறையில் இவ்வேற்பாட்டின் உதவியை நாடியது. அவ்வாறே 1991 இன் 37ஆம் இலக்க தேசிய போக்குவரத்து ஆணைக்குழுச் சட்டத்தை ஆக்குவதற்கும். அச்சட்டம் பதின் மூன்றாவது திருத்தத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு உரித்தாக்கப்பட்ட நிலவழிப் போக்குவரத்து மீதான அதிகாரங்களுக்குத் தெளிவாக முரணானதாயிருந்தது. இவ்விரு குறித்த அம்சங்களுக்கு மேலதிகமாக பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழான விடயங்களினதும் அதிகாரங்களினதும் பிரிவு பற்றிய பொதுவான அரசிய லமைப்புத் தெளிவின்மையும் சுட்டிக் காட்டப்பட்டது. இதன் விளைவாக பொறுப்புக்கள், அதிகாரங்கள் மற்றும் வளங்கள் மீதான முரண்பாடுகள். சேவைகள் திரும்பச் செய்யப்படுதல், தெரிவு செய்யப்பட்ட தேசிய மற்றும் மாகாண உறுப்பினர்களுக்கிடையில் அரசியல் பிணக்கு (குறிப்பாகத் தேசியப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாகாண சபைகளைத் தமது செயற்களத்தினுள் அத்து மீறுவனவாக நோக்குதல்) மற்றும் மாகாணச் சட்டங்களுக்கும் கொள்கை ஆக்கலுக்கும் மதிப்பளிக்காத மத்திய மனப்பான்மை என்பவை ஏற்பட்டன. மையப்படுத்தலை ஆதரிக்கின்ற அரசியல் கலாசாரத்தின் பின்னணியில் இப்பிணக்குகள் பொதுவாக மத்திய நிறுவனங்களுக்கும் தேசிய மட்ட அரசியல்வாதிகளுக்கும் சார்பாகத் தீர்க்கப்பட்டன. இதன் விளைவுகளாக மாகாண சபைகள், தமது அதிகாரங்களைப் பாதுகாத்துக் கொள்வதிலிருந்து தடுக்கப்படுகின்றன, மாகாண அதிகாரிகளினதும் அரசியல்வாதிகளினதும் மனவுறுதியும் முன்முயற்சியும் ஊறுபடுகின்றது அத்துடன் அதன் மூலம் மாகாண சுயாட்சி கீழறுக்கப்படுகின்றது.

அரசியலமைப்பு முக்கியத்துவமுள்ள மற்றொரு பிரச்சினை உள்ளூராட்சிப் படிவரிசை தொடர்பானது. தேசிய, மாகாண மற்றும் உள்ளூர்ப் படிவரிசைகளுக்கு இடையில் அதிகாரங்களின் பகிர்வு நன்கு வரையறுக்கப்படவில்லையெனவும் தெளிவற்றதெனவும் நிருவாகத்திலும் நிதியிலும் அரசியலிலும் நேரடி மத்திய - உள்ளூர் தொடர்புகள் மாகாண மட்டச் சுயாட்சிக்குத் தீங்கிழைக்கக் கூடியனவெனவும் கருதப்பட்டது.


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

மாகாண சபைகளின் உதவியை நாடாமலேயே மத்திய அரசாங்கம் நேரடியாக உள்ளூர் மட்டத்தில் செயற்படுகின்ற (உண்மையில் சனாதிபதி அதிகாரத்தின் ஒரு நீடிப்பான) பிரதேசச் செயலாளர்கள் முறைமையால் இந்நிலைமை மேலும் சிக்கலாக்கப் படுகின்றது. 1992 இன் 58ஆம் இலக்க அதிகாரங்களின் கைமாற்றம், பிரதேசச செயலாளர்கள் சட்டத்தின் மூலம் இவ்வதிகாரிகள் மாகாண அதிகாரிகளின் கட்டுப்பாடோ மேற்பார்வையோ இல்லாது மாகாண ஆட்ச்சிப்பிரதேசத்தினுள் நிருவாகக் கடமைகளை நிறை வேற்றுகின்றனர்.

இறுதியாக, அரசியலமைப்பின் உரை மூலத்தில் வழமையை விடக்கூடிய கவனஞ்செலுத்தப்படுமென மெய்யாகக் கருதப்படக்கூடிய, அரசியலமைப்பின் திருத்தத்துக்கான சந்தர்ப்பங்களில் தன்னும் பாராளுமன்றம் அதிகாரப் பகிர்வைப் பாதுகாப்பதில் பெரும் அக்கறை காட்டுகின்றதென்பது சந்தேகத்துக் கிடமானதே. எடுத்தக்காட்டாக, பதினேழாவது திருத்தத்தின் மூலம் சுயாதீனமான பொலிஸ் ஆணைக் குழுவை நிறுவுதலானது, உறுப்புரை 154எ(3) இல் விதிக்கப்பட்ட நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவும் மாகாண சபைகளின் கருத்துக்கள் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவும் வேண்டிய ஒரு சந்தர்ப்பமென வாதிடப்படலாம். ஏனெனில் இது மாகாண நிரலில் (பின்னிணைப்பு I) ஏற்பாடு செய்யப்பட்டவாறு பொலிஸ் அதிகாரங்களைப் பாதிக்கின்ற ஒரு விடயமாகும். பதினேழாவது திருத்தத்தின் விடயத்தில் இது செய்யப்படவில்லை.

# 3.2 அரசியல் மற்றும் நிருவாகப் பிரச்சினைகள்: மையப்படுத்திய கலாசாரம்

அரசியலமைப்புச் சட்டகத்தில் அதிகாரப்பகிர்வு தொடர்பான கட்டமைப்புப் பலவீனங்களுக்கு வலுவூட்டுவதாயுள்ளது பணித்துறையினரின் படர்ந்து பரவியுள்ள மையப் படுத்திய கலாசாரம். அரசியல் வாதிகளும் சிவில் சேவையாளர்களும் இதனை வழமையாகக் கடைப்பிடிப்பதுடன் தேசிய மட்டத்தில் நீதி மன்றங்களும் அவ்வாறே. ஒருங்கியை நிரல் மற்றும் தேசியக் கொள்கை வாசகம் என்பவற்றின் ஊடாகப் பகிரப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் எடுத்துக்கொள்ளப்படுவதற்கும், பொதுவில் நீதி மன்றங்களின் மத்திக்குச் சார்பான போக்கிற்கும் மேலதிகமாக மாகாணங் களின் சுயாட்சியைக் கீழறுப்பதற்கும் பயன்பட்ட வேறும் அனேக அம்சங்கள் முனைப்படுத்திக் காட்டப்பட்டன. பொது நிருவாகமும் சட்டவாக்கமும் என்ற அகல்விரிவான துறை மீதான மத்திய தலையீடுகளில், அவை பகிரப்பட்ட கடமைகளையும் அதிகாரங்களையும் தெளிவாகப் பாதித்தாலும் கூட, பொதுவில் மாகாணங்களுடனான கலந்தாலோசனை யின்மையும் ஒத்திசைவின்மையும் காணப்பட்டது. சட்டவாக்க நடவடிக்கை தவிர, நிருவாகத் தீர்மானம் எடுத்தலிலும் கூடத் தேசிய சிவில் சேவையாளர்கள் மாகாணங்களின் தேவைகளையும் விருப்புக்களையும் கருத்துக்களையும் பெரும்பாலும் தள்ளிவிடுபவர்களாக, இம்மனப்பான்மை பரவியிருந்தது. இது குறிப்பாக, மாகாண விருப்புக்களைக் கவனியாது மத்திய அரசாங்கம் செயற்பட மத்திய முகாமைத்துவ சேவைகள் சபையின் பணிப்புரைகளிலும், மாற்றுப்பதவியில் அமர்த்தப்பட்ட

அலுவலர்களின் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டிலும் வெளிப்படுத்தப்பட்டது. மத்திய பொது நிருவாக அமைச்சின் சுற்றறிக்கைகள், மாகாண நிலைமைகளையும் தேவைகளையும் பெரும்பாலும் விளங்கிக் கொள்ளாதனவாக இருந்ததுடன் நிருவாகச் சுற்றறிக்கை யென்ற சாதனத்தினூடாக மத்திய நிரை அமைச்சுக்களின் அதிகார எல்லையை விரிவடையச் செய்கின்ற விளைவையும் கொண்டிருந்தன. அதிகாரப்பகிர்வின் மீது இச்சுற்றறிக்கைகளின் தாக்கம் பொதுவாகப் பாராளுமன்ற நுண்ணாய் விலிருந்து தப்பிவிட்டதுடன் அரிதாகவே நீதிமுறை மீளாய்வுக்கும் உட்பட்டது.

தொடர்டபுடைய ஒரு பிரச்சினைதான் மத்தியிலுள்ள நிறைவேற்றுக் கிளையின் கட்டமைக்கப்பட்ட நிறுவனம். இது அமைச்சுக்களின் விடயத்தில் முற்றுமுழுதாக சனாதிபதியின் அரசியல் தற்றுணிபில் தங்கியிருந்தது. இதற்கு எடுத்துக்காட்டாக, தற்போதைய தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சின் வர்த்தமானப்படுத்திய விடயங்கள் பகிரப்பட்ட விடயங்களின் மீதான மாகாண சுயாட்சியைத் திட்டவட்டமாக மீறுகின்றன. ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையின் விடயத்தில் உள்ளவாறு, புதிய மத்திய திணைக்களங்களின் உருவாக்கம் ஒன்றில் மாகாண சுயாட்சியைக் கவனிக்காமலும் மாகாண நிரலைப் புறக்கணித்தும் இன்றேல் பகிரப்பட்ட அதிகாரங்களை திட்டமிட்டு மத்திக்கு மீளக்கோருவதற்காகச் செய்யப்பட்டுள்ளது. ஒத்தவகையில் வெளிநாட்டு நிதியுதவியுடனான பெரிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மீதான அதிகார எல்லையையும் அவற்றைச் செயற்படுத்துவதற்கான ஆற்றலும் மாகாணங்களுக்கு இருந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது மத்திய அரசாங்கம் பொதுவில் அவற்றைச் செயற்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்குமான பொறுப்பை எடுத்துக் கொண்டது. அதுபோலவே நவநெகும, கமநெகும, நகெனஹிர நவோதய மற்றும் தசதஹசக் வெவ் போன்ற அரசியல் முக்கியத்துவமுள்ள விசேட நிகழ்ச்சித திட்டங்களும் இதன் அரசியல் பரிமாணம் என்னவெனில் குறிப்பாகத் தேசிய மட்ட அரசியல்வாதிகள் இச்செயல் திட்டங்களுக்கான புகழைக் கோரலாமென்பது. வாக்காளர் தொடர்பான அரசியல் பற்றிய சனநாயகத் தருக்கத்தினுள் மையப்படுத்தலென்ற அரசியல் கலாசாரத்தை நீடித்திருக்கச் செய்வதில் இது ஒரு முக்கியமான அம்சமாயிருந்தது.

இதன் தொடர்பில் மற்றொரு குறிப்பிடத்தக்க காரணி அரசியற் கட்சிகளினுள் காணப்படும் அமைப் புரீதியான கட்டமைப்பும் கலாசாரமும். இவை கடுமையான தலைமைத்துவ மையத்தையும் செல்வாக்கையும் ஆதரவு அடிப்படையையும் கொண்டனவென்பதுடன், கட்சியினுள் பயனுறுதியுள்ள சனநாயகம் ஒருபுறமிருக்க, மாகாணங்களின் ஊடான அதிகாரப் பகிர்வுக்கான அரசியலமைப்புச் சட்டகத்தைப் பிரதிபலிக்கின்றதும் ஊக்குவிக்கின்றதுமான ஒரு முறையிலான உள்ளக அமைப்பில் அக்கறையற்றனவாகவும் இருந்தன. பெரும்பாலும் பொதுவில் மாகாண மட்டம் அரசியல் குறிக்கோளுக்கான ஒரு குவிமையமாக நோக்கப்படுதலைவிட, தேசிய அரசியலுக்கான ஒரு வளர்ச்சிப் படியாகத்தான் காணப்பட்டது. இதன் விளைவாக மாகாண மட்டத்தில் தாழ்வு அல்லது போதாமையென்ற உணர்வுள்ளது. திறமை மையத்தை நோக்கி ஈர்க்கப்படுகின்றது. மேலும் மாகாண நிறுவனங்களில் மக்களின் எதிர்பார்ப்பு அல்லது நம்பிக்கை இல்லாதுள்ளது. சிவில் சேவையின் பண்பாண்மை தொடர்பிலும் இதுவே உண்மை.

இச்சூழமைவில், அரசியலமைப்பின் உரைமூலத்தில் ஏற்பாடு செய்யப் பட்டதற்கும் அவ்வேற்பாடுகள் உண்மையில் எவ்வாறு செயற்படுத்தப் படுகின்றனவென்பதற்கும் இடையில் வெளிப்படையான ஏற்றத்தாழ்வுடன், பதின்மூன்றாவது திருத்தத்தால் எதிர்பார்க்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான (அத்துடன் கட்டமைப்புக் குறைபாடுள்ள) அதிகாரப் பகிர்வைத் தன்னும் மெய்யாகக் காணுதல் கஷ்டமானதாயுள்ளது.


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# 3.3 அரசிறை வருமான மற்றும் நிதிப் பிரச்சினைகள்: கட்டமைப்புக் குறைபாடுகளும் நடமுறை அனுபவமும்

மாகாணக் கண்ணோட்டத்தில் பதின்மூன்றாவது திருத்தத்துக்கான ஒரு பிரதான கண்டன மூலம் அதன் இறைவரி வருமான மற்றும் நிதிச் சட்டகம் தொடர்பானது. அதிகாரப் பகிர்வுக்கு நிதி வழங்குகின்ற இக்குறிப்பிட்ட சட்டகம் கட்டமைப்புரீதியாகப் போதாததும் அர்த்தமுள்ள மாகாண சுயாட்சிக் கருத்தெதற்கும் ஏற்புடையதல்ல வென்பதும் எல்லா மாகாணங்களினதும் மாறாத அனுபவமாயுள்ளது.

அரசியலமைப்புச் சட்டகம் மாகாண சபைகளின் வருவாயைத் திரட்டும் ஆற்றலைக் கடுமையாகக் கட்டுப் படுத்துக்கின்றது. மாகாணங்களுக்கு உரித்தாக்கப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வரி திரட்டும் அதிகாரத்துடன் சேர்ந்தனவாக வருவாயைச் சேகரிப்பதிலும், கடன்களையும் முதலீட்டையும் பெறுவதிலும், வெளிநாட்டு உதவியாலும் முதலீட்டாலும் நிதியிடப்படும் கருத்திட்டங்களை நாடுவதிலும் அல்லது குறைந்தபட்சம் அவற்றை நிர்வகிப்பதிலும் விதிக்கப்பட்டகட்டுப்பாடுகள் உள்ளன. மாகாணங்களுக்குத் தேவையான வருவாயைத் திரட்டும் அதிகாரங்களின்றி செலவினப் பொறுப்புக்களை (அதாவது, மாகாண நிரலிலுள்ள விடயங்கள்) அவற்றுக்கு உரித்தாக்குவதன் மூலம் உருவாக்கப்படும் கட்டமைப்புச் சார்ந்த நிலைக்குத்தான வேறுபாட்டை நிவர்த்திசெய்வதற்கான வழிகளையும் முறைகளையும் அரசியலமைப்பு போதியளவு குறித்துரைக்கவில்லை. மாகாணங்கள் தமது செலவினப் பொறுப்புக்களைப் பூரணமாக நிறை வேற்றக்கூடியதாக மத்தியால் போதிய வளங்கள் மாகாணங்களுக்கு வழங் கப்படுதலை உறுதிப்படுத்துவதற்குப் பயனுறுதியுள்ள முறைமையொன்று இருந்தால் மட்டும்தான் மத்திய மானியங்கள் மீதான சார்புநிலையை நியாயப்படுத்த முடியும். இவ்வாறு ஒரு போதும் நடப்பதாகத் தோன்றவில்லை என்பதுடன் மாகாணங்கள் குறிப்பிட்ட நிதியாண்டினுள் மீண்டுவருஞ் செல வினங்களைத் தன்னும் முழுமையாகச் சந்திக்க முடியாத ஒரு நிதி நெருக்கடியை என்றென்றும் எதிர்நோக்குகின்றன. மாகாணத்துக்கு இன்றியமையாத வற்றில் (சேமிப்புகள் மற்றும் முதலீடு உட்பட) நிதி முடிவுகளை எடுப்பதற்கு மாகாணங்களுக்கு மிகக் குறைவான அதிகாரங்களே உள்ளன. மாகாணத்தின் நிதி அமைச்சருக்கு ஒத்தவாராக ஆளுநரை ஆக்குகின்றதாக, மாகாண நிதி தொடர்பில் வழமைக்கு மாறான பரந்த அதிகாரங்கள் (சனாதிபதியின் ஒரு நியமத்தரான) ஆளுநருக்கு உரித் தாக்கப்பட்டுள்ளதன் மூலம் இந்நிலைமை மேலும் கடுமையானதாக்கப்பட்டுள்ளது.

முறைபாடுள்ளதும் நடைமுறைக் கொவ்வாததுமான இச்சட்டகத்தைச் சுற்றி முறைசாராவகையில் விருத்தியடைந்துள்ள நிருவாக நடைமுறைகள் மாகாண சபைகளின் நிதி நலநிறைவை மேலும் வெறுமையாக்குவதற்கும் அதன் மூலம் அர்த்தமுள்ள அதிகாரப்பகிர்வை மறுப்பதற்கும் பயன்பட்டுள்ளன. வரி விகிதத்தின் மாறுபாட்டுக்கு (சிறு வரிகள் மீது) மாகாணங்களுக்கு அனுமதிக்கப்பட்ட மட்டுப்படுத்திய நியதிச்சட்ட அதிகாரம் மத்திய திறைசேரியால் மேலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நிதி ஆணைக்குழுவின் விதப்புரைகள் வெறும் வழிகாட்டல்களேயன்றிக் கட்டளை யானவையல்லவென்ற நிலைப்பாட்டைத் திறைசேரி நிலைமாறாது எடுத்துள்ளதன் விளைவாக அது நிதி ஆணைக்குழுவால் மாகாணங்களுக்கு விதந்துரைக்கப்பட்ட நிதிகளை விடக் குறைந்த நிதிகளைத்தான் எப்போதும் விடு விக்கின்றது. மேலும் திறைசேரி இறுதிச் செலவழிப்புகளிலிருந்து ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை நிதிச் சேவைக்

கட்டணமாகவும் பிடித்துக்கொள்கின்றது. ஒதுக்கப்பட்ட நிதிகள் விடுவிக்கப்படாத சந்தர்ப்பங்கள் உள்ளனவென்பதுடன் நடுத்தவணையில் இடைநிறுத்தப்பட்ட சந்தர்ப்பமும் உள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான நிதி ஏற்பாடு தாபிக்கப்பட்ட நிதியிடல் ஒழுங்குகளின் வேறுபாட்டின் நிமித்தமும் முறையற்ற விதத்தில் சிக்கலாகியுள்ளது. மாகாணநிரல் உள்ளூராட்சி அதிகார சபைகள் மீது மாகாண மேற்பார்வைக்குத் தெளிவாக ஏற்பாடு செய்தபோதிலும் மத்தியின் நிதி நிபந்தனைவிதிப்புகள் மாகாணப் பங்கைக் கீழறுக்கும் விளைவைக் கொண்டிருந்தனவென வாதிடப்பட்டது.

நிதி ஆணைக்குழு மாகாணங்களின் நிதித் தேவைகளில் போதிய கவனம் செலுத்துவதில்லையென்றும், மாகாணங்களுக்குப் பிரதிநிதித்துவமோ ஆணைக்குழுவை அணுகுவதற்கான வாய்ப்போ இல்லையென்றும், மாகாணங்களின் நலன்களுக்காக மத்திய திறைசேரியின் கட்டளைகள் மீது அதனால் செல்வாக்குச் செலுத்த இயலாதுள்ள தென்றும், பொதுவில் அது மாகாணங் களுக்கிடையிலான பரந்த பொருளாதார ஏற்றத்தாழ்வுகளில் போதிய கவனஞ் செலுத்தவில்லையென்றும் பொதுவாக உணரப்பட்டது. நிதி ஆணைக்குழு மாகாணப் பிரதிநிதித் துவத்தைக் கொண்டிருப்பதற்கும், அதன் விதிப்புரைகளைச் செயற்படுத்துவதற்குக் கூடிய அதிகாரங்களைக் கொண்டிருப் பதற்கும், மாகாணங்களுக் கிடையிலான பரந்த பொருளாதார மற்றும் அபிவிருத்தி ஏற்றத்தாழ்வுகளில் ( அதாவது கிடையான வேறுபாடுகள்) கவனஞ் செலுத்துவதற்கான அதன் ஒப்பானதாக்கும் ஆணையை மேலும் சிறந்த முறையில் நிறை வேற்றுவதற்கும் அது மீளமைக்கப்பட வேண்டுமெனக் கருதப்பட்டது.

போதாத அல்லது கோட்பாடில்லாத நிதி ஒழுங்குகளின் செல்லரிக்கும் விளைவினால் மாகாண சேவை வழங்கல் ஊறுபடுவதுடன் அரசியலமைப்பினால் தாபிக்கப்பட்ட சனநாயக நிறுவனங்களில் பொதுமக்களின் நம்பிக்கை அளிக்கப்படு வதற்கும் வழிவகுக்கப்படுகின்றது. இது எதிர்கொள்ள வேண்டிய முக்கிய சவாலாயிருந்தது. பதின்மூன்றாவது திருத்தத்தின் கீழ் எண்ணிப்பார்க்கப்பட்ட அதிகாரப் பகிர்வைத் தவிர மேலும் ஏதேனும் முன்மொழியப்படாது விட்டாலும், இந்த அதிகாரப் பகிர்வுத் திட்டம் தன்னும், மோசமானதும் நடைமுறைக் கொவ்வாததுமான நிதி ஒழுங்குகளின் நிமித்தம் முழுமையாகத் தோல்வியடையுமென்பதுதான் அதன் விதி.

## 3.4 மாகாண ஆட்சிமுறை: கட்டமைப்பு மற்றும் அரசியல் பிரச்சினைகள்

இக்கலந்தாராய்வுகள் பதின்மூன்றாவது திருத்தத்தால் மாகாணங்களுக்கெனத் தாபிக்கப்பட்ட அரசியலமைப்பு ஏற்பாடுகளினுள் அரசியல் மற்றும் நிருவாக நடைமுறைகள் மீது கண்டனரீதியான கருத்துக் குவிப்பையும் உருவாக்கின.

மாகாண ஆட்சிமுறையின் கட்டமைப்பு அம்சங்களில் நிதிதொடர்பில் ஆளுநரின் பங்கு குறிப்பிடத்தக்க கருத்துரையை உருவாக்கியது பெரும்பான்மையான அபிப்பிராயம் இவ்வதிகாரங்கள் (சனாதிபதியின் அறிவுறுத்தல் களுக்கிணங்கச் செயற்படுவதற்கு 154ஊ(1) ஆம் உறுப்புரையால் கட்டுப்படுத்தப்பட்ட சனாதிபதியின் நியமத்தரான) ஆளுநரிடமிருந்து மாகாண சபையின் தெரிவுசெய்யப்பட்ட


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

உறுப்பினரொருவருக்கு மாற்றப்படுவதற்குச் சாதகமானதாயிருந்தது. மேலுமொரு கருத்து, அரசியல் மட்டத்தில் மாகாண நிருவாகம் எவ்வாறு ஏனைய உறுப்பினர்களுக்கு எவ்வித பங்குமில்லாமல் முதலமைச்சரினதும் அமைச்சர்கள் சபையினதும் கரங்களில் செறிந்துள்ளதென்பது தொடர்பானது. இதன் தொடர்பில் 154(ஊ)(1) ஆம் உறுப்புரையில் அமைச்சர்கள் சபை நான்கு உறுப்பினர்களாக இருக்க வேண்டுமென்ற வரையறை முறையின்றிக் கட்டுப்படுத்துகின்றதெனக் கருதப் பட்டதுடன் ஏழு உறுப்பினர்கள் கூடிய பொருத்தமான ஓர் எண்ணிக்கையென்ற கருத்தும் நிலவியது.

பொலிஸ் மற்றும் சட்டமும் ஒழுங்கும், காணி, கல்வி, அரசிறை வருமானக் கொள்கை என்பவற்றின் மீதான அதிகாரங்கள் உட்பட, அரசியலமைப்பின் உரை மூலத்தில் மாகாணங்களுக்கும் பகிரப்பட்ட எல்லா அதிகாரங்களும் நடைமுறையிலும் பகிரப்பட்டனவாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் மிகப்பரவலாயிருந்தது. இவ்விடயம் தொடர்பில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழு தன்நிலையான அரசியலமைப்புச் சீர்திருத்தத்துக்கான அதன் முன் மொழிவுகளைத் தயாரிக்கும் அத்தகைய காலம்வரை அக்குழுவின் 2008 சனவரி 23ஆந் தேதிய இடைக்கால அறிக்கைக்கிணங்கப் பதின்மூன்றாவது திருத்தம் முழுமையாகச் செயற்படுத்தப் படுமென்ற தற்போதைய அரசாங்கத்தின் குறித்துரைக்கப்பட்ட கொள்கையை அனேக பங்கேற்பாளர்கள் குறிப்பிட்டனர். அஃதன்றியும், பொலிஸ் மீதும் காணி மீதுமான அதிகாரங்கள் உறுதியளிக் கப்பட்ட கிழக்கு மாகாண சபையின் தேர்தலையும் தாபித்தலையும் தொடர்ந்து தாக்கவிளைவொன்று ஏற்படுமென்றும் அவ்வழியினூடாக ஏனைய மாகாண சபைகளும் அவ்வதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கு இயலச்செய்யப் படுமென்றும் பொதுவான நம்பிக்கை காணப்பட்டது.

மற்றொரு பிரச்சினை அரசாங்கங் களுக்கிடையிலான தொடர்புகளை நடத்துவதற்கு முறைப்படியான (அல்லது செயல்விளைவுள்ள முறைசாராத) பொறிமுறைகள் இல்லாமை. அதிகாரம் பகிரப்பட்ட ஓர் அரசியல் முறைமைக்கு ஒத்திசைவுக்கும் ஒத்துழைப்புக்கும் கலந்தாலோசனைக்குமான வழிகளும் முறைகளும் தேவைப்படுகின்றன. இதற்குப் பதின்மூன்றாவது திருத்தம் ஏற்பாடுசெய்யவில்லை. பல படிவரிசை முறைமையொன்றில் சீரான நிருவாகத்துக்கு அத்தியாவசியமான அரசாங்கங்களுக்கிடையிலான உத்தியோகபூர்வ மற்றும் அரசியல் தொடர்புகளுக்கு ‘முதலமைச்சர்களின் மாநாடு’ போன்ற தனிப்பட அமைந்த பொறிமுறைகள் போதாதவையெனக் காணப்பட்டன. குறிப்பாக, தீர்மானம் எடுக்கின்ற மத்திய அரங்குகளில் மாகாண நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கான முறைகள் உருவாக்கப்படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டது.

ஆராயப்பட்ட தெரிவுகள் பாராளுமன்றத்தின் இரண்டாவது அவையொன்றில் தொடங்கி, மத்திய அமைச்சரவைக்கு முதலமைச்சரின் வரவு மற்றும் தனிப்படவன்றி விசேடமாக நிதி விடயங்களில் அதிகாரிகளின் மாநாடுகளை ஒழுங்குமுறைப் படுத்துதல் வரையான வீச்சைக் கொண்டிருந்தன. இவற்றில் பெரிதும் விரும்பப்பட்ட தெரிவு. ஓரளவுக்கு அதற்கு அரசியலமைப்புத் திருத்தமெதுவும் தேவைப்படாதென்ற காரணத்தினால், அமைச்சரவைக்கு முதலமைச்சர்களின் வரவாகும். எவ்வாறாயினும் சில முதலமைச்சர்கள் அவ்வாறு வரும்படி, எனினும் ஓர் அவதானிபாளரென்ற கோதாவில், ஏற்கனவே அழைக்கப்பட்டனரென வெளிப்பட்டது. ஆயின் அது மாகாண நலன்களைப் பாதிக்கின்ற முடிவுகளை மாற்றுகின்ற நோக்கத்துக்குப் பயன்படவில்லை. நிறுவனங்களுக் கிடையிலான ஒத்திசைவும் கலந்தா லோசனையும் பற்றிப் பரந்த அளவில் கருதப்பட்ட ஒரு தொடர்புடைய அக்கறை நிதி ஆணைக்குழுவில் மாகாணப் பிரதிநிதித்துவமும் அதனை அணுகு வதற்கான வாய்ப்பும். மாகாணங் களுக்கும் நிதி ஆணைக்குழுவுக்கும் இடையில் முறைப்படியான ஒரு தொடர்புப் பொறி முறை ஆணைக்குழுவின் பணியையும் விதப்புரைகளையும் மேம்படுத்தக் கூடுமென்பதுடன் ஒதுக்கீடுகள் மீதான மத்திய திறைசேறியின் தற்றுணிபைக் கட்டுப்படுத்துவதற்கும் பயன்படும்.

மாகாண நிதி நிருவாகம் மீள ஒழுங்கமைக்கப்பட வேண்டியதன் தேவையும் இதன் தொடர்பில் கொள்கைத் திட்டமிடலுக்கும் வரவு செலவுத் திட்டமிடலுக்கும் இடையில் கூடிய செயல்முறை சார்ந்த பிரிவினையும்

உணரப்பட்டது. நிதி அறிக்கையிடும் முறைகளும் அவ்வாறே மீண்டுவரும் மற்றும் மூலதனச் செலவினக் கணக்குகளை ஒருங்கிணைப்பதன் நன்மைகளும் ஆராயப்பட்டன. ஒரு தொடர்புடைய கருத்து, இது நிதி விடயங்களில் கூடிய முடிவெடுக்கும் தன்னுரிமைக்கான விருப்பத்துடனும் தொடர்புடையது, அரசாங்கச் சேவை வழங்கலின் புதிய வடிவங்களில் தனியார்துறையின் குறைபயன்பாடாகும். மேலும் இரண்டு பொதுவான விடயங்கள் குறிப்பிடத்தக்கவை. ஒன்று, படர்ந்து பரவியுள்ள மையப்படுத்தலென்ற அரசியல் கலாசாரத்திலிருந்து பிறந்ததான, மாகாண சிவில் சேவையாளர்களாலும் அரசயில் வாதிகளாலும் புலனால் காணப்படும் 'கீர்த்தி' இன்மை. குறைவின்றி இப்புலக் காட்சி அவர்களின் தேசிய மட்டச் சரியிணையானவர்களால் வலியுறுத்தவும் பரப்பவும்பட்டது. ஏதோ ஒரு வகையில் மாகாணங்கள் தேசிய மட்ட நிறுவனங்களுக்கு அந்தஸ்திலும் தரத்திலும் கீழ்ப்பட்டனவாகக் காணப்பட்டமை மனவுறுதி தொடர்பிலும் தன்னம்பிக்கை தொடர்பிலும் சவால்களை உருவாக்கியது.

இது அதன் போக்கில் மாகாண நிருவாகத்தின் துடிப்பாற்றலையும் செயல் திறமையையும் பாதித்ததுடன் பொது மக்களின் பாதகமான புலக்காட்சிகளுக்கும் மாகாண நிறுவனங்களில் பொது மக்களின் நம்பிக்கை அளிக்கப்படுவதற்கும் பங்களித்தது. கடுப்புடன் கூறப்பட்ட நெருக்கமான தொடர்புடைய மற்றொரு பிரச்சினை மாகாண விடயங்களிலும் ஆட்சிமுறையிலும் ஊடகங்களின் அக்கறையின்மை. பொதுமக்களின் அபிப்பிராயத்தை உருவாக்குகின்ற ஒரு விமர்சனச் சாதனமான ஊடகங்கள் (கூடிய சனநாயகமயமாக்கலுக்கும் இயலுமாயின் முரண்பாட்டுத்தீர்வுக்கும் ஆதாரமான) அரசாங்கத்தின் ஒரு முக்கிய மட்டமானதாக இருக்கின்ற ஒன்றில் பொருத்தமான கவனஞ் செலுத்தும் தனித்துவமான ஒரு பொறுப்பைக் கொண்டுள்ளனவென்றும் ஆனால் ஊடகங்கள் அதன்விடயத்தில் பொதுவாகப் பராமுகமானவையாகவும் கவலையற்றவையாகவும் இருந்துள்ளன வென்றும் கருதப்பட்டது.

இறுதியாக, மேல்மாகாணம் எதிர்நோக்கிய ஒரு தனித்துவமான பிரச்சினை 'நாளாந்தம் வந்துபோகும் ஒரு சனத்தொகை' ஆல் ஏற்படுத்தப்பட்ட சவால்களாகும். பெருந் தொகையான ஆட்கள் தலைநகரத்தில் வேலைக்காகவும் கல்விக்காகவும் வேறு அலுவலுக்காகவும் நாளாந்தம் மாகாணத்தினுள் வந்துபோகின்றனர். ஆனால் அவர்கள் மாகாணத்துக்கு வெளியே வசிப்பதனால், வரி செலுத்தாதவர்களான அல்லது மத்தியால் மாகாணத்துக்கு வளங்கள் ஒதுக்கப்படும் போது கணக்கில் கொள்ளப்படாதவர்களான பெருந்தொகையான ஆட்களுக்கு மாகாண அரசாங்க சேவைகளை வழங்க வேண்டிய பிரச்சினை எழுகின்றது. இது ஒன்றில், தனிப்பட மேல் மாகாணத்துக்கு விசேட வரி விதிப்பு வடிவங்களை அனுமதிப்பதன் மூலம் இன்றேல், இக்காரணியைக் கவனத்தில் கொண்டு செய்யப்படும் மேலதிக மத்திய ஒதுக்கீடுகள் மூலம் தீர்க்கப்படவேண்டும்.

## 3.5 செயலாற்றல் பிரச்சினைகள்:

### மனித வளங்களும் நிருவாகத் திறன்களும்

இலங்கையில் பொது நிருவாகத்தை அல்லற்படுத்துகின்ற பரிச்சயமான செயலாற்றல் பிரச்சினைகளில் அனேகமானவை மாகாண மட்டத்திலும் எதிர்நோக்கப்படுகின்றன. ஆயின், ஒருவேளை, தேசிய மட்டத்தை விடக் கூடிய கூர்மையாக குறிப்பான மனித வளப் பிரச்சினைகள் ஆட்சேர்ப்பு, மாற்றுப் பதவி அமர்த்தப்பட்ட அலுவலர்கள் மீதான கட்டுப்பாடு மற்றும் சம்பளங்கள் தொடர்பானவை. பொருத்தமான பணியாளரின் ஆட்சேர்ப்பு பணியாளரை அமர்த்தும் முடிவுகளை எடுப்பதற்கான நிதிச் சுயாட்சி இல்லாமையின் நிமித்தம் கஷ்டமானதாக்கப்படுகின்றது. மேலும் தகுதியுள்ள பணியாளரைத் தொடர்ந்து வைத்திருத்தல், சம்பளங்களின் கொடுப்பனவில் தாமதங்கள் போன்ற தொடர்ந்து வருகிற பிரச்சினைகளின்


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

நிமித்தம் கஷ்டமானதாயுள்ளது. இதனால் இளைப்பாறிய அலுவலர்களை ஒப்பந்த அடிப்படையில் தற்காலிகமாகச் சேர்த்துக்கொள்ளல் போன்ற தனிப்பட அமைந்த தீர்வுகள் அவசியமாகின்றன. இதன் விளைவாக நிறுவன ரீதியான செயலாற்றலும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தையும் அனுபவத்தையும் உருவாக்குதலும் பாதிக்கப்படுகின்றன. விசேட நிபுணத்துவமுள்ள அலுவலர்கள் மத்தியால் விடாது வைத்திருக் கப்படுகின்றனர். மாற்றுப்பதவி அமர்த்தப்பட்ட அலுவலர்கள் அறிக்கையிடுவதற்கும் அவர்களின் மேற்பார்வைக்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்குமான நடைமுறை தொடர்ந்தும் மத்தியிடம் இருப்பதுடன் அவர்கள் எவ்வேளையிலும் மத்தியால் திருப்பியழைக்கவும்படலாம். பௌதீக உட்கட்டமைப்பிலுள்ள நீடித்த குறைபாடுகள் செயல் நிறைவேற்றத்தைக் கஷ்டமானதாக்குவதுடன் மட்டுமன்றி வெளிப்படையான மனிதவளப் பாதிப்புக்களையும் கொண்டுள்ளது.

மாகாணங்களுக்கு எள்ளளவும் போதிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயலாற்றல் இல்லையென்பதுடன் கொள்கை வகுப்பதற்கும் திட்டமிடுவதற்கும் இன்றியமையாத புள்ளிவிவர மற்றும் தரம்மிகுந்த தகவல்களை உருவாக்குவதற்கும் பேணுவதற்குமான ஆற்றலுமில்லை. மற்றுமொரு பிரச்சினை அரசகருமமொழிக்கொள்கையைச் செயற்படுத்துதல் தொடர்பானது. ஓர் உயர் மட்ட இன மற்றும் மொழிப் பன்மைத்தன்மையைப் பண்பாகக் கொண்ட மாகாணங்களில் தன்னும், தமக்கு விருப்பமான அரசகரும மொழியில் அரசாங்க நிறுவனங்களுடன் அலுவல் நடத்தும் உரிமை ஒவ்வொரு பிரசைக்கும் உண்டென்ற கடப்பாட்டை நிறைவேற்றும் ஆற்றல் மாகாண சபைகளுக்கு இல்லை. அதனைச் செய்வதற்கான அரசியல் அதிகாரத்துறையின் விருப்பம் இருக்கிமிடத்தும் கூட ஆற்றலின்மை செயற்படுத்தலை தடுக்கின்றது.

## 3.6 சட்டப் பிரச்சினைகள்:

### சட்ட ஆட்சியின் கீழ் அதிகாரப் பகிர்வு

நீதித்துறைதான் அரசியலமைப்பில் போற்றிப் பேணப்படும் அதிகாரப் பகிர்வால் உத்தரவாதமளிக்கப்பட்ட மாகாண சுயாட்சியின் இறுதி நடுவராகவும் பாதுகாப்பாளராகவும் காணப்பட்டது. எனினும் பதின் மூன்றாவது திருத்தம் சட்டமாக்கப்பட்டதன் பின்னரான இரு தசாப்தங்களில் மாகாண அரசின் நலன்களுக்கெதிராக மாகாண சுயாட்சியை உறுதியாக நிலைநாட்டுவதில் ஆகக்கூடியது ஒரு கலப்பான செயலூக் கத்தைத்தான் காட்டியுள்ளது. ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து பதின்மூன்றாவது திருத்தத்தின் ஏற்பாடுகளுக்குப் பொருள்கொள்வதில் உயர்நீதிமன்றம் மத்திய அரசாங்கத்தையும் அதிகாரத் துறையையும் போன்று அதேயளவு அல்லது மேலும் கூடிய மையப்படுத்தலைச் சார்ந்துள்ளதென்ற கூடிய கண்டனமான கருத்தொன்றும் வெளிப்படுத்தப்பட்டது. இதற்குச் சான்றான ஒரு வழக்குத்தான் 1979இன் 58ஆம் இலக்க கமநலச் சேவைகள் சட்டத்துக்கான திருத்த மொன்றுக்கு, அத்திருத்தம் மாகாண நிரலிலுள்ள பகிரப்பட்ட விடயமொன்றை மீறுகின்றதென்ற அடிப்படையில், 1991 இல் விடுக்கப்பட்ட சவால் அத்திருத்தம் ஒருங்கியை நிரலிலுள்ள ஓர் இனத்தைக் குறிக்கின்றதென்பது மத்திய அரசாங்கத்தின் வாதமாயிருந்தது. எனினும் உயர் நீதிமன்றம் இரு வாதங்களையும் நிராகரித்ததுடன் பதிலாக அத்திருத்தம் உண்மையில் ஒதுக்கிய நிரலிலுள்ள ஒரு விடயத்தைக் குறிக்கின்றதெனவும் கொண்டதன் மூலம் மாகாண சுயாட்சி தொடர்பில் மத்திய அரசாங்கத்தைவிடக் கூடிய எதிர்ப்பான ஒரு மனப்பான்மையைக் கைக்கொள்ளத் தயாராயுள்ளதென்றும் விளக்கிக் காட்டியது. உயர்நீதிமன்றம் அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டின் மீது குறைந்த பட்சம் போதிய கூருணர்வற்ற

தாயிருந்துள்ள அத்தகைய வேறு சந்தா்ப்பங்கள் மேலே ஆராயப்பட்டுள்ளன. மாகாணச் சட்டவாக்க அதிகாரத்துக்கு இடையூறு விளைவித்துள்ள மற்றொரு நடைமுறை, மாகாண சபையால் நிறைவேற்றப்படும் சட்டங்கள் ஆளுநரின் இசைவைப் பெறுவதற்கு முன்னா் சட்டமா அதிபரால் அங்கீகரிக்கப்பட வேண்டுமென (அல்லது சட்ட மா அதிபரின் ஆலோசனை அவசியமென) சில ஆளுநர்களால் விருத்தி செய்யப்பட்டுள்ள நடைமுறையாரும் இது உறுப்புரை 154 ஏ இன் கீழ் ஒரு கண்டிப்பான சட்டத் தேவைப்பாடு அல்ல. மேலும் இது இசைவைத் தாமதப்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. பொதுவாகச் சட்டமா அதிபரின் அபிப்பிராயங்கள் மத்திக்குச் சாதகமான போக்குடையவை என்பதையும் அனுபவம் காட்டியுள்ளது. இது மாகாண சபைகளின் சட்டமியற்றும் செயல் முறையையும் சட்டவாக்கத் தன்னுரிமையையும் கடுமையாகக் கீழறுத்துள்ளது.

உயா்நீதி மன்றத்தினதும் அரசின் சிரேஷ்ட சட்ட அலுவலரினதும் செயலூக்கம் தொடா்பான இந்த அனுபவம், அதிகாரப் பகிா்வுக்கு உத்தரவாத மளிப்பவா்களாக இந்நிறுவனங்கள் மீதிருந்த மாகாண நம்பிக்கையைக் கிடைப்பதாயுள்ள சட்டச் சேவைகளை நோய்வாய்ப்படுத்துகின்றன. வழமையாக ஒரேயொரு சட்ட அலுவலா் மட்டும் இருப்பதனால் சட்ட மொழிபெயா்ப்பு திரும்பத்திரும்பக் காணப்படும் ஒரு பிரச்சினையாயுள்ளது. இச் சூழ்நிலைகளில் அதிகாரப் பகிா்வுக்கான அரசியலமைப்புச் சட்டகம்தானே சந்தேகத்திற்கும் உடன்பாட்டின்மைக்கும் வெளிப்படுத்தப்படுகின்றது.

## 3.7 மாகாணச் சிறுபான்மைகளும் மொழிக்கொள்கையும்: மாகாண சபைகளின் பங்கும் ஆற்றலும்

மாகாண நிறுவனங்களினுள் இனம், சமயம் அல்லது சாதிக் குழுக்களைச் சேர்ந்த பிராந்தியச் சிறுபான்மைகளின் பிரதிநிதித்துவம் தொடர்பிலும் கவலைகள் எழுப்பப்பட்டன. சில சமயங்களில் இக்குழுக்களுக்குத் தோ்தல் தொகுதிப் பிரதிநிதித்துவம் இல்லாததனால், மாகாண மட்டத் தீா்மானம் எடுத்தலில் அவா்கள் கருத்துத் தெரிவிக்கக் கூடியதாக அவா்களை உட்படுத்தும் முறைகளை உருவாக்கவேண்டியது முக்கிய மானதாகவும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டகம் குறித்த முறையில் இவ்விடயத்தில் கவனஞ் செலுத்தாததனால் இது விசேடமாக முக்கியமானது. முன்னா் குறிப்பிட்டவாறு இரு மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கான ஆற்றல் இல்லாமை அனேக மாகாணங்களில் இவ்விடயம் தொடா்பில் குறிப்பிட்ட முக்கியத்துவம் பெறுகின்றது.

## 3.8 மாகாண சிவில் சமுதாயம்: பங்கேற்பு, பதிற்செயலாற்றல் மற்றும் வகைப்பொறுப்பு

கூடிய அதிகாரப் பகிா்வைப் பாதிக்கின்ற ஒரு பரந்த அரசியல் காரணிதான் மாகாண மட்டத்தில் துடிப்பான ஒரு சிவில் சமுதாயம் இல்லாமை. தீா்மானம் எடுத்தலை உள்ளூா்மயப் படுத்துதல், அகப்படுத்திய பிரசைகளின் பங்கேற்பை ஊக்குவித்தல், அரசாங்க நிறுவனங்களின் ஒளிவுமறைவின்மையையும் வகைப் பொறுப்பையும் பதிற்செயலாற்றலையும் உறுதிப்படுத்துதல் ஆகியவற்றை


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# இறுதி யோசனைகள்

13 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் சமர்ப்பிக்கப்பட்ட விதம் குறித்து சர்ச்சைகள் இருந்து வந்த போதிலும், மாகாண சபைகள் உருவாக்கப்பட்டதன் நோக்கம் இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்வை முன்வைப்பதும், பிரதேச அபிவிருத்திக்கென மாகாணங்களில் அதிகாரக் கட்டமைப்புக்களை உருவாக்குவதுமாகும்.

இந்த நோக்கங்கள் இரண்டும் எதிர்பார்த்த அளவில் நிறைவேறாது போனது ஏன்? இது தொடர்பாக மாகாண சபை மக்கள் பிரநிதிகள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்ட போது எமக்குத் தெரிய வந்த ஒரு விடயம், அனைத்து மாகாண சபைகளும் எதிர்கொள்ளும் பொதுவான பிரச்சினைகளும், அதே போல ஒவ்வொரு மாகாணமும் எதிர்கொள்ளும் அதற்கே உரிய தனித்துவமான பிரச்சினைகளும் இருந்து வருகின்றன என்பதாகும்.

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தினால் அழைக்கப்பட்டிருந்த கல்விமான்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோருடன் மாகாண சபை விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடல்களை மேற்கொண்ட போதிலும், அவர்களுடைய கருத்துக்கள் எவையும் இங்கு முன்வைக்கப்படவில்லை. மாகாண சபைகள் எதிர்கொண்டு வரும் சவால்கள், அவற்றின் சாதனைகள் மற்றும் அவற்றுக்கான மாற்று யோசனைகள் என்பவற்றை உருவாக்குவது தொடர்பாக நடத்தப்பட்ட மூன்று நாள் செயலமர்வில் பங்கேற்ற மாகாண சபை உறுப்பினர்களிலிருந்து அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அமைக்கப்பட்ட ஐந்து உறுப்பினர் குழுவினால் உருவாக்கப்பட்ட இறுதி யோசனைகள் இங்கு முன்வைக்கப்படுகின்றன. இந்த யோசனைகள், 20 வருட வரலாற்றைக் கொண்டிருக்கும் மாகாண சபைகளை முழுமையான அதிகாரங்களைக் கொண்ட அமைப்புக்களாக முன்னெடுத்துச் செல்வதில் தவிர்க்க முடியாத விதத்தில் நாங்கள் எதிர்கொள்ள வேண்டியிருக்கும் யதார்த்தத்தையே பிரதிபலித்துக் காட்டுகின்றன.

© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# 20 வருட மாகாண சபை அனுபவங்களுடனான தேசிய பரிந்துரைகள்

## யாப்பு ரீதியான பிரச்சினைகள்

| பிரச்சினைகள் | மாற்றீடு | செய்ய வேண்டியவர்கள் |
|---|---|---|
| 13வது அரசியல் யாப்பின் கீழ் வழங்கப் பட்ட அதிகாரங்கள் அமுல்படுத்தப்படாமை. | அவ் அதிகாரத்தை மீண்டும் பெற்றுக் கொடுத்தல். | மத்திய அரசாங்கம் |
| 1. ஒருங்கியை நிரல் | அரசியல் யாப்பு சீர்திருத்தம் செய்யப்படும் வரை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின் மூலம் உறுதியாக அதிகாரத்தை பகிர்ந்து கொள்ளல். | மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபை |
| 2. இரட்டை முறை செயற்பாடு | மாகாண சபை விடயங்களுக்கு மத்திய அரசினால் ஏற்படுத்தியுள்ள அமைச்சுகளை இரத்துச் செய்ய வேண்டும். | மத்திய அரசாங்கம் மற்றும் அனைத்து அமைச்சுக்களும் |
| | சட்டரீதியாக முதலமைச்சர்களை அமைச்சர்வை சபையில் உறுப்பினர்களாக நியமித்தல். | மத்திய அரசாங்கம் |
| 3. நியதிச் சட்டங்களை தயாரிக்கும் போது சட்டமா அதிபரின் பரிந்துரைகள் தேவைப்படுதல். | மாகாண சட்டத் திணைக்களம் ஒன்றை அமைத்தல். <br><br> 13வது அரசியல் யாப்பு சீர்திருத்தத்தில் ஒருங்கயை நிரலிலுள்ள விடயங்கள் பற்றிய முழு அதிகாரங்களையும் ஒப்படைத்தல் உட்பட மாகாணத்திற்கு உரிய அமைச்சர்கள் மற்றும் உத்தியோகத் தர்களை நியமித்துக் கொள்ளல். | மத்திய அரசாங்கம் |
| 4. மாகாண சபையில் - பதவிகள் பற்றி யாப்பு ரீதியான இணக்கப்பாடொன்று இல்லாதிருத்தல். <br><br> (உதாரணம் : எதிர்கட்சி தலைவர், பிரதித் தலைவர், எதிர்கட்சி தலைவர்) | உரிய மாகாண சபை சட்ட திருத்தத்தின் மூலம் அதற்குரிய பதவிகள் யாப்பிற்குட் படுத்தல் வேண்டும். | மத்திய அரசாங்கம் |
| 4. அ. மாகாண சபை தலைவர் பதவி மற்றும் பிரதித் தலைவர் பதவிகள் இரண்டும். | அப்பதவிக்கு பதிலாக மாகாண சபையின் சபாநாயகர் மற்றும் மாகாண சபை பிரதித் சபாநாயகர் என்று யாப்பிற்குட்படுத்தல். | மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபை |


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# நிர்வாகம்

| பிரச்சினைகள் | மாற்றீடு | செய்ய வேண்டியவர்கள் |
|---|---|---|
| 1. மாகாண அரச சேவையில் பதவிகளை அனுமதித்தல் மற்றும் இணைத்துக் கொள்வதற்காக மத்திய அரசாங்கத்தின் அனுமதியை பெற்றுக் கொள்ள வேண்டியிருத்தல். | ஏற்றுக் கொண்ட கட்டமைப்பொன்றின் கீழ் அந்தந்த மாகாணங்களுக்கு தேவையான காரியாலய உத்தியோகத்தர்களை இங்கண்டு உரிய ஊழியர் எண்ணிக் கையை மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் மூலம் இணைத்துக் கொள்ளல்.<br><br>மாகாண முகாமைத்துவ சேவை பணிப்பாளர் ஒருவரின் கீழ் கொண்டு வருதல்.<br>நாடு தலுவிய சேவை உத்தியோகத்தர்களின் இடமாற்றம் மற்றும் மாகாணத்திற்குல்லான இடமாற்றம் செய்யும் அதிகாரத்தை ஒப்படைத்தல். | மத்திய அரசாங்கம் மற்றும் அமைச்சுக்கள் |
| 2. பிரதேச நிர்வாகம் (பிரதேச செயலாளர் காரியாலயம்) மாகாண சபையிலிருந்து அகற்றுதல். | மீண்டும் மாகாண சபைகளுக்கு ஒப்படைத்தல். | மத்திய அரசாங்கம் மற்றும் அரச நிர்வாக அமைச்சு உட்பட அனைத்து அமைச்சுக்களும் திணைக்களங்களும். மத்திய அரசாங்கம் மற்றும் அனைத்து அமைச்சுக்கள். |
| 3. மாகாண சபை விடயங்கள் தொடர்பாக மாகாண சபையின் அனுமதி அல்லது இணக்கப்பாடின்றி "தேசிய கொள்கை" சுற்று நிருபம் வெளியிடுதல். | மாகாண சபைகளுக்கு உரிய விடயங்கள் பற்றி மத்திய அரசாங்கம் நேரடியாக தலையிடாமல் இருத்தல் வேண்டும் அதே போன்று வெவ்வேறு நிறுவனங்களுக்கு அதுபோன்று அதிகாரம் இருக்கக் கூடாது. | மத்திய அரசாங்கம் |
| 4. மாகாண சபைகளுக்கு ஒப் படைத்துள்ள விடயங்கள் மத்திய அமைச்சுகள் மற்றும் திணைக் களங்கள் ஊடாகவும் நிரைவேற்றுதல் மற்றும் அவற்றுக்கான மத்திய அமைச்சுக்கள் மற்றும் திணைக் களங்கள் நிறுவியுள்ளமை.<br><br>உதாரணம் : சமூக சேவை விடயங்கள், சிறுவர் பாதுகாப்பு விடயங்கள், கூட்டுரவு தொடர்பான விடயங்கள், சிறு கைத்தொழில் விடயங்கள் மற்றும் தேசிய பாடசாலைகள் என்று வேறுபடுத்தல். | மாகாண சபை பதவிகளுக்குரிய அனைத்து மத்திய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களை நிராகரித்து அவ்வி டயங்களை மாகாண சபைகளினூடாக நிறைவேற்றி கொள்ளல். | மத்திய அரசாங்கம் |

© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# நிதி பிரச்சினைகள்

| பிரச்சினைகள் | மாற்றீடு | செய்ய வேண்டியவர்கள் |
|---|---|---|
| 1. பொருள் மற்றும் சேவைகள் வழங்குதல் தொடர்பாக ஏதேனும் அதிகாரம் மற்றும் பொறுப்புகள் மாகாண சபைகளுக்கு கொடுத்திருந் தாலும் செலவு செய்யும் திறமை இல்லாதிருத்தல். | வரி அரவிடுதல் மற்றும் வருமானம் ஈட்டும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் மற்றும் வேறு விதத்தில் பணம் ஈட்டிக் கொள்ளும் சந்தர்ப்பத்தை வழங்குதல். | மத்திய அரசாங்கம் மற்றும் திரைசேரி |
| 2. நிதி ஆணைக்குழு மாகாண சபை களுக்கு கிடைக்க வேண்டிய வருட நிதியை திரைசேரிக்கு பரிந்துரை செய்வதற்கு மட்டும். | மத்திய அமைச்சுக்கள், திணைக்களம் மற்றும் மாகாண சபைகளுக்காக ஏற்றுக் கொண்ட பரிந்துரைகளின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்ய முடியும். அதே போன்று மாகாண சபைகள் பிரதி நிதித்துவத்துடன் தேசிய நிதி ஆணைக் குழு ஒன்றின் பரிந்துரையில் மட்டும் திரைசேரியின் மூலம் நிதி ஒதுக்குதல் மற்றும் அதற்கு அப்பால் நிதி ஒதுக்கப்படாமை. | திரைசேரி |
| 3. மாகாண சபைகளுக்குரிய விடயங்கள் தொடர்பாக மத்திய அமைச்சுக்கள் அல்லது திணைக்களங்களுக்கு நிதி ஒதுக்குதல்.<br>உதாரணம் : சமூக சேவைகள், மற்றும் சிறுவர் பாதுகாப்பு சேவைகள், விவசாயம் மற்றும் வீதி) | மாகாண சபை விடயங்களுக்களுக்குரிய நிதி ஒதுக்குதல் மத்திய அரசாங்கத்தின் கீழ் எவ் அமைச்சுக்கு அல்லது திணைக்களம் ஒன்றிற்கு வழங்கப் படாதிருத்தல். | திரைசேரி |
| 4. மாகாண சபைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி திரைசேரியினால் இடை இடையே நிராகரித்தல்.<br>(உதாரணம் : 2007 ஆண்டில் 65% வீதம் மாகாண சபைகளினால் குறைக்கப்பட்டிருந்ததோடு மத்திய அரசுக்களினால் 20% மட்டுமே குறைக்கப்பட்டிருந்தது) | அரசிற்கு மூலம் கொடுக்க வேண்டி நிதி பிரச்சினைகளின் போது மத்திய அரசாங்கத்தின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களில் குறைக்கும் ஒதுக்கீடு களுக்கு சமனான அளவு மட்டும் மாகாண சபைகளிலும் குறைத்தல். | மத்திய அரசாங்கம் |
| 5. வரி அறவிடும் பொழுது மாகாண சபைகளுக்கு வரையறையிட்டிருத்தல். | மாகாண சபைகளுக்கு அவ்வதிகாரத்தை முழுமையாக ஒப்படைத்தல். | மத்திய அரசாங்கம் மற்றும் உரிய அமைச்சுக்கள், திணைக்களங்கள் |
| 6. வெளிநாட்டு நிதி நேரடியாக மாகாண சபைகளுக்கு கிடைக்காமை மற்றும் மத்திய அமைச்சு செயற்திட்ட காரியாலயங்கள் நடாத்தி அச் செயற்திட்டங்களை நிறுவகித்தல். | வெளிநாட்டு வளங்கள் திணைக் களங்களின் கட்டமைப்புக்களின் கீழ் (அப்படியானால், தேசிய பாதுகாப்பு மற்றும் அரசியல் வாழ்விற்கு அச்சுறுத்தல் ஏற்படாத விதத்தில்) கிடைக்கும் வெளிநாட்டு செயற்திட்டங்களை மாகாண சபையின் பிரதம செயலாளரின் முழு அதிகாரத்துடன் செயற்படுத்தல். | |


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# மாகாண சபைகளின் தற்றுணிபு அதிகாரம்

வரலாற்றுப் புகழ்மிக்க கோட்டை யுகத்தின் போது "தனிய வல்லப" என்ற மன்னன் மாதம்பே பிரதேசத்தில் ஆட்சி செய்தான். தனது பிரதேசத்திற்கு தனித்துவமான பௌதி வளங்களை இனங்கண்டு மனித மற்றும் உயிரின வளங்களை மேம்படுத்தியதன் மூலம் அம்மன்னன் தனிய வல்லப தெய்வம் எனப் பூஜிக்கப்பட்டார்.

இன்று அந்த மன்னன் மாதம்பா தேவாலயத்தில் தெய்வமாகப் பூஜிக்கப்பட்டு வருகிறான். அதிகாரப் பரவலாக்கல் அல்லது அதிகாரப் பங்கீடு தொடர்பாக அத்தகைய எதிர்கால பெருமையைக் கொண்டிருக்கும் இலங்கை மன்னராட்சி முறையைக் கைவிட்டு ஜனநாயக ஆட்சி முறையை ஏற்று இரண்டு நூற்றாண்டுகளின் பின்னர் 1987 இல் ஒரு மாற்றத்தை எதிர்கொண்டது. இரத்தக்களரிக்கு ஊடாகவேனும் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறையின் பின்னர் இரண்டு தசாப்தங்கள் கடந்து சென்றிருந்த போதிலும் அது இன்று "வழங்கப்பட்ட அதிகாரத்தை திருப்பி எடுத்துக் கொள்ளும்" சிக்கலை அல்லது "அதிகாரங்கள் சரியாக வழங்கப்படாத" சிக்கலை எதிர்கொண்டுள்ளது.

அதிகாரப் பகிர்வின் பங்குதாரர்களாக இல்லாத தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்தில் தோன்றிய கலவரத்தை இரும்புக் கரம் கொண்டு அடக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளின் விளைவாக சுமார் 70,000 இற்கும் மேற்பட்ட தமிழ் மற்றும் சிங்கள குடிமக்கள் கொல்லப்பட்டிருப்பதுடன் 12 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்து உள்ளனர். எனவே, எந்தவொரு இனத்துக்கும் தனது மொழி மற்றும் கலாசார அடையாளத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் பொருளாதார முன்னேற்றத்தை சாதித்துக் கொள்வதற்கும் வாய்ப்பினை வழங்கும் அதிகாரப் பகிர்வுக்கு எதிரான இரத்தம் சிந்தும் எதிர்ப்புக்கள் இனிமேலும் எடுபடப் போவதில்லை.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் 13 ஆவது அரசியல் யாப்புத் திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபை ஓர் அங்கவீனமான குழந்தையாக இருந்து வந்த நிலையில் சர்வகட்சி மாநாடு ஓர் இடைக்கால யோசனையைச் சமர்ப்பித்தது. 13 ஆவது திருத்தத்தின் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்கள் முழுமையாக மாகாண சபைகளுக்கு வழங்கப்படுதல் வேண்டும் என்ற அந்த

© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

யோசனைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களும், அதே போல மாகாண சபையை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்த ஐக்கிய தேசியக் கட்சி உள்ளிட்ட பல கட்சியினரும் 2007 ஆம் ஆண்டில் தமது அனுமதியை வழங்கியிருந்தன. அது தொடர்பான தீவிரமான சமூக அக்கறை நிலவி வந்த ஒரு வேளையிலேயே கிழக்கு மாகாண தேடர்தல் இடம்பெற்றது.

மாகாண சபைகளின் முதலமைச்சர்கள் உள்ளிட்ட மக்கள் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் சென்று மாகாண சபைகளின் இரண்டு தசாப்த கால அனுபவங்கள் பற்றி கருத்துப் பரிமாற்றத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த அதே வேளை அதிகாரப் பகிர்வானது இன நெருக்கடிக்கு ஒரு தீயணைக்கும் தீர்வாக அமையுமென மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் நம்புகிறது. மாகாண சபைகளைப் பலப்படுத்துவது தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய வேலைத்திட்டம் என்ன என்பது பற்றி பங்கேற்பு அனுகுமுறையில் (Participatory Apporach) மாகாண சபைகளை இணைத்து இரண்டாம் கட்டமாக ஒரு முத்தின செயலமர்வு நடாத்தப்பட்டது.

மாகாண சபைகளின் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் அதிகாரிகளின் கருத்துக்களின் ஊடாக மாகாண சபைகளின் தற்போதைய நிலைமை, அவை எதிர்நோக்கியுள்ள சவால்கள், நன்மைகள், மாற்று முன்மொழிவுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய ஒரு தெளிவான உருவத்தை அடையாளம் காண முடியும். இங்கு அந்தந்த மாகாண சபைகள் முன்வைத்த கருத்துக்களின் சுருக்கம் தரப்படுகிறது:

யாப்பு ரீதியான அதிகாரங்கள் பற்றி தெரியாத காரணத்தால் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியும் இங்கு குறித்துக் காட்டப்பட்டுள்ளது. உள்ளூராட்சியில் மிக முக்கியத்துவம் பெறும் நிறுவனங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்களின் நிருவாகப் பொறுப்பை அவ்வப்போது மத்திய அரசாங்கத்தின் கீழ் எடுத்தமை, நிதி அதிகாரத்தை மத்திய அரசாங்கம் தன்வயம் குவித்துக் கொள்கின்றமை, மாகாணங்களின் பௌதிக மற்றும் பௌதிக ரீதியற்ற அடையாளங்களை மதிக்காமை, மத்திய மயமாக்கல் மனப்பாங்குகளின் அடிப்படையில் பிரதேச நிருவாகத்தை நீட்டுவதற்கு முயலுதல் போன்ற சிக்கலான பிரச்சினைகள் பலவற்றை இனங்காண முடிந்துள்ளது.


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# மாகாண மட்டத்திலான இறுதி யோசனைகள்

© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

**3ஆம் படிமுறை**

# மேல் மாகாண சபையின் பரிந்துரைகள்

| பிரச்சினை | தற்போதைய சூழ்நிலை | மாற்று வழி | பொறுப்பு |
|---|---|---|---|
| 1. 13 ஆவது அரசியல் அமைப்புத் திருத்தத்தின் கீழ் அதிகாரங்களைச் செயற்படுத்துவதில் அரசாங்கத்தின் தலையீடு | மத்திய அரசாங்கம் அதிகார எல்லைகளைத் தாண்டி மாகாண சபை நடவடிக்கைகளில் தலையிடுதல். திட்டவட்டமாக அதிகாரங்களைப் பிரித்தல் மற்றும் எல்லைகளை இனங்காணுதல். | மாகாண அரச சேவை ஆணைக்குழு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வாய்ப்பளித்தல். | பாராளுமன்றம் |
| 2. மத்திய அரசாங்கத்தின் அரசியல் தலைமைத்துவம் மாகாண சபை முறையை வலுவூட்டுவதில் விருப்பம் இல்லாதிருத்தல். | மாகாண சபை முறை குறித்தும், அதற்கு வலுவூட்டுவது குறித்தும் ஒரு விளக்கத்தைக் கொண்டிராமை. | மனப்பாங்கு ரீதியான ஒரு மாற்றத்தை ஏற்படுத்துதல். | அரசியல் கட்சிகள்,<br>சிவில் அமைப்புக்கள்,<br>ஊடக நிறுவனங்கள் |
| 3. இரட்டை இயல்பு | மாகாண சபைப் பட்டியல் மற்றும் ஒத்திசைங்கு பட்டியல் என்பன ஒரே விடயங்களைச் செயற்படுத்துதல்.<br>உ-ம்: காணி, கல்வி | ஒத்தியங்கு பட்டியலை இரத்துச் செய்து அதிகாரப் பகிர்வினை அறிமுகம் செய்து வைத்தல். | பாராளுமன்றம்,<br>மாண்புமிகு ஜனாதிபதி |
| 4. நிதி அதிகாரங்களைப் போதியளவு பெற்றுக் கொடுக்காமை.<br>உ-ம்: நிதி ஆணைக்குழு | மாகாண திறைசேரி மற்றும் நிதி ஆணைக்குழு மத்திய அரசின் திறைசேரியின் கட்டுப்பாட்டிற்குள் அடங்குதல்.<br>முறையான அளவு கோல்கள், முறையான கட்டமைப்பு மற்றும் நிதி வளங்கள் காணப்படாமை.<br>மத்திய அரசின் நடவடிக்கைகளுக்காக பெருமளவிலான நிதி விகிதாசாரத்தைப் பெற்றுக் கொடுத்தல். | மாகாண சபைகளுக்கே உரிய காரணிகளின் அடிப்படையில், அறிந்து கொண்ட அளவு கோல்களின் அடிப்படையில் விகிதாசாரத்தை அறிந்து கொண்டு வளங்களைப் பெற்றுக் கொடுத்தல்.<br>மாகாண சபைக்குள் மென்மேலும் அதிகாரத்தைப் பகிர்ந்தளித்தல். | மத்திய அரசின் நிதி அமைச்சர் |
| 5. மாகாண அபிவிருத்திக்கென போதுமான அளவு நிதி கிடைக்காமை. | மாகாண அபிவிருத்திக்கெனக் கிடைக்கும் ஒதுக்கீடுகள் எதிர்பார்த்த அளவில் கிடைப்பதில்லை. | முறையான அளவு கோல்களின் ஊடாக நிலையான அபிவிருத்திக் கொள்கைகளின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுத்தல். | நிதி அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| 6. பிரதேச நிருவாகத் துடன் தொடர்புடைய பிரதேச செயலாளர் காரியாலயத்தை மாகாண சபை யிலிருந்து ஒதுக்குதல். | - | பிரதேச நிருவாகத்தை மாகாண சபைக்கு ஒப்படைத்தல். | பொது நிருவாக அமைச்சு |
| 7. தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் நிலையான கொள்கையொன்று காணப்படாமை. | - | அனைத்து விடயங்கள் தொடர்பாகவும் தேசிய மற்றும் மாகாண மட்டத்தில் கொள்கைகளைத் தயாரித்தல். | மத்திய அரசின் அமைச்சரவை |
| 8. மாகாண சபைகள் தொடர்பான மாற்றாந் தாய் மனப்பான்மையும், அவை ஊடகங்களால் உதாசீனம் செய்யப்படும் நிலையும் | - | மாகாண சபைகள் தொடர்பாக நிலவி வரும் மனப்பாங்குகளை மாற்றுவதற்கான செயல்திட்டமொன்றை உருவாக்குதல். | பாராளுமன்றம் தகவல் அமைச்சு |
| 9. ஊழியத் தேவைகளின் அடிப்படையில் மாகாண சபைக்கு ஆட்சேர்ப்புச் செய்ய முடியாத நிலை. உ-ம்: தாதிதமார் | - | மாகாணம் தொடர்பான அனைத்து ஊழியர் களையும் மாகாண அரச சேவை ஆணைக்குழு வின் கீழ் ஆட்ச்சேர்ப்புச் செய்வதற்கு ஏற்பாடு செய்தலும் சம்பந்தப்பட்ட பயிற்சிகளை மத்திய அரசாங்கம் வழங்குதலும். | மத்திய அரசின் அமைச்சரவை |
| 10. நிதி ஆணைக்குழுவின் செயற்பாடுகளில் மாகாணங்களின் பிரதிநிதித்துவம் இல்லாமை. | மாகாணங்களின் பிரதிநிதித்துவம் இல்லாமை | மாகாண சபைகளின் பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துதல். | பாராளுமன்றம் |
| 11. வரி அறவிடுதல் தொடர்பாக காணப்படும் வரையறைகள் | - | வரி விதிக்கும் ஆற்றலை அதிகரித்தல். | மத்திய அரசாங்கம். |
| 12. மாகாண சபை சட்டங்கள் பிரச்சினைகள் என்பன தொடர்பாக தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய பொறிமுறை ஒன்று இல்லாதிருத்தல். | - | மாகாண சபைகளுக்கென சட்டமா அதிபர் திணைக்களம் ஒன்றை சட்ட வரைபுத் திணைக்களமொன்றை ஏற்படுத்துதல். | பாராளுமன்றம் |
| 13. மையப்படுத்தப்பட்டுள்ள அரசியல் யாப்புடன் 13 ஆவது அரசியல் யாப்புத் திருத்தம் உள்ளடக்கப்படுவதால் தோன்றும் மோதல் நிலைமைகள் | - | அரசியல் யாப்பின் 76 ஆவது உறுப்புரையை நீக்குதல் மற்றும் 13 ஆவது அரசியல் யாப்புத் திருத்தின் D2 பிரிவைத் திருத்தி அமைத்தல். | பாராளுமன்றம் |


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# வட மத்திய மாகாண சபையின் பரிந்துரைகள்

| பிரச்சினை | தற்போதைய சூழ்நிலை | மாற்று வழி | பொறுப்பு |
|---|---|---|---|
| 1. முகாமைத்துவத் திணைக்களத்தின் சுற்றுநிருபங்கள் | குறைபாடுகளை நிவர்த்தி செய்வதிலுள்ள தடைகள் | மாகாண அரச சேவைகள் ஆணைக் குழுவிற்கு அதிகாரங்களை வழங்குதல். | ஜனாதிபதி |
| 2. ஒருங்கியை நிரல் | நிலையானதாக இல்லை / தொடர்ந்து நீடித்தல் | விடயங்களை குறைத்துக் கொள்ளல் | பாராளுமன்றம் |
| 3. நிதி ஆணைக்குழு தமது அதிகார எல்லைக்கு மேலோங்கிச் செயற்படல் | அரசியல் யாப்பில் எல்லைகள் வழங்கப்பட்டிருப்பினும் | தேசிய நிதி ஆணைக்குழு | ஜனாதிபதி |
| 4. நிதி வழங்குவதிலுள்ள பிரச்சினைகள் | தெளிவான அளவுகோல்கள் காணப்படாமை.<br>உரிய காலத்தில் கிடைக்கப்பெறாமை<br>முழு நிதியும் கிடைக்காமை<br>மேலதிக ஒதுக்கீடுகள் தொடர்பான பிரச்சினை (விசேட சந்தர்ப்பங்கள்)<br>மாகாண அதிகாரிகளுக்கு காணப்படும் சலுகைகள் மற்றும் பிரதிபலன்கள் தொடர்பான பிரச்சினை | தேசிய நிதி ஆணைக்குழு<br>திறைசேரி | மத்திய அரசு |
| 5. சுற்றுநிருபங்கள் (மத்திய அரசு) | மாகாண சபைகளின் எல்லைகளைத் தாண்டிச் செயற்படல். | மாகாண சபை நடவடிக்கைகளை மாகாண சபைகளுக்கே ஒப்படைத்தல். | ஜனாதிபதி<br>மாகாண சபை அமைச்சு |
| 6. மாகாண சபை நடவடிக்கைகளை மத்திய அரசாங்கம் மேற்கொள்ளல் | பல்வேறுபட்ட அமைச்சுக்களினூடாகச் செயற்படுத்துதல்.<br>கம நெகும<br>மக நெகும<br>ரஜரட்ட அபிவிருத்தி | மாகாண சபை விடயங்களை மாகாண சபைகளிடமே ஒப்படைத்தல். | நிதி ஆணைக்குழு மாகாண சபை அமைச்சு |
| 7. வழங்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் பெற்றுக் கொள்ளல் | பிரதேச செயலாளர் காரியலாயம் கமத்தொழில் சேவை தேசிய கொள்கைகளை நடைமுறைப்படுத்துதல் | மாகாண சபைகளுக்கு மீண்டும் ஒப்படைத்தல். மாகாண சபைகளை பங்குதாரர்களாக்கிக் கொள்ளல். | ஜனாதிபதி<br>அரச நிருவாக மற்றும் மாகாண சபை அமைச்சு |
| 8. வெளிநாட்டு நிதி உதவிச் செயற்திட்டங்களை மத்திய அரசாங்கம் நடைமுறைப்படுத்து தல். | மாகாண சபைகளின் தேவைப்பாடுகள், மேற்பார்வைகள் இயைந்து போகாமை. | மாகாண சபைகளினூடாக நடைமுறைப்படுத்துதல் | நிதி ஆணைக்குழு<br>செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் அமைச்சு |

| | | | |
|---|---|---|---|
| 9. நியதிச் சட்டங்களை அமைத்துக் கொள்வது தொடர்பான பிரச்சினை | நியதிச் சட்டங்களின் எண்ணிக்கை குறைந்து காணப்படல்.<br>நீதிபதியிடம் முன்னுரிமை கிடைக்கப் பெறாமை | மாகாண நீதிபதி<br>மொழிபெயர்ப்பாளர்கள் | ஜனாதிபதி |
| 10. மாகாண அபிவிருத்திக்கென பங்களிப்பு நல்கிய அரசியல்வாதிகள், அதிகாரிகள் நீண்ட காலம் நிலைத்திருக்காமை | வரப்பிதசாதங்கள், வசதிகள், வரவேற்பு குறைவு காரணமாக மத்திய அரசாங்கத்திற்குச் செல்லல். | வசதிகளில் அதிகரிப்பை ஏற்படுத்துதல். | மத்திய அரசு |
| 11. அதிகாரிகளின் இரட்டைக் கடமைச் செயற்பாடு (மத்திய மற்றும் மாகாண சபைக்கு) | நிருவாகப் பிரச்சினைகள் (கல்வி, சுகாதாரம்) | மாகாண சபைக்கு நேரடியாக அதிகாரங்களை வழங்கல். | மத்திய அரசின் கட்டுப்பாட்டிருக்கும் அமைச்சு (Line Ministry) |
| 12. புதிய சீர்திருத்தத்தின் அடிப்படையில் மாகாண அமைச்சுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்காமை. | - | ஆகக் கூடியது 7 ஆக உயர்த்துதல். | - |
| 13. கெபினட் அமைச்சின் நிலையான உறுப்புரைச் சபை ஒன்றை நிறுவுதல். | மாகாண சபையில் காணப்படும் பிரதிநிதித்துவம் போதுமான அளவு காணப்படாமை | முதலமைச்சர் கெபினட் அமைச்சின் நிலையான உறுப்பினராக்குதல் | ஜனாதிபதி |
| 14. பௌதிக வளங்களின் குறைபாடு | காணப்படும் வளங்கள் பழையனவாகக் காணப்படுவதால் பராமரிப்புச் செயலவு அதிகரித்தல்.<br>போதியளவு வளங்கள் காணப்படாமை. | வருடாந்த அடிப்படையில் வளங்களைப் பெற்றுக் கொடுத்தல்.<br>ஒதுக்கீடுகளைப் பெற்றுக் கொடுத்தல். | நிதி ஆணைக்குழு<br>திறைசேரி |
| 15. கணக்காய்வு மற்றும் விசாரணை | ஆளுநரின் அதிகாரத்துக்கும் மேலாகச் சென்று மத்திய அரசின் சுற்றுநிருபங்கள் ஊடாக கணக்காய்வை மேற்கொள்ளல். | மாகாண நிதிச் சபையை வலுப்படுத்துதல். | ஜனாதிபதி |
| 16. பிரதேச அபிவிருத் திச் செயற் திட்டங்களுக்கு உரிய முன்னுரிமை கிடைக்காமை | மாகாண சபையின் திட்டங்களுக்கு மேலாகச் செயற்படும் மத்திய அரசின் செயற்திட்டங்கள் | வழங்கப்பட்ட விடயங்களுக்குள் செயற்படுவதற்காக தேவையான நிதிகளை மாகாண சபைக்கு வழங்குதல். | மத்திய அரசு |
| 17. தேசிய கொள்கை தயாரிப்பில் மாகாண சபைகளுக்கு அவகாசம் வழங்கப்படாமை | மாகாண சபைகளின் குரல் தேசிய மட்டத்திலான பாராளுமன்றத்தினுள் இடம்பெறாமை. | முதலமைச்சருக்கு பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்வதற்கான அவகாசத்தை வழங்குதல். | ஜனாதிபதி |


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# ஊவா மாகாண சபையின் பரிந்துரைகள்

| பிரச்சினை | மாற்று வழி | பொறுப்பு |
|---|---|---|
| 1. அரச சேவை மற்றும் மாகாண அரச சேவை | சமநிலைக்குக் கொணர்தல் | அரச பொது நிருவாக அமைச்சும் அமைச்சரவையும் |
| 2. ஒரே விடயத்தை அரசும் மாகாண சபையும் நிறைவேற்றல். | அரசு மாகாண சபையிடம் ஒப்படைத்துள்ள விடயங்களிலிருந்து நீங்குதல். (வைத்தியசாலைகள், பாதை, கூட்டுறவு மற்றும் விவசாய முகாமைத்துவ சேவைகள்) | மாண்புமிகு ஜனாதிபதியும் அமைச்சரவையும் |
| 3. மாகாண சபைகள் அறவிடும் வரிகளை உள்ளூராட்சி அமைப்புக் களுக்கு வழங்குதல். (ஊவா மாகாண சபை திருப்தியானது) | தாமதமின்றி வழங்க வேண்டும். | மாகாண சபை அமைச்சு |
| 4. 13 ஆவது திருத்தம் மூலம் வழங்கப்பட்ட அதிகாரங்களை அரசாங்கம் மீளப் பெறுதல். | அரசியல் யாப்பை மீறாமல் இருப்பதற்கு வகை செய்தல். | மாண்புமிகு ஜனாதிபதி<br>பாராளுமன்றம்<br>அமைச்சரவை<br>அரச ஊழியர்கள் |
| 5. கௌர ஆளுநரின் வகிபாகம் பிரச்சினைகள் கொண்டது. | மக்கள் இறைமை மற்றும் ஆளுநரின் அதிகாரங்கள் பற்றி தற்போதைய நிலைமைக்குப் பொறுத்தமாக அர்த்தம் கற்பித்தல். | மாண்புமிகு ஜனாதிபதி |
| 6. மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்தல். | மொழிக் கொள்கை மற்றும் சமவாயத்தை உருவாக்குவதற்காக அதிகாரிகளையும் நிதி மானியங்களையும் ஏற்பாடு செய்தல். (ஆதிவாசிகள் உள்ளிட்ட ஏனைய மக்கள் குழுக்கள்) | சமவாய உருவாக்கம்<br>மாகாண சபை<br>அரச திறைசேரியிலிருந்து நிதி வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.<br>செயற்குழுக்களை சேர்த்துக் கொள்வதற்காக அரசின் அனுமதியைப் பெற்றுக் கொடுத்தல். |
| 7. மாகாண சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள சட்டம் மற்றும் சமாதானம் பற்றிய விடயம் வலுவிழந்திருத்தல். | 13 ஆவது யாப்புத் திருத்தம் மூலம் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி<br>- பொலிஸ் ஆணைக்குழு<br>- மாகாண சட்டமா அதிபர்<br>- மாகாண பரீட்சை ஆணையாளர்களை நியமித்தல். | மாண்புமிகு ஜனாதிபதி<br>அமைச்சரவை |
| 8. அபிவிருத்திக்கான வெளிநாட்டு உதவிகளை நேரடியாகப் பெற்றுக் கொள்ள முடியாமை. (தேசிய பாதுகாப்பிற்கு குந்தகமின்றி) | மாகாண சபைகளுக்கு வெளிநாட்டு உதவிகளைப் பெறுவதற்கு முறையாக அதிகாரம் வழங்குதல். | மாண்புமிகு ஜனாதிபதி<br>அமைச்சரவை |

| | | |
|---|---|---|
| 9. மாகாண சிறப்புக் கருத்திட்டங்களின், தொழில் முயற்சிகளின் உற்பத்திகளிலிருந்து முறையாக வரி அறவிட முடியாமை. | மாகாணத்திற்குள் அது போன்ற சந்தர்ப்பங்களில் அரசு அறவிடும் வரி நிதியில் அங்கீகரிக்கப்பட்ட விகிதாசாரத்தை மாகாண சபை அறவிடுவதற்கு வழிவகுத்தல். | அரசாங்கம் |
| 10. மாகாண சபை முதலமைச்சர் மாநாடுகளில் சிபார்சு செய்யப்படுகின்ற விடயங்களை செயற்படுத்துவதற்கான அதிகாரக் கட்டமைப்பொன்றை உருவாக்குதல். | முறையான கட்டமைப்பை ஸ்தாபித்தல். | மாண்புமிகு ஜனாதிபதி உள்ளிட்ட அமைச்சரவை |
| 11. மாகாண சபை விடயங்களை திட்டமிடலும் திருத்தம் மற்றும் அளவுகோல்களை உருவாக்கும் உரிமை இல்லாமை. | முழு உரிமையையும் வழங்குதல். | மாண்புமிகு ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை |
| 12. முதலமைச்சரின் சம்பள வித்தியாசமும் சிறப்புரிமைகளும் | பூரண உரிமையை வழங்குதல். | மாண்புமிகு ஜனாதிபதி |
| 13. மாகாண சபை தலைவர் மற்றும் பிரதித் தலைவரின் பதவிப் பெயர் | மாகாண சபாநாயகர் மற்றும் மாகாண பிரதி சபாநாயகர் என பெயரிடுதல். | மாண்புமிகு ஜனாதிபதி |
| 14. 154ஈ உறுப்புரையின் கீழ் 5 அமைச்சர்களை நியமிக்கும் வரையறை விரிவாக்கப்பட வேண்டும். | தற்காலத்திற்கு பொருந்தாது. அமைச்சர் பதவிகள் 7 வரை யாப்பில் சேர்த்துக் கொள்ளல். | அரசியலமைப்பு உருவாக்கச் சபை |
| 15. நிபுணத்துவ அறிவு மத்திய அரசாங்கத்தின் உடமையாயிருப்பது மாகாண சபையைப் பலப்படுத்துவதற்கு ஒரு தடை | அரசினால் மாகாண சபைக்கு நிபுணத்துவ அறிவை வழங்க நடவடிக்கை எடுத்தல். | அமைச்சரவை |


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# வடமேல் மாகாண சபையின் பரிந்துரைகள்

| பிரச்சினை | தற்போதைய சூழ்நிலை | மாற்று வழி | பொறுப்பு |
|---|---|---|---|
| 1. அதிகாரப் பரவலாக்கள் தொடர்பாகக் காட்டப்படும் விருப்பமின்மை மற்றும் சோம்பல். | தற்போதைய தேர்தல் முறை.<br><br>மத்திய அரசு அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் இருப்புக்காக அதிகாரத்தை மத்தியமயப்படுத்தும் மனப்பாங்கு<br><br>மாகாண சபைகளில் இருக்கும் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகளின் மத்திய மயப்படுத்தும் மனப்பாங்கு,<br><br>மாகாண சபை கவர்ச்சியூட்டும் ஒரு இடமாக இல்லாதிருத்தல். | 1. மாகாண சபைப் பட்டியலிலிருக்கும் விடயங்களைச் செயற்படுத்துவதற்கு மாகாண சபைகளே தமக்குள் ஓர் உடன்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளல். (MOU)<br><br>2. இரட்டை இயல்பினை நீக்குதல்.<br><br>3. ஒத்தியங்கு பட்டியலை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றின் மூலம் திட்டவட்டமாகப் பிரித்து வேறுபடுத்துதல்.<br><br>4. மாகாண சபைக்கு வழங்கப்பட்டிருக்கும் விடயங்கள் தொடர்பாக சமவாயமொன்றை உருவாக்குதல்.<br><br>5. மாகாண சபை அமைச்சை இல்லாதொழித்து அந்த விடயத்தை ஜனாதிபதியின் கீழ் எடுத்து வருதல்.<br><br>6. காலத்துக்கு ஏற்ற விதத்தில் அமைச்சுக்களை அதிகரித்தல். | மாண்புமிகு ஜனாதிபதி<br><br>அரசாங்கம்<br><br>மாகாண சபைகள் |
| 2. மாகாண சபைகளுக்கு நிதி ஒதுக்கும் அதிகாரத்தை மாகாணங்கள் கொண்டிராமை. | 1. திட்டவட்டமான அளவுகோல்களை அடிப்படையாகக் கொண்டு நிதி ஒதுக்கப்படாமை.<br><br>2. நிதி ஆணைக்குழு மத்திய அரசாங்கத்துக்கு சார்பாக இருந்து வரல்.<br><br>3. மாகாண சபை விடயம் சம்பந்தப்பட்ட நிதிகள் அரசாங்க அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்படுதல். | 1. அளவிடக் கூடிய தெளிவான திட்டவட்டமான அளவுகோல்களின் பிரகாரம் நிதிகளை ஒதுக்குதல்.<br><br>உ-ம்: குடித்தொகை, விகிதாசாரம்<br><br>பாதைகளின் நீளம்<br><br>மாணவர் எண்ணிக்கை<br><br>நோயாளர் எண்ணிக்கை | 1. அரசாங்கம்<br><br>2. திறைசேரி<br><br>3. நிதி ஆணைக்குழு |

© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

| | | | |
|---|---|---|---|
| | 4. மாகாண சபைகள் நேரடியாக வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக் கொள்ளாமை.<br><br>5. உரிய நேரத்தில், உரிய அளவில் வருட முடிவுக்கு முன்னர் நிதிகள் கிடைக்காதிருத்தல்.<br><br>உ-ம்: 40% . | 2. நிதி ஆணைக்குழுவில் மாகாண சபைகளுக்கு பிரதிநிதித்துவத்தை வழங்குதல்.<br><br>3. தேசிய நிதி ஆணைக் குழுவை ஸ்தாபித்தல். (மாகாண சபைகளுக்கு பிரதிநிதித்துவத்தை வழங்குதல்) | |
| 3. மாகாண சபை ஊழியர்கள் முகாமைத்துவம் இடையூறுகளை எதிர்கொள்ளல் | 1. நியமனங்கள் மற்றும் ஆட்சேர்ப்பு என்பவற்றில் அரசாங்கம் தலையிடுதல்<br><br>2. தொழிற் சங்கங்களின் அழுத்தம் | 1. மாகாண சபை விடயங்களுடன் இணைந்த விதத்தில் அந்தந்தப் பதவிகளுக்குரிய முடிவுகளை எடுக்கும் அதிகாரங்களை மாகாண சபைகளிடம் ஒப்படைத்தல்.<br><br>2. பதவி எண்ணிக்கையை நிர்ணயிப்பது தொடர்பாக திட்டவட்டமான அளவுகோல்களை உருவாக்கல். உ-ம்: பொது சுகாதாரப் பரிசோதகர் 7500 – 1 | 1. அரசாங்கம்<br><br>2. முகாமைத்துவ சேவைத் திணைக்களம்<br><br>3. மாகாண சபை |
| 4. தேசிய கொள்கைகள் உரிய விதத்தில் உருவாக்கப்படாமை | 1. தேசியக் கொள்கை அமைச்சின் மூலம் தமது தற்றுணிவின் பிரகாரம் முடிவு செய்யப்படுதல்.<br><br>2. தேசிய கொள்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமை. | 1. தேசிய கொள்கையை மாகாண சபைகளினதும் இணக்கத்துடன் முடிவு செய்தல். (பாராளுமன்ற சட்ட அனுமதிக்கு அமைவாக) | 1. அரசாங்கம்<br><br>2. பாராளுமன்றம்<br><br>3. மாகாண சபை |
| 5. மாகாண சபைகளுக்கிடையிலான சேவைகள் மற்றும் வளங்களைக் கையாளல் தொடர்பான முறையான ஒரு கொள்கையின்மை.<br><br>உ-ம்: போக்குவரத்து<br><br>ஆறுகள் (மணல் அகழ்வு)<br><br>நீர்ப்பாசனம் | 1. மாகாண சபைகள் பல்வேறு முடிவுகளின் அடிப்படையில் செயற்படுதல்.<br><br>2. போக்குவரத்து தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மூலம் அழுத்தம் பிரயோகிக்கப்படுதல். | 1. மாகாண சபைகளுக்கிடையிலான இணக்கத்துடன் செயற்படுதல்.<br><br>2. மாகாண சபைகளுக்கிடையிலான போக்குவரத்து சமவாயம் ஒன்றின் அடிப்படையில் செயற்படுதல். | 1. மாகாண சபைகள் |


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# மாகாண சபையை வலுவூட்டுதல்

# காலக்கோடு



## 1988 செப்டெம்பர் 02 - 08

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன, ஜனாதிபதி அவர்களினால் வெளியிட்ட அறிக்கை ஒன்றின் ஊடாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் ஒரு நிர்வாக அலகாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு மாகாண சபையினால் நிருவாகம் செய்வதற்கான வசதிகள் கிடைத்தன. இரண்டு மாகாணங்கள் ஒன்றிணைக்கப்பட்டன.

அரசியல் அதிகாரத்துக்கான போராட்டம் ஒன்றின் கருத்து முரண்பாட்டு நிலைமை காரணமாக16 மாதங்கள் ஒன்றிணைத்த வடக்கு - கிழக்கு மாகாண சபையின் ஆட்சி கைவிடப்பட்டது. மாகாணத்தின் ஆட்சியாளர் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF) மற்றும் ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ENDLF) மற்றும் அவர்களின் பாதுகாவலர்களான இந்திய சமாதானப் படையினால் மக்கள் துன்பப்படுத்தப்பட்டார்கள் என்று கூறப்பட்டது.



## 1990 மார்ச் முதலாம் திகதி

ஒன்றிணைந்த வடக்கு - கிழக்கு அக்கால முதலமைச்சர் வரதராஜா பெருமாள் அவர்களினால் வடக்கு-கிழக்கு மாகாண சபையில் விசேட கூட்டம் ஒன்று கூட்டப்பட்டு தனது கட்சியின் அதாவது ஈ.பீ.ஆர்.எல்.எ.ஃ.ப் இனால் 19 கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்காக பிரேமதாச அரசாங்கத்திற்கு இறுதிக் கால எல்லை அறிவிக்கப்பட்டது. மாகாண சபை முறை முழுமையாக அமுல்படுத்தாமையே இதற்குரிய காரணமாகும். காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாணங்களுக்குப் வழங்கப்படவில்லை (பெற்றுக்கொடுத்த பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மீண்டும் ஒருங்கிய நிரலின் ஊடாக மத்திய அரசாங்கத்துக்கு இணைக்கப்பட்டது)

அவரின் முரண்பாடான கருத்தை வெளியிடப்படும் போது திருகோணமலை மாகாண சபை கட்டடக் கூரையின் மேல் சிங்கக் கொடி பரந்தமை மனங்கவர்ந்த சிறிய நிகழ்வாக இருந்தது.



## 1993/1994

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் 1993/94 காலப் பகுதியில் மேல் மாகாண சபை முதலமைச்சர் பதவியிலிருந்த காலத்தில் பொலிஸ் அதிகாரத்தை மாகாண சபைக்கு ஒப்படைக்க வேண்டும் என்று அழுத்தமாக கூறியிருந்தாலும் உரிய வர்த்தமானி அறிவித்தலில் கையொப்பம் இடவில்லை.

© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives



## 1996 ஜூலை 26

கிழக்கு மாகாண மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்பு என்ற பெயர் கொண்ட பிரஜைகள் குழு இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவரின் உத்தியோகபூர்வ இல்லமான கொழும்பு அலரி மாளிகையில் சந்தித்து வடக்கு கிழக்கு மாகாணத்தைப் பிரித்து இரண்டு மாகாண சபைகளின் கீழ் ஆட்சி செய்யவேண்டும் என்ற கடிதம் ஒன்றை ஜனாதிபதியிடம் ஒப்படைத்தது.



The Island

LTTE bomber kills 97 unarmed sailors, injures 112

N-E merger invalid – SC

Government to study the judgment carefully

## 2006 ஒக்டோபர் 16

வடக்கு கிழக்கு ஒன்றிணைக்கப்பட்டமை சட்டத்துக்கு முரணானது மற்றும் நிராகரிக்கப்பட்டதொன்றென உயர் நீதிமன்றம் தீர்மானித்தது. மனுதாரர்களான மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர்கள் மூவருக்கு இலங்கையின் அரசியல் யாப்பில் 154(a)(2) உறுப்புரையின் கீழ் கிழக்கு மாகாண சபை ஒன்றை தேர்ந்தெடுப்பதற்கான உரிமை பெற்றுக்கொடுக்கப்பட்டது. இத்தீர்ப்பு பிரதம நீதியரசர் சரத் என். சில்வா அவர்களினால், நீதிபதி களான சீ.என் ஜயசிங்க, என்.கே. உதலாகம, ராஜா பெர்ணான்டோ மற்றும் என்.ஜீ. அமரதுங்க ஆகியோரின் இணக்கப்பாட்டுடன் வழங்கப்பட்டது. மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண சேருவில பிரதேசத்தை பிரதிநிதித்துவப்படுத்திய ஜயந்த வீரசேகர மற்றும் கிழக்கு மாகாண எல்.கே. வசந்த மற்றும் ஏ.எஸ். மொஹமட் புஹாரி ஆகியோரால் இரண்டு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்ட பின் கிழக்கு மாகாணத்திற்கு வேறான மாகாண சபை வேண்டும் என்று மனுவொன்று முன் வைக்கப்பட்டிருந்தது.




## 2006 செப்டெம்பர் 26

சுனாமி அனர்த்தத்தின் அதிக பாதிப்பு மற்றும் பொருட்சேதங்கள் கிழக்கு மாகாணத்திலேயே ஏற்பட்டது.


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives



## 2007 ஜூலை 11

தமிழீழ விடுதலைப் புலிகளை கிழக்கு மாகாணத்தில் அவர்களின் இறுதி அதிகாரப் பிரதேசத்தில் இருந்து இலங்கை அரச படையினர் விரட்டியதுடன் கிழக்கு மாகாணத்தைக் கைப்பற்றியதாக அரசு அறிவித்தது.

## 2008

“ஆயுதமேந்திய பிரிவினைவாதக் குழுக்கள் இன்னும் நடமாடும் இருக்கும் வேளையில்” மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை பெற்றுக் கொடுப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி எதிர்க்கின்றது. அதேபோன்று அரசியல் யாப்பில் பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சியையும் எதிர்க்கின்றது.

## 2008 மார்ச் 13

மார்ச் 13 ஆம் நாள் வெளியான வர்த்தமாணி வேட்பு மனுத்தாக்கல்அறிவித்தலுக்கமைய கிழக்கு மாகாண தேர்தலுக்கான கிழக்கு மாகாண சபைக்கான பத்திரம் 2008 மார்ச் 23ம் திகதி முதல் ஏப்ரல் 3ம் திகதி வரை ஏற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.




## 2008 மே 10

கிழக்கு மாகாணத்தில் முதல் தடவையாக நடைபெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் 37 ஆசனங்களுக்காக 18 கட்சிகளும் 73 சுயேட்சைக் குழுக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி 1300க்கும் அதிகமான வேட்பாளர்கள் போட்டியிட்டனர். ஆளும் கட்சியான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிக்கும் (UPFA) மற்றும் டீ.எம்.வீ.பீ உட்பட அதன் இணைக் கட்சிகள் மற்றும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் இணைக் கட்சியான ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியோருக்கிடையில் பெரும் போட்டி இருந்தது.

## 2008 மே 11

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் தலைமைத்துவம் வகிக்கும் ஆளும்கட்சி கிழக்கு மாகாணத் தேர்தலில் வெற்றி பெற்றது. ராஜபக்ஷ அவர்களின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (UPFA) 20 ஆசனங்களை கைப்பற்றியதோடு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி 15 ஆசனங்களைப் பெற்றது.



## 2008 மே 12

அரசியல் யாப்பின் 13வது திருத்தத்திற்கு அமைய அரசினால் பொலிஸ் அதிகாரம் உட்பட அனைத்து அதிகாரங்களையும் கிழக்கு மாகாணத்திற்கு பகிரப்பட வேண்டும் என்று ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பிரதம செயலாளராகிய அமைச்சர் மைத்திரிபால சிரிசேன அவர்கள் கூறியிருந்தார்கள்.

# கிழக்கு மாகாண சபையின் பரிந்துரைகள்

| | பிரச்சினை | தற்போதைய சூழ்நிலை | மாற்று வழி | பொறுப்பு |
|---|---|---|---|---|
| 1. | அறவிடப்படும் வரி தொடர்பாக நிதி ஆணைக்குழுவிற்கோ மாகாண சபைக்கோ அதிகாரமின்மை. | மக்கள் பிரதிநிதிகள் இன்னும் இங்கு உரிய முறையில் நிலைநிறுத்தப் படவில்லை<br>சுகாதாரப் பிரிவில் இவ்வாறு வரி அறவிடப்படுவதில்லை. | மக்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சபைகளின் ஊடாக அவ்வதிகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | மத்திய அரசு, மாகாண சபை, நிதி ஆணைக்குழு |
| 2. | இரண்டு தசாப்தங்களாக மாகாண சபைகள் செயற்பட்டாலும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக மத்திய அரசின் தலைமைக்கு அரசியல் அதிஷ்டானம் இன்மை. | இதற்கு மத்திய அரசு மாத்திரம் அல்ல ஏனைய நிறுவனங்களினதும் ஒத்துழைப்பு போதுமானதாக இல்லை.<br>கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலைமைகள் பெரும்பாலான தீர்மானங்களின் போது அழுத்தமாக அமைந்துள்ளது. | மக்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்கள் மூலம் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். மத்திய அரசு இவ்வாறான நடவடிக்கைகளின் போது விட்டுக்கொடுத்து செயல்பட வேண்டும். | மத்திய அரசு, மாகாண சபை, அரச கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அமைச்சின் அமைச்சர். |
| 3. | மாகாண சபைக்குள் இருக்கும் சிறு இனக் குழுக்களின் அபிலாஷைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த முடியாதுள்ளமை. | இவ்வாறான தேவைகளை நிறைவேற்றுவதற்கான அதிகாரங்கள் இல்லாத காரணத்தினால் உரிய முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. | முழுமையான அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும். | மத்திய அரசு |
| 4. | மேலிருந்து கீழான செயல்திட்டம் தயாரிக்கும் தொடர்ச்சியான படிமுறை உதாரணம்: வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு, கம நெகும, மக நெகும போன்ற வெளிநாட்டு நிதியுதவியின் மூலம் செயற்படுத்தும் செயற்திட்டங்கள் | மாகாண சபை, பிரதேச செயலாளர் காரியாலயங்களில் இருந்து முன்மொழிவுகள் பெறப்படுகின்றன.<br>சுயாதீனமான செயற்பாடுகள் மிகக் குறைவு கூடுதலான | மாகாண சபைக்கு முழு அளவிலான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் | மாகாண சபை |


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

| | | | | |
|---|---|---|---|---|
| | நடைமுறைப்படுத்துவது இன்றும் மேலிருந்து கீழோகவே. | சந்தர்ப்பங்களில் மத்திய அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றது. தொடர்ச்சியான கொள்கைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுவதில்லை. | | |
| 5. | சுய ஜீவனோபாயம் தொடர்பான தீர்மானங்களின் போது பிரஜைகளின் கருத்துக்களுக்கு இடமின்மை. | பிரஜைகளின் கருத்துக்களுக்கு முழுமையான இடம் இல்லை.<br><br>உரிய கட்டமைப்போ எண்ணமோ இல்லை. | மாகாண சபை மற்றும் பிரதேச சபைகள் தெளிவுடன் கடமையாற்றுதல். | மாகாண சபை |
| 6. | மாகாண சபையின் கீழ்க் காணப்பட்ட அரச நிருவாகம் மற்றும் கமநலச் சேவைகள் விடயப் பரப்பை மீண்டும் மாகாண சபைக்குள் உள்ளடக்குதல். | கூடுதலான நிர்வாக அதிகாரங்கள் தற்போதைக்கு மத்திய அரசினால் மேற்கொள்ளப் படுகின்றது. | அரசின் பொறுப்புக்களை உறுதியானதாகவும் முறையாகவும் அறிந்து கொண்டு அப் பொறுப்புக்களைத் தவிர ஏனைய பொறுப்புக்கள் மற்றும் அதிகாரங்கள் | மத்திய அரசு |
| 7. | அரச சேவை நியமனங்கள், இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு தொடர்பாக மத்திய அரசிற்கும், மாகாண சபைக்கும் இடையில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுதல். | தற்போதைக்கு மத்திய அரசினால் நிறைவேற்றப்படுகின்றது. சில பரிந்துரைகளை மாகாண சபைகளும் வழங்குகின்றன. | மாகாண சபைகளுக்கு பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். | மத்திய அரசு |
| 8. | தேசிய பாடசாலைகள் மற்றும், தேசிய வைத்தியசாலைகளின் நிருவாகத்தை மீண்டும் மாகாண சபை விடயத்தினுள் உட்படுத்துதல். | பிரதான பொறுப்பு மத்திய அரசாங்கத்திடம் காணப்படுகின்றது. | அனைத்து அதிகாரங்களையும் மாகாண சபைகளுக்கு பெற்றுக்கொடுத்தல் பொருத்தமானது. மத்திய அரசாங்கத்தின் சேவையாட்களின் இடமாற்றம் மத்திய அரசினால் மேற்கொள்ளப்பட வேண்டும். | மத்திய அரசு |
| 9. | பயணிகள் போக்குவரத்துத் தொடர்பில் மத்திய அரசிற்கும் மாகாண சபைக்கும் இடையில் காணப்படும் பிணக்குகளைத் தீர்த்தல். | வீதி அபிவிருத்தி தொடர்பாக மட்டுமே திணைக்களம் ஒன்று காணப்படுகின்றது. | மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்கள் கிடைக்கப் பெற வேண்டும். | மாகாண சபை |
| 10. | மாகாண சபைக்குள் தமது பிரதிநிதிகள் இல்லாத நிலப்பரப்பில் | இதுவரையில் மக்களைப் பிரதிநிதித்துவப் | புதிய மாகாண சபை பிரதிநிதிகள் மூலம் உரிய செயல்முறைகளை | மாகாண சபை |

| | | | | |
|---|---|---|---|---|
| | வாழும் மக்களினதும் குலப்பண்மைத்துவ முடைய குழுக்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | படுத்தும் வகையில் மக்கள் பிரதநிதிகள் இல்லாத காரணத்தினால் இந் நடவடிக்கை உரிய முறையில் இடம்பெறவில்லை. | அறிந்து தேவையான செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். | |
| 11. | மாகாணத்திற்கே உரிய பொருளாதார மற்றும் கலாசார வளங்கள் தொடர்பாக தரவுகளைச் சேகரிக்கின்ற, ஆய்வுகள் செய்கின்ற உரிய செயற்திட்டங்கள் ஊடாக பிரதிபலன்மிக்க நிறுவனக் கட்டமைப்பை கட்டியெழுப்புதல். | ஒவ்வொரு பிரிவுகளும் தனித்தனியாக இயங்குகின்றன. மத்திய அரசின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன.<br><br>தரவுகள் சேகரிப்பதைத் தவிர வேறு செயற்பாடுகள் இல்லை. | மாகாண சபையின் மனித வளங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு மாகாண சபையிலும் ஒருங்கிணைப்பு நிலையம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும். | மகாண சபை |
| 12. | மத்திய அரசாங்கத்தின் அரச அதிகாரிகளுடன் ஒப்பிடுகையில் மாகாண சபை அரச அதிகாரிகளை குறைமதிப்பீடு செய்தல். | மத்திய அரசின் அதிகாரிகளிடம் இவ்வெண்ணமே காணப்படுகின்றது. | மாகாண அதிகாரிகளுக்கும் சமமான சந்தர்ப்பங்களும் ஏனைய காரணங்களும் வழங்கப்பட வேண்டும். | மத்திய அரசு, மாகாண சபை. |
| 13. | ஒரே விடயத்தை மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் நடைமுறைப்படுத்துதல் (இரட்டைச் செயற்பாடு) | இங்கும் கூடுதலான சந்தர்ப்பங்களில் ஓரே விடயங்கள் எவ்வித தொடர்பாடல்களும் இன்றி நடைமுறைப்படுத்தப் படுகின்றது.<br><br>சில பிரிவுகளில் பிரச்சினையான நிலை இல்லை. மத்திய அரசாங்கத்துடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகி ன்றன. | அதிகாரங்கள் தொடர்பாக தெளிவான விளக்கங்கள் தேவை | மத்திய அரசு, மாகாண சபை. |
| 14. | மாகாண சபை முறைக்குள்ளும் சில விடயங்கள் இரட்டைச் செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருத்தல். | அடிக்கடி கலந்துரையாடல்கள் இடம்பெறுவதனால் அவ்வாறு இடம்பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவு. | மாகாண சபைக்குள்ளே கலந்துரையாடலும் அதற்குரிய காலத்தினுள் செயற்படுத்துதலும் | பிரதம செயலாளர் உட்பட அமைச்சுச் செயலாளர்கள். |
| 15. | அதிகாரப் பகிர்வு தொடர்பான சட்டங்களை | மத்திய அரசின் அதிகாரிகளின் | அதிகாரப் பகிர்வு தொடர்பாக அறிவூட்டலை | மத்திய மற்றும் மாகாண |


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

| | | | | |
|---|---|---|---|---|
| | செயற்படுத்துவதற்கு மத்திய அரசின் அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்தல். | எதிர்ப்புக்கள் வெளிவருகின்றன. | மட்டுமன்றி எண்ணங்களிலான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.<br>- சரியான அரசியல் வழிகாட்டலை மேற்கொள்ள வேண்டும்.<br>- இது தொடர்பாக தேசிய மட்டத்தில் உரையாடல் ஒன்று ஏற்படல் வேண்டும். | அரசாங்கங்கள், மாவட்டச் செயலாளர் அரசியல் யாப்பு வகுப்பாளர்கள். |
| 16. | மாகாணத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கு நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காமை. | உரிய பிரதான நடவடிக்கைகள் மத்திய அரசினால் மேற்கொள்ளப் படுகின்றன.<br>உரிய நிதி வசதிகள் கிடைக்கவில்லை.<br><br>அரச சார்பற்ற நிறுவனங்களின் சாதகமான பங்களிப்பு தொடர்பாக அவதானத்தைச் செலுத்த வேண்டும். | நிதி ஆணைக்குழுவின் திறன்களை விருத்தி செய்ய வேண்டும். | மத்திய அரசு, மாகாண சபை, நிதி அமைச்சு. |
| 17. | கொள்கை, திட்டமிடல் மற்றும் வரவு செலவு தயாரிப்பு போன்ற விடயங்கள் வெவ்வேறு பிரிவுகளாகச் செயற்படல், அன்றாட செலவுகள், முதலீட்டுச் செலவுகள் வெவ்வேறாக நடைமுறைப்படுத்துதல். | வேறு வேறாக செயற்படுகின்றது. ஆயினும் தீர்மானம் எடுப்பதற்கான அதிகாரம் இல்லை. | உரிய அதிகாரங்கள் மாகாண சபையின் கீழ் காணப்பட வேண்டும். | மத்திய அரசு, மாகாண சபை, உரிய அமைச்சர் |
| 18. | மாகாண ரீதியான சேவைகளை வழங்கும் போது தனியார் துறை உற்பத்திகளுக்கு அதிக கவனம் செலுத்தாமை. | தற்போது அது தொடர்பாக சரியான செயல்முறை ஒன்று இல்லை. | சரியான முகாமைத்துவத்தின் மூலம் அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்தல். | மாகாண சபை |
| 19. | நிதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக ஒவ்வொரு மாகாண சபையிலிருந்தும் பிரதிநிதி ஒருவரை இணைப்பதிகாரியாக நியமித்தல். | அவ்வாறான பங்களிப்பில்லை. | தற்போதுள்ள நிலைமையை சீர் செய்தல் போதுமானது. மாகாண சபைகளின் தேவைகளை நிதி ஆணைக்குழுவின் மூலம் நெறிப்படுத்தும் செயல்முறையை திறம்பட வைத்தல். | பிரதம செயலாளர். |

© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

# சபரகமுவ மாகாண சபையின் பரிந்துரைகள்

| பிரச்சினை | தற்போதைய சூழ்நிலை | மாற்று வழி | பொறுப்பு |
|---|---|---|---|
| 1. ஒத்தியங்கு பட்டியல் | 1. பிரச்சினைக்குரியது.<br>உ-ம்: சூழல், சுற்றுலா, மின் வலு | தெளிவாக வரைவிலக்கணம் செய்தல்.<br>ஒத்தியங்கு பட்டியலை ஒழித்தல். | மாகாண சபை |
| மாகாண சபைகளுக்கு ஒப்படைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் மத்திய அரசின் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் தேவையற்ற தலையீடுகள் மூலம் மாகாண சபைகளை செயலிழக்கச் செய்வதற்கு முயற்சி எடுத்தல். | அதிகாரங்களைப் பயன்படுத்தும் போது பிரச்சினைகள் எழுதல். | தேவையற்ற தலையீடுகளை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தல். | மத்திய அரசு |
| 2. நிதிப் பிரச்சினைகள் | | | |
| i) ஒப்படைக்கப்பட்ட வருமான ஊற்றுக்கள் போதாமை. | இந்நிலைமையே நிலவுகிறது.<br>இருக்கும் வருமான ஊற்றுக்கள் மீது உள்ள அறவீட்டுத் தடைகள் | உற்பத்தி மற்றும் இறக்குமதி வரிகள் மூலம் மாகாண சபைகளுக்கு குறிப்பிட்டதொரு வருமானத்தைப் பெற்றுக் கொடுக்க வழி செய்தல். | நிதி அமைச்சு |
| ii) அரசின் மானிங்கள் மீது தங்கவேண்டியிருத்தல். | இந்நிலைமையே நிலவுகிறது | வருமானத்தை அதிகரிப்பதற்கு வழி செய்தல். | மாகாண சபை |
| iii) மானியங்கள் வழங்குவதில் அளவுகோற் குறைபாடுகள். | இந்நிலைமையே நிலவுகிறது | இது பற்றிய தீர்மானங்களை எடுக்கும் உரிமையை வழங்குதல். | நிதி ஆணைக்குழு |
| iv) உடன்பட்ட மானியங்களுக்கான நிதியை உரிய நேரத்தில் முழுமையாக வழங்காமை. | இந்நிலைமை நிலவுகிறது | முறையாக நிதியை வழங்குதல். | மாகாண சபை |
| v) அதிகாரிகள் தொடர்பில் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அரச சுற்றுநிருபங்களின் படி செய்ய வேண்டியிருப்பினும் அதற்கான மேலதிக மானியங்கள் கிடைக்காமை | இந்நிலமையே நிலவுகிறது | மேலதிக மானியங்களை வழங்குதல் | திறைசேரி |
| vi) அரசு மற்றும் மாகாண சபை ஊழியர்களின் வசதிகள் மற்றும் பயன்களைப் பெற்றுக் கொடுப்பதிலுள்ள முரண்பாடுகள் | இந்நிலைமையே நிலவுகிறது<br>உ-ம்: அனர்த்தக் கடன்கள், சுகாதாரம், சம்பளங்கள் | சமமான சந்தர்ப்பங்கள் மற்றும் பயன்களை வழங்குதல். | நிதி ஆணைக்குழு மற்றும் மத்திய அரசு |


© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

| | | | |
|---|---|---|---|
| vii) தற்காலத்தில் போதியளவு நிதி கிடைக்காமை. | போதியளவு நிதிகள் கிடைப்பதில்லை. | போதியளவு நிதியைப் பெற்றுக் கொடுத்தல். | உரிய அமைச்சு<br>மாகாண சபை |
| viii) மத்திய அரசின் மூலம் மாகாணத்திற்காக வழங்கும் நிதியைக் குறைத்தல். | மாகாண வருமானம் மீள மாகாணத்திற்குக் கிடைக்காமை | மாகாண வருமானங்களை மாகாணத்திற்குள் முறையான முகாமையின் கீழ் பகிந்தளித்தல் | மத்திய அரசு |
| ix) நிதி ஆணைக்குழு அதிகாரங்களை மீறி செயற்படுதல். | நிதி ஒதுக்குவதில் தெளிவான அளவுகோல்கள் இல்லாமை. | தெளிவான அளவுகோல்களைத் தீர்மானித்தல். | மாகாண சபை மற்றும் மத்திய அரசு |
| x) மக்கள் விகிதாசாரப்படி மாகாணத்திற்கு நிதி ஒதுக்காமை. | மாகாண சபை நடவடிக்கைகளை தேவையின்றி கட்டுப்படுத்துதல். | நிதி சுதந்திரத்தை வழங்குதல். | அரசு<br>தேசிய நிதி ஆணைக்குழு |
| xi) வருடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியை உரிய நிதியாண்டுக்குள் வழங்காமை. | அபிவிருத்தித் திட்டங்கள் மந்தமடைதல் | நிதியை உரிய நேரத்தில், காலத்தில் வழங்குதல். | திறைசேரிச் செயலாளர்<br>நிதியமைச்சர் |
| xii) வருடத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள மானியங்களை இடையில் வெட்டி விடுதல். | இந்நிலைமையே நிலவுகிறது. | திட்டமிட்டபடி நிதியைப் பெற்றுக் கொடுத்தல். | நிதி ஆணைக்குழு<br>திறைசேரி |
| 3. மனித வளங்கள் தொடர்பான பிரச்சினைகள்<br><br>வெற்றிடங்களை நிரப்புவதிலுள்ள தடைகள். | நாடளாவிய சேவைகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதில் மாகாண சபைகளை கவனத்தில் எடுக்காமை. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல். | பொது நிருவாக அமைச்சு |
| பதவிகளும் வெற்றிடங்களும் பூர்த்தி செய்யப்படாமையும் அவை தொடர்பில் வேண்டாத தலையீடகளும் (நாடளாவிய சேவைகளும் பதவிகளும்) | பிரச்சினைக்குரியது | அதிகாரங்களை மாகாண மட்டத்தில் ஒப்படைத்தல் | மதிய அரசு |
| 4. பிரதேச நிருவாக நடவடிக்கைகள் தொடர்பில் உள்ள நிறுவனங்களை மத்திய அரசு பொறுப்பேற்றல் தொடர்பில் பொறுப்புக் கூறுபவர்கள் | மாகாண சபை நடவடிக்கைகளை பிரதேச செயலாளர்கள் கவனத்தில் எடுக்காமை. | மீண்டும் பிரதேச செயலாளர் காரியாலயங்களை மாகாண சபைகளின் கீழ் கொணர்தல். | பொது நிருவாக அமைச்சு |

© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

| | | | |
|---|---|---|---|
| யார் என தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை.<br><br>உ-ம்:<br>i) “மகநெகும” (வீதி மேம்பாடு) மற்றும் “கமநெகும“ (கிராம மேம்பாடு) போன்ற வெளிநாட்டு உதவி பெறும் கருத்திட்டங்கள் மேலிருந்து கீழ் நோக்கிய அடிப்படையிலேயே நடைமுறைப்படுத்தப்படுகின்றன. | உடன்பட முடியாது | | |
| 02. | மொழிக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவர இயலாமை. | கொள்கை பிரச்சினைக்குரியதாக உள்ளது. | கல்விக் கொள்கைக்கு உள்ளடக்கப்படல் - குறுகிய காலத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல். | மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபை |
| 03. | 154உ உறுப்புரையின் கீழ் அமைச்சர் ஐந்து பேரை நியமிக்கும் எல்லை அதை விட அதிகரிக்கப்பட வேண்டும். | நடைமுறையிலுள்ள நிலைமை நிகழ்காலத்தில் பொருத்தமற்றது. | அமைச்சரவை 7ஆக அதிகரித்தலும் - யாப்புக்குட்படுத்தலும் விடயங்களைப் பிரித்தலும் நிறுத்தப்பட வேண்டும். | யாப்பு தயாரிப்பு |
| 04. | உள்ளூராட்சி மன்ற முக்கியஸ்தர்கள், மாகாண சபைக்கும், மாகாண சபை முக்கியஸ்தர்கள் பாராளுமன்றத்துக்கும் உள்வாங்குவதற்கான சட்டங்களை நிறைவேற்றுதல். | தற்போதைக்கு இல்லை. | பிரதிநிதித்துவத்தை ஏற்படுத்துவதற்காக யாப்பு சீர்திருத்தங்கள் | யாப்பு தயாரிப்பு |
| 05. | மத்திய அரசின் அதிகாரங்கள், மாகாண சபைகளின் அதிகாரங்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்கள் தொடர்பாக குறிப்பிட்ட பட்டியல் தயாரித்தல். | பிரச்சினைக்குரியது | தெளிவான பொறுப்பு அட்டவணையைத் தயாரித்தல் | மத்திய அரசாங்கம் மகாண சபை உட்பட்ட குழு (அனைத்து அரசியல் கட்சிகளின் பங்குபற்றலுடன்) |
| 06. | 154ஓ,154ஓ, 154ஏ,154ந1 உறுப்புரைகள் தொடர்பான மீள் திருத்தச் சட்டங்கள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | அதிகாரப் பகிர்வு தொடர்பான நம்பிக்கை இன்மை (சுயாதீனத் தன்மை இன்மை) | பொருத்தமான விதத்தில் சீர்திருத்த வேண்டும். சுயாதீனத் தன்மையைப் பேணக் கூடிய குழு | யாப்பு தயாரிப்பு |
| 07. | கங்கைகளுக்கு அருகாமையில் மணல் அகழ்வு, நீர் தொடர்பான செயற்திட்டங்களைச் செயற்படுத்தும் போது மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைக்கும் - | பிரச்சினைக்குரியது. | மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபைக்கிடையில் புரிந்துணர்வு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளல். | மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | மத்திய அரசுக்கு இடையிலும் அதிகாரங்களைச் செயற்படுத்துவது தொடர்பாக பிணக்குகள் ஏற்படல். | | | |
| 08. | அரச சேவைகள் நியமனங்கள், இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு தொடர்பாக மத்திய அரசிற்கும், மாகாண சபைக்கும் இடையில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுதல். | எதிர் கருத்துக்கள் உள்ளன. | கலந்துரையாடி இணக்கத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். | மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபை |
| 09. | மாகாண சபைக்குள் தமது பிரதிநிதிகள் இல்லாத நிலப்பரப்பில் வாழும் மக்களினதும் குலப்பண்மைத்துவமுடைய குழுக்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | தற்போதைக்கு பிரதிநிதித்துவம் இல்லை. | மாற்று முறை ஒன்றை அறிமுகப்படுத்தல் | அரசியல் அமைப்பு |
| 10. | விசேட திறமைகளை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது மாகாண சபையை பலப்படுத்துவதற்குள்ள ஒரு தடையாகும். | இந் நிலைமை உள்ளது. | மத்திய அரசாங்கம் நியாயமான முறையில் பகிர்தல் மற்றும் விசேட திறமைகளைப் பெற்றுக்கொடுக்க ஏற்பாடுகளை செய்தல் | மத்திய அரசாங்கம் |
| 11. | மத்திய அரசின் நிருவாக சேவைச் சபையின் ஊடாக மாகாண சபைக்குரிய பதவிகள் தொடர்பாக அனுமதியை வழங்காமை. | இந் நிலைமை அதிகம் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. | மத்திய அரசாங்க நிருவாகச் சேவைப் பிரிவில் நேர்மையான முறையில் செயல்படுதல் | மத்திய அரசாங்கம் |
| 12. | மாகாண சபைகளுக்கு வழங்கப்படும் அதிகாரங்களை மிஞ்சும் வகையில் வெளிவாரி அபிவிருத்திகளை இடைநிறுத்துதல். | இந் நிலைமை உள்ளது | அவ்வாறு செய்யாதிருப்பது மற்றும் தற்போதைக்கு நிலமையை மாற்றுதல் | மத்திய அரசாங்கம் |
| 13. | மாகாண சபைகளுக்கிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கான கட்டமைப்பை ஏற்படுத்துதல். | இந்நிலமை உள்ளது. | ஏற்றத் தாழ்வுகளை இல்லாமல் செய்தல். | மத்திய அரசாங்கம் ஏற்படுத்தும் குழுவின் மூலமாக |

**20 வருட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய பரிந்துரைகள்**
**2ஆம் படிமுறை**
**ஊவா மாகாண சபையின் பரிந்துரைகள் இலக்கம் - 03**

| | பிரச்சினை | தற்போதுள்ள நிலைமை | மாற்று வழிகள் | பொறுப்பு |
|---|---|---|---|---|
| 01. | மத்திய அரசாங்கத்தின் அரச அதிகாரிகளுடன் ஒப்பிடுகையில் மாகாண சபை அரச அதிகாரிகளை குறைமதிப்பீடு செய்தல். | ஆம் | இது மாற வேண்டும் | மாகாண அமைச்சு கொழும்பு |
| 02. | ஒரே விடயத்தை மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் நடைமுறைப்படுத்துதல் (இரட்டைச் செயற்பாடு) | ஆம் | இவ்விடயம் ஆழமாக ஆராயப்பட்டு ஒருவருக்குப் பொறுப்புக் கொடுத்தல் | மாகாண அமைச்சு கொழும்பு |
| 03. | மாகாண சபை முறைக்குள்ளும் சில விடயங்கள் இரட்டைச் செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருத்தல். | ஆம் | இவ்விடயம் ஆழமாக ஆராயப்பட்டு ஒருவருக்குப் பொறுப்புக் கொடுத்தல் | மாகாண சபை பிரதான செயலாளர் |
| 04. | அதிகாரப் பகிர்வு தொடர்பான சட்டங்களை செயற்படுத்துவதற்கு மத்திய அரசின் அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்தல். | ஆம் | தேசிய மட்டத்தில் மாகாண அமைச்சு தலையிட்டுத் தீர்வு காணல் | மாகாண அமைச்சு கொழும்பு |
| 05. | தேசிய பாடசாலை கள் மற்றும் தேசிய வைத்திய சாலைகளின் நிருவாகத்தை மீண்டும் மாகாண சபை விடயத்தினுள் உள்ளடக்குதல். | ஆம் | மாகாண சபைகளுக்குப் பொறுப்புக் கொடுத்தல் | மாகாண அமைச்சு கொழும்பு<br>கல்வி அமைச்சு |
| 06. | பயணிகள் போக்குவரத்துத் தொடர்பில் மத்திய அரசிற்கும் மாகாண சபைக்கும் இடையில் காணப்படும் பிணக்குகளைத் தீர்த்தல். | ஆம் | மாகாண சபைகளுக்குப் பொறுப்புக் கொடுத்தல் | மாகாண அமைச்சு கொழும்பு போக்குவரத்து அமைச்சு |
| 07. | மாகாண சபைகளால் சேகரிக்கப்படும் வரி நிதிகள் உட்பட நன்கொடைகள் | ஆம் | அவ்வப்போது கொடுப் பனவுகள் தாமதியாது கொடுத்தல் வேண்டும். | மாகாண சபை நிதி செயலாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குதலைத் தாமதித்தல் தவிர்க்கப்பட வேண்டும். மாகாண மட்ட அபிவிருத்தி யின் போது உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேவையான ஒத்துழைப்புக்கள் உரிய முறையில் வழங்கப்படுதல். | | | |
| 08. | 13வது அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தில் வழங்கப்பட்ட அதிகாரங் களை மீண்டும் பெற்றுக் கொள்வதன் மூலம் மாகாண சபைகள் முறைமை பிரச்சினைக் குரிய காரணியாதல். | ஆம் | 13வது அரசியலமைப்பில் உள்ளவாறு அதிகாரங்களை சரியான முறையில் பகிர்ந்தளித்தல் | தேசிய அரசாங்கம்<br>ஜனாதிபதி |
| 09. | மத்திய அரசிலிருந்து மாகாண சபைக்கும், மாகாண சபையிலிருந்து மத்திய அரசுக்கும் ஒருங்கிய நிரலினூடாக இடம்பெற வேண்டியது இவற்றுக்கிடையே சமமான அதிகாரங்களை உருவாக்குவதேயாகும். ஆயினும், இலங்கையில் கடந்த 20 வருடங்களாக இடம்பெற்றது என்ன வெனில் மாகாண சபை அதிகாரப் பகிர்விற்குப் பதிலாக வழங்கப்பட்ட அதிகாரங்களையும், மீண்டும் மத்திய அர சிற்கு பெற்றுக் கொண்ட மையேயாகும். அதிகாரப் பகிர்வு செய்த இந்தியா உட்பட ஏனைய நாடு களின் எண்ணங்களின் படி ஒருங்கிய நிரல் அபிவிருத்தி அடைவதே யாகும். இது இலங்கை க்கு உட்படுத்திக் கொள்வது எவ்வாறு? | ஆம் இது முக்கியம் | இதய சுத்தியுடன் அதிகாரப் பரவலாக்கல் செய்வது உச்ச நீதிமன்ற உதவியைப் பெற்றுக்கொள்ளல் | பாராளுமன்றம்<br>ஜனாதிபதி |
| 10. | ஆளுநரின் பாத்திரம் தொடர்பாக மீண்டும் விமர்சித்துப் பார்த்தல். | ஆம் | மாகாண சபைகளுடன் அதிக ஸ்நேகபூர்வமாகவும் பொறுப்புடனும் செயற்படல் | ஜனாதிபதி – முதலமைச்சர் - மகாணசபை உறுப்பினர்கள் |
| 11. | மொழிக் கொள்கையை மாகாண சபைக்குள் மிகுந்த அரசியல் அதிஷ்டானத்துடன் செயல்படுத்துதல். | ஆம் | சகல இனங்களுக்கும் ஏற்றவாறு தமிழ் மொழியை அரச கரும மொழியாக அமுல்படுத்தல் | அரசாங்கம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | வெளிநாட்டு நன்கொடைகளை நேரடியாக மாகாண சபைகள் பெற்றுக் கொள்ளக் கூடிய ஆற்றலை ஒப்படைத்தல். | இல்லை. | பிராந்திய மட்டத்தில் - மாகாண மட்டத்தில் நன்கொடைகள் நேரடியாக கிடைக்க வழி வகுத்தல் | அரசாங்கம் நிதி அமைச்சு |
| 13. | மாகாண சபை சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சை மத்திய அரசின் அமைச்சிற்கு சமமாகப் பலப்படுத்துதல். | இல்லை | அதிகாரப் பரவலாக்கல் | மத்திய அரசாங்கம் |
| 14. | மாகாண சபையில் காணப்படும் பல்வேறு வளங்கள் மாகாணத்தின் நன்மை கருதி பயன்படுத்தி முடியாத வகையில் மத்திய அரசினால் விதிக்கப்பட்டுள்ள சட்டங்களை அகற்றுதல். | ஆம் | மாகாண சபைகளுக்கு அதிக அதிகாரங்கள் வழங்குவதுடன் | ஜனாதிபதி மத்திய அரசாங்கம் |
| 15. | மாகாண சபைகளின் முதலமைச்சர்களின் மற்றும் சம்மேளனங்களில் வருடாந்தம் மேற்கொள்ளும் தீர்மானங்களை செயற்படுத்துதல் மற்றும் சாராம்சப்படுத்துதல் தொடர்பாக அதிகாரக் கட்டமைப்பொன்றை ஏற்படுத்துதல். | ஆம் | இது சட்டரீதியான அமைப்பாக இருத்தல் வேண்டும். | ஜனாதிபதி மத்திய அரசாங்கம் |

**20 வருட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய பரிந்துரைகள்**
**2ஆம் படிமுறை**
**ஊவா மாகாண சபையின் பரிந்துரைகள் இலக்கம் - 04**

| | பிரச்சினை | தற்போதுள்ள நிலைமை | மாற்று வழிகள் | பொறுப்பு |
|---|---|---|---|---|
| 01. | மாகாணத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கு நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காமை. | சந்தோசமடையக் கூடியது | மாகாணத்திற்கு வழங்கப்பட்ட விடங்களுக்காக வேறு அமைச்சுகள் மூலம் செய்யப்படுகின்ற செலவுகள் தடை செய்து மாகாண சபைக்கு நிதி பெற்றுக் கொடுத்தல் | மத்திய அரசின் நிதி அமைச்சர் |
| 02. | கொள்கை, திட்டமிடல் மற்றும் வரவு செலவு தயாரிப்பு போன்ற விடயங்கள் வெவ்வேறு பிரிவுகளாகச் செயற்படல், அன்றாட செலவுகள், முதலீட்டுச் செலவுகள் வெவ்வேறாக நடைமுறைப்படுத்துதல். | நிதி ஆணைக்குழு அங்கிராத்திற் கேற்ப கொண்டுச் செல்லல் | மாகாணசபையின் விருப்பதிற்கேற்ப செயல்படுவதற்கு சந்தர்ப்பபம் பெற்றுக் கொடுக்க வேண்டும். | மத்திய அரசின் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |
| 03. | மாகாண ரீதியான சேவைகளை வழங்கும் போது தனியார் துறை உற்பத்திகளுக்கு அதிக கவனம் செலுத்தாமை. | செயற்படுத்திய திட்டங்களை வகுத்து அனுமதி மற்றும் நிதி வசதிகளை பெற்றுக் கொடுத்தல் | மாகாண சபை மூலம் முன்வைக்கப்பட்ட திட்டங்கள் தாமதமின்றி அனுமதியை பெற்றுக் கொடுத்தல் | மத்திய அரசின் அமைச்சு குழு |
| 04. | நிதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக ஒவ்வொரு மாகாண சபையிலிருந்தும் பிரதிநிதி ஒருவரை இணைப்பதிகாரியாக நியமித்தல். | தற்போதைக்கு நிதி ஆணைக்குழுவின் அழுத்தம் இருத்தல் | அவ்வாறான அழுத்தங்களை அமைச்சர் வழிநடத்தலும், அங்கிகாரம் பெற்றுக் கொடுத்தலும் | நிதி ஆணைக்குழு |
| 05. | மாகாண சபைகளால் சேகரிக்கப்படும் வரி நிதிகள் உட்பட நன் கொடைகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குதலைத் தாமதித்தல் தவிர்க்கப்பட வேண்டும். மாகாண மட்ட அபிவிருத்தியின் போது உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேவையான | தற்போதைக்கும் தாமதத்துடன் செயற்படல் | தாமதமின்றி பெற்றுக் கொடுக் வேண்டும் | மாகாண சபை, நிதி அமைச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ஒத்துழைப்புக்கள் உரிய முறையில் வழங்கப்படுதல். | | | |
| 06. | மாகாணத்திற்கே உரிய பொருளாதார மற்றும் கலாசார வளங்கள் தொடர்பாக தரவுகளைச் சேகரிக்கின்ற, ஆய்வுகள் செய்கின்ற உரிய செயற்திட்டங்கள் ஊடாக பிரதிபலன்மிக்க நிறுவனக் கட்டமைப்பை கட்டியெழுப்புதல். | தற்போதைக்கு இல்லை | அத்தியவசியமானது, தயாரிக்க வேண்டும். | பிரதான செயலாளர் |
| 07. | அறவிடப்படுகின்ற வரிகளை பகிர்வது தொடர்பாக நிதி ஆணைக்குழுவிற்கோ மாகாண சபைக்கோ அதிகாரமின்மை. | குறிப்பானதல்ல | குறிப்பானதல்ல | குறிப்பானதல்ல |
| 08. | வருடாந்த ஒதுக்கீடுகள் உரிய முறையில், உரிய கால அட்டவணைக்கு அமைவாக மாகாண சபைக்கு பெற்றுக் கொடுத்தல். | தற்போதைக்கு இல்லை | அட்டவணையினடிப்படையில் நிதி சரியான நேரத்திற்கு வழங்க வேண்டும். | நிதி ஆணைக்குழு |

**20 வருட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய பரிந்துரைகள்**
**2ஆம் படிமுறை**
**வடமேல் மாகாண சபையின் பரிந்துரைகள் இலக்கம் - 01**

| பிரச்சினை | தற்போதுள்ள நிலைமை | மாற்று வழிகள் | பொறுப்பு |
|---|---|---|---|
| 01. ஓரிடத்தில் குவிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பகிர்வதற்கு விருப்பமின்மை அல்லது எண்ணமின்மை. | 13வது அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை ஆட்சிக்கு வந்த எந்தவொரு அரசும் இதுவரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை.<br>நிதி வளங்களை போதுமான அளவு பெற்றுக் கொடுக்காமை.<br>கட்சி அரசியலில் தேவையான சந்தர்ப்பங்களை பெற்றுத் தராமை.<br>பாராளுமன்ற சட்டங்கள் மூலம் அதிகாரங்களை மீண்டும் பெற்றுக் கொள்ளல். | எம்மிடமுள்ள விடயங்களை செயற்படுத்துவதற்கு நியதிச் சட்டங்களைத் தயாரித்தல்.<br>மாகாணத்திலிருந்து மத்திய அரசு பெறும் வரி நிதியிலிருந்து குறிப்பிட்டதொரு வீதம் பெற்றுத் தரல்.<br>அனைத்து மாகாண சபைகளும் கூட்டாக தமது அரசியற் கட்சிகளை தெளிவுபடுத்துவதும் உடன்பாட்டுக்கு வருவதும். | விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர்கள்.<br>முதலமைச்சர்களின் சம்மேளனம்.<br>மாகாண சபைகளின் கட்சித் தலைவர்களை உள்ளடக்கிய குழுவொன்றின் இணக்கப்பாட்டுடன் அரசியற் தலைமைக்கு தெளிவுபடுத்தல். |
| 02. அறவிடப்படும் வரி தொடர்பாக நிதி ஆணைக்குழுவிற்கோ மாகாண சபைக்கோ அதிகாரமின்மை. | அறவிடப்படும் வரி அளவு மற்றும் தேவைப்பாட்டின் அடிப்படையில் அல்லாது வேறு விடயங்களுக்கு நிதியைப் பெற்றுக் கொடுத்தல். | வரிகளில் குறிப்பிட்டதொரு வீதத்தை வழங்குதல் | முதலமைச்சர்கள், நிதி ஆணைக்குழு மற்றும் திறைசேரி |
| 03. இரண்டு தசாப்தங்களாக மாகாண சபைகள் செயற்பட்டாலும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக மத்திய அரசின் தலைமைக்கு அரசியல் அதிஷ்டானம் இன்மை. | சர்வதேச அழுத்தத்தின் காரணமாக அரச கட்சி மற்றும் எதிர்க்கட்சி உட்பட கட்சிகளின் தலைமைத்துவங்கள் 13வது அரசியல் யாப்பிற்கு உடன்பட்டுள்ளனர். | மாகாண சபைகளை வலுப்படுத்துவதற்குத் தேவையான சட்ட ரீதியான நிதி ஒதுக்கீடுகள் மற்றும் செயல்முறைகள் தயாரிப்பதற்கும் ஒருங்கியை நிரலில் காணப்படும் எமக்குத் தேவையான விடயங்களை மாகாண சபை நிரலினுள் உள்ளடக்குவதற்கான வேண்டுகோளை விடுத்தல். | ஜனாதிபதி |

| | | | | |
|---|---|---|---|---|
| 04. | மாகாண சபைக்குள் இருக்கும் சிறு இனக் குழுக்களின் அபிலாஷைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த முடியாதுள்ளமை. | இது இவ்வாறே செயற்படுகிறது. | இன ரீதியான வீதத்தின் அடிப்படையில் நியமிக்கப்படும் அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக் கொடுத்தல். | மத்திய அரசு, கட்சித் தலைவர்கள், இனத் தலைவர்கள் |
| 05. | மேலிருந்து கீழான செயல்திட்டம் தயாரிக்கும் தொடர்ச்சியான படிமுறை உதாரணம்: வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு, கம நெகும, மக நெகும போன்ற வெளிநாட்டு நிதியுதவியின் மூலம் செயற்படுத்தும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவது இன்றும் மேலிருந்து கீழாகவேயாகும். | மாகாண சபை விடயங்களுக்காக அந்நிறுவனங்கள் தெளிவு பெறாமலே மத்திய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள அமைச்சினூடாக ஒதுக்கீடுகள் மற்றும் செயற்திட்டங்களைப் பெற்றுக் கொடுத்தல். | தேசிய மட்டத்திலான திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டியது பிரதேச மற்றும் மாகாண மட்டத்தில் தயாரிக்கப்படும் திட்டங்களின் அடிப்படையிலேயே. | திட்டங்களை அமுல்படுத்தும் அமைச்சு, திட்டமிடல் ஆணைக்குழு |
| 06. | பொதுச் சேவை முக்கிய விடயங்களை மத்திய அரசின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதோடு அபிவிருத்திச் செயற்பாட்டின் இறுதிப் பலன்கள் தொடர்பாக பொறுப்புக் கூறுபவர்கள் யாரென்பது பற்றி தெளிவாகக் குறிப்பிடப்படாமை. | இந்நிலைமை படிப்படியாக வளர்ச்சியடைந்து வருகின்றது. | வழங்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக தற்போதுள்ள நிலைமையை சட்ட ரீதியாக உரிய முறையில் தெளிவுபடுத்துதல். | பாராளுமன்றம் |
| 07. | சுய ஜீவனோபாயம் தொடர்பான தீர்மானங்களின் போது பிரஜைகளின் கருத்துக்களுக்கு இடமின்மை. | மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்காக பல்வேறு விதமான உபாய மார்க்கங்களை பயன்படுத்தினாலும் அது தொடர்பாக மக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்குள்ள தடைகள். | நம்பிக்கையைக் கட்டியெழும்பும் விதத்தில் மக்களிடமிருந்து கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஒரு செயல்முறையைத் தயாரித்துக் கொள்ளல். | மத்திய அரசு / மாகாண சபை / பிரதேச சபை |
| 08. | மாகாண சபையின் கீழ்க் காணப்பட்ட அரச நிருவாகம் மற்றும் கமநலச் சேவைகள் விடயப் பரப்பை மீண்டும் மாகாண சபைக்குள் உள்ளடக்குதல். | மத்திய அரசின் கட்டுப்பாட்டின் கீழ் எடுத்ததன் பின் மிகவும் வலுமிக்கதாக்குவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுத்தல். | அரச அதிபர், பிரதேச செயலாளர், கிராம சேவகர் மற்றும் ஒருங்கிய நிரலில் குறிப்பிடப்படுகின்ற உத்தியோகத்தரகளை மாகாண சபையின் கீழ் மீண்டும் பெற்றுக் கொள்ளல். | மத்தி அரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| 09. | அரச சேவை நியமனங்கள், இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு தொடர்பாக மத்திய அரசிற்கும், மாகாண சபைக்கும் இடையில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுதல். | காணப்பட்ட முரண்பாடுகள் கூடுதலான அளவில் தீர்க்கப்பட்டுள்ளது. | நியமனங்கள், இடமாற்றங்கள் மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பாக மாகாண சபைகளின் உடன்பாட்டுடன் தேசியக் கொள்கை தயாரித்தல். | மாகாண சபை மற்றும் மத்திய அரசு |
| 10. | தேசிய பாடசாலைகள் மற்றும், தேசிய வைத்தியசாலைகளின் நிருவாகத்தை மீண்டும் மாகாண சபை விடயத்தினுள் உட்படுத்துதல். | - | தேசிய பாடசாலைகளை மாகாண சபைகளுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும். | கல்வி அமைச்சு |
| 11. | பயணிகள் போக்குவரத்துத் தொடர்பில் மத்திய அரசிற்கும் மாகாண சபைக்கும் இடையில் காணப்படும் பிணக்குகளைத் தீர்த்தல். | மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் | அனைத்து மாகாண சபைகளும் ஒன்றிணைந்து தேசியக் கொள்கையொன்றைத் தயாரித்தல். | மாகாண சபை மற்றும் போக்குவரத்து அமைச்சு |
| 12. | மாகாண சபைக்குள் தமது பிரதிநிதிகள் இல்லாத நிலப்பரப்பில் வாழும் மக்களினதும் குலப்பண்மைத்துமுடைய குழுக்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | இப்பிரச்சினை தானாகவே தீர்ந்த வண்ணமுள்ளது. | - | - |
| 13. | மாகாணத்திற்கே உரிய பொருளாதார மற்றும் கலாசார வளங்கள் தொடர்பாக தரவுகளைச் சேகரிக்கின்ற, ஆய்வுகள் செய்கின்ற உரிய செயற்திட்டங்கள் ஊடாக பிரதிபலன்மிக்க நிறுவனக் கட்டமைப்பை கட்டியெழுப்புதல். | தற்போதைக்கு அவ்வாறானதோர் கட்டமைப்பு இல்லை. | அவ்வாறன கட்டமைப்பை ஏற்படுத்துதல். | மாகாண சபை |
| 14. | தேசியக் கொள்கை என்ற எண்ணம் சரியான பொருள்பட கூறப்பட்டிருக்காமை. | சரி | தேசியக் கொள்கை என்பது ஊர்ஜிதமாக தெளிவுபடுத்தப்பட வேண்டும். | பாராளுமன்றம். |

**20 வருட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய பரிந்துரைகள்**
**2ஆம் படிமுறை**
**வடமேல் மாகாண சபையின் பரிந்துரைகள் இலக்கம் - 02**

| பிரச்சினை | | தற்போதுள்ள நிலைமை | மாற்று வழிகள் | பொறுப்பு |
|---|---|---|---|---|
| 01. | தேசியக் கொள்கை என்ற எண்ணம் சரியான பொருள்பட கூறப்பட்டிருக்காமை. | தெளிவான கொள்கை இல்லாத காரணத்தினால் அபிவிருத்தியை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாமை.<br>அரசுகள் மற்றும் அமைச்சர்களின் மாற்றங்கள் காரணமாக கொள்கைகளும் மாற்றப்படுகின்றமை. | அனைத்துப் பிரிவுகளுக்கும் பொதுவான தேசியக் கொள்கைகளை நிறுவுதல் | அமைச்சுக் குழு |
| 02. | மொழிக் கொள்கையை நடைமுறைக்குக் கொண்டுவர இயலாமை. | மொழிக் கொள்கை செயல்முறையில் நடைமுறைப்படுத்தாத காரணத்தினால் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையாத அதே வேளை அபிவிருத்திக்கும் தடையாக இருத்தல். | ஆரம்பக் கல்வியிலிருந்து தமிழ் மொழியை கட்டாய மொழியாக நடைமுறைப்படுத்துதல்.<br>அரச அதிகாரிகளுக்கிடையில் தமிழ் மொழியை கட்டாயப்படுத்துதல். | அனைத்து அமைச்சு செயலாளர்கள் மற்றும் திணைக்கள பிரதானிகள் |
| 03. | 154உ உறுப்புரையின் கீழ் அமைச்சர் ஐந்து பேரை நியமிக்கும் எல்லை அதை விட அதிகரிக்கப்பட வேண்டும். | சில பிரிவுகளில் போதுமான அளவு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கான குறைந்த அளவு கவனிப்பிற்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை | மாகாண அமைச்சு தீர்மானங்களை எடுத்தல், விடயங்கள் தொடர்பாக ஆராய்ந்த பின் நடைமுறைப்படுத்துதல் | எண்ணிக்கையைத் தீர்மானித்தல் மற்றும் விடயங்களைத் தீர்மானத்தில் பாராளுமன்றத்தின் மூலம் |
| 04. | உள்ளூராட்சி மன்ற முக்கியஸ்தர்கள், மாகாண சபைக்கும், மாகாண சபை முக்கியஸ்தர்கள் பாராளுமன்றத்துக்கும் உள்வாங்குவதற்கான சட்டங்களை நிறைவேற்றுதல். | பாராளுமன்ற அமைச்சர் மற்றும் உறுப்பினர்கள் பிரதேச ரீதியாக தலையிடுவதனால் பிரச்சினைகள் ஏற்படல்.<br>மாகாண சபைகளின் கருத்துக்கள் பாராளுமன்றத்தில் பிரதிபலிக்காமை. | அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் ஊடாக பங்களிப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கான முறையொன்றை ஏற்படுத்துதல். | பாராளுமன்றம் |
| 05. | மத்திய அரசின் அதிகாரங்கள், மாகாண சபைகளின் அதிகாரங்கள் மற்றும் உள்ளூராட்சி | அபிவிருத்திக்குத் தடையாக இருத்தல், கருத்து வேறுபாடுகள் ஏற்படல், | அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தின் ஊடாக உறுதியான அதிகாரப் பட்டியல் ஒன்றைத் | பாராளுமன்றம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | மன்றங்களின் அதிகாரங்கள் தொடர்பாக குறிப்பிட்ட பட்டியல் தயாரித்தல். | அதிகாரங்கள் தெளிவில்லாமல் காணப்படல். | தயாரித்தல் | |
| 06. | 154ஒ,154ஓ, 154ஏ,154ந1 உறுப்புரைகள் தொடர்பான மீள் திருத்தச் சட்டங்கள் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். | அதிகாரப் பகிர்வு தொடர்பான நம்பிக்கை இழத்தல்.<br>நிதி ஆணைக்குழுவிடம் எதிர்பார்த்த கடமைகள் நிறை வேற்றப்படாமை | மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் கிடைக்கக் கூடிய விதத்தில் அரசியல் அமைப்பை சீர்திருத்துதல். | பாராளுமன்றம் |
| 07. | கங்கைகளுக்கு அருகாமையில் மணல் அகழ்வு, நீர் தொடர்பான செயற்திட்டங்களைச் செயற்படுத்தும் போது மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைக்கும் - மத்திய அரசுக்கு இடையிலும் அதிகாரங்களைச் செயற்படுத்துவது தொடர்பாக பிணக்குகள் ஏற்படல். | அபிவிருத்திக்குத் தடையாக இருத்தல். மத்திய அரசுக்கும் மாகாண சபைக்குமிடையில் முறுகல் நிலை ஏற்படல். | தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை மாகாண சபைக்கு வழங்குதல்.<br>வருமானத்தில் குறிப்பிட்டதோர் சதவீதத்தை மாகாண சபைக்கு பெற்றுக் கொடுத்தல் | பாராளுமன்றம் / மாகாண சபை |
| 08. | அரச சேவை நியமனங்கள், இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு தொடர்பாக மத்திய அரசிற்கும், மாகாண சபைக்கும் இடையில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுதல். | கருமங்கள் தாமதமாக இடம்பெறுவதால் அபிவிருத்தி தடைப்படல்.<br>அரச சேவையின் தரம் குறைதல் | மாகாணத்தினுள் அனைத்து நியமனங்கள் மற்றும் இடமாற்றங்கள் மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவிற்கு வழங்குதல். | தேசிய அரச சேவைகள் ஆணைக்குழு |
| 09. | மாகாண சபைக்குள் தமது பிரதிநிதிகள் இல்லாத நிலப்பரப்பில் வாழும் மக்களினதும் குலப்பண்மைத்துவமுடைய குழுக்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | அபிவிருத்தியில் சமமான சந்தர்ப்பங்கள் கிடைக்காமை.<br>சிறுபான்மையினர் திருப்தியடைய முடியாமை. | விகிதாசார அடிப்படையில் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக் கொடுத்தல்.<br>சமமான அபிவிருத்தி சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுத்தல்.<br>அரசியல் யாப்பு சீர்திருத்தம் | பாராளுமன்றம்,<br>மாகாண அரசியல் அதிகார சபை மற்றும் அதிகாரிகள் |

**20 வருட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய பரிந்துரைகள்**
**2ஆம் படிமுறை**
**வடமேல் மாகாண சபையின் பரிந்துரைகள் இலக்கம் - 03**

| பிரச்சினை | தற்போதுள்ள நிலைமை | மாற்று வழிகள் | பொறுப்பு |
|---|---|---|---|
| 01. மத்திய அரசாங்கத்தின் அரச அதிகாரிகளுடன் ஒப்பிடுகையில் மாகாண சபை அரச அதிகாரிகளை குறைமதிப்பீடு செய்தல். | வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை மீண்டும் பெற்றுக் கொள்வது தொடர்பாக சுற்றுநிருபங்களை வெளியிடுவதன் மூலம் மாகாண அதிகாரிகளைக் கட்டுப்படுத்துதல் | மனப்பாங்குகளில் மாற்றத்தை ஏற்படுத்துதல். மத்திய அரசுக்கும் மாகாண சபைக்குமிடையில் அடிக்கடி கலந்துரையாடல்களை நடத்துதல். | அரசியல் தலைமைத்துவம் - தேசிய / மாகாண நிருவாக தலைமைத்துவம் - தேசிய / மாகாண |
| 02. ஒரே விடயத்தை மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் நடைமுறைப்படுத்துதல் (இரட்டைச் செயற்பாடு) | எல்லா விடயங்கள் தொடர்பாகவும் இரட்டைச் செயற்பாடு காணப்படல் (சமுர்தி – கல்வி – சமூக சேவை) | மாகாண சபை விடயங்கள் தொடர்பாக நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தை தெளிவாகப் புரிந்து கொண்டு பெற்றுக் கொள்ளல். | அரசியல் தலைமைத்துவம் - தேசிய / மாகாண நிருவாக தலைமைத்துவம் - தேசிய / மாகாண |
| 03. மாகாண சபை முறைக்குள்ளும் சில விடயங்கள் இரட்டைச் செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருத்தல். | ஒரே விடயங்களை அமைச்சுக்கள் / திணைக்களங்கள் மற்றும் வேறு நிறுவனங்கள் ஊடாக நடைமுறைப்படுத்து தல் | குறிப்பிட்ட விடயம் தொடர்பாக சிறப்புத் தேர்ச்சியுடைய நிறுவனங்களுக்கு மாத்திரம் உரிய விடயத்தை ஒப்படைத்தல் | மாகாண அமைச்சுக் குழு |
| 04. அதிகாரப் பகிர்வு தொடர்பான சட்டங்களை செயற்படுத்துவதற்கு மத்திய அரசின் அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்தல். | பல்வேறு விதமான சட்டதிட்டங்கள் / சுற்றுநிருபங்கள் ஊடாக மத்திய அரசின் மூலம் நடைமுறைப்படுத்தப் படல் (விசேடமாக ஒருங்கியை நிரல்) | மாகாண சபை விடயங்கள் தொடர்பாக நியதிச் சட்டங்களைத் தயாரித்தல் | மாகாண அமைச்சு செயலாளர்கள், திணக்கள பிரதானிகள், மத்திய அரசின் அதிகாரிகள் |
| 05. தேசிய பாடசாலைகள் மற்றும் தேசிய வைத்திய சாலைகளின் நிருவாகத்தை மீண்டும் மாகாண சபை விடயத்தினுள் உள்ளடக்குதல். | சிறப்பாகச் செயற்படும் பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகள் தேசிய என்ற பெயரில் மத்திய அரசின் கீழ் எடுத்துக் கொள்ளல் | விடயம் தொடர்பாக நியதிச் சட்டங்களை உருவாக்குதல், மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்கு கொண்டு வருவது தொடர்பில் எதிர்ப்பைத் தெரிவித்தல். | மாகாண அமைச்சுக் குழு மற்றும் அதிகாரிகள் |
| 06. பயணிகள் போக்குவரத்துத் தொடர்பில் மத்திய | மாகாணங்களுக்கு இடையிலான பயணிகள் | தேசியக் கொள்கையொன்றைத் தயாரித்தல். | தேசிய அரசின் உரிய அமைச்சு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அரசிற்கும் மாகாண சபைக்கும் இடையில் காணப்படும் பிணக்குகளைத் தீர்த்தல். | போக்குவரத்து தொடர்பில் முரண்பாடுகள் தொடர்ச்சியாகக் காணப்படல் | | |
| 07. | மாகாண சபைகளால் சேகரிக்கப்படும் வரி நிதிகள் உட்பட நன்கொடைகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குதலைத் தாமதித்தல் தவிர்க்கப்பட வேண்டும். மாகாண மட்ட அபிவிருத்தியின் போது உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேவையான ஒத்துழைப்புக்கள் உரிய முறையில் வழங்கப்படுதல். | மாகாண சபைகளுக்குத் தேவைப்படும் நிதிகள் போதுமான அளவு இல்லாத காரணத்தினால் உள்ளூராட்சி மன்றங்களுக்குக் கிடைக்க வேண்டிய நிதிகள் மாகாண சபைகளினால் பயன்படுத்தப்படல் | மத்திய அரசினால் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டிய நிதிகள் போதுமான அளவு உரிய காலப் பகுதியில் வழங்குதல்.<br>மாகாண சபைகள் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேவையான நிதியை போதுமான அளவில் பெற்றுக் கொடுத்தல் | மாகாணத் திரைசேறி |

© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

**20 வருட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய பரிந்துரைகள்**
**2ஆம் படிமுறை**
**வடமேல் மாகாண சபையின் பரிந்துரைகள் இலக்கம் - 04**

| பிரச்சினை | தற்போதுள்ள நிலைமை | மாற்று வழிகள் | பொறுப்பு |
|---|---|---|---|
| 01. மாகாணத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கு நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காமை. | மாகாண சபையின் தேவைகளுக்காக கேட்கப்படுகின்ற நிதி உரிய முறையில் பெற்றுக் கொடுக்காமை. இந்நிலைமை காரணமாக மாகாணத்தின் சேவைகள் வழங்குவது மந்த கதியில் இடம் பெறுகின்றனமை.<br>அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகள் உரிய காலப் பகுதியில் கிடைக்கப் பெறாமையின் காரணமாக மாகாண சபை நிருவாகம் தொடர்பாக மக்களின் நம்பிக்கை குறைந்துள்ளமை.<br>இதற்கு மேலதிகமாக மாகாண அபிவிருத்தி விடயங்கள் தொடர்பாக மத்திய அரசு நிறுவனங்களுக்கு நிதிகளை வழங்கி நடைமுறைப்படுத்து கின்றமை. இதனால் மாகாண சபை தொடர்பான மக்களின் நம்பிக்கை குறைந்துள்ளமை. | - | - |
| 02. கொள்கை, திட்டமிடல் மற்றும் வரவு செலவு தயாரிப்பு போன்ற விடயங்கள் வெவ்வேறு பிரிவுகளாகச் செயற்படல், அன்றாட செலவுகள், முதலீட்டுச் செலவுகள் வெவ்வேறாக நடைமுறைப்படுத்துதல். | - | மாகாண சபைகளுக்கான நிதியை ஒதுக்குவதற்கான காரணிகளைத் திருத்தி அமைத்தல். மாகாணத்தில் காணப்படும் அபிவிருத்தியின் தேவைப்பாட்டின் அடிப்படையில் உந்துதலை | - |

| | | | |
|---|---|---|---|
| | | ஏற்படுத்துதல்.<br>வறுமை விகிதாசாரம், தொழில் பிரச்சினை விகிதாசாரம், பிரதேசத்தின் அளவு.<br>தேசிய வருமானத்திற்கு செய்கின்ற பங்களிப்பின் அளவு.<br>மேற்கூறிய செயல்முறைகளை அரசியல் யாப்பிற்குள் உள்ளடக்குதல். | |
| 03. மாகாண ரீதியான சேவைகளை வழங்கும் போது தனியார் துறை உற்பத்திகளுக்கு அதிக கவனம் செலுத்தாமை. | - | - | பாராளுமன்றம், நிதியமைச்சு, நீதி ஆணைக்குழு. |
| 04. நிதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக ஒவ்வொரு மாகாண சபையிலிருந்தும் பிரதிநிதி ஒருவரை இணைப்பதிகாரியாக நியமித்தல். | தற்போதைக்கு இல்லை | யாப்புச் சீர்திருத்தத்தின் ஊடாக இதைச் செய்ய வேண்டும். | - |
| 05. மாகாண சபைகளால் சேகரிக்கப்படும் வரி நிதிகள் உட்பட நன்கொடைகள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்குதலைத் தாமதித்தல் தவிர்க்கப்பட வேண்டும். மாகாண மட்ட அபிவிருத்தியின் போது உள்ளூராட்சி மன்றங்களுக்கு தேவையான ஒத்துழைப்புக்கள் உரிய முறையில் வழங்கப்படுதல். | மாகாண சபைகள் முகங்கொடுக்கும் நிதிப் பிரச்சினைகள் காரணமாக இந்நிலைமை காணப்படுகிறது.<br>மத்திய அரசினால் கிடைக்க வேண்டிய நிதிகள் உரிய காலத்தில் கிடைக்கப் பெறுகின்றன. | - | - |
| 06. மாகாணத்திற்கே உரிய பொருளாதார மற்றும் கலாசார வளங்கள் தொடர்பாக தரவுகளைச் சேகரிக்கின்ற, ஆய்வுகள் செய்கின்ற உரிய செயற்திட்டங்கள் ஊடாக பிரதிபலன்மிக்க நிறுவனக் கட்டமைப்பை கட்டியெழுப்புதல். | | நியதிச் சட்டங்கள் ஊடாக மாகாண திட்டமிடல் ஆணைக்குழு ஒன்றை உருவாக்குதல் | - |
| 07. அறவிடப்படுகின்ற வரிகளை பகிர்வது தொடர்பாக நிதி ஆணைக்குழுவிற்கோ மாகாண சபைக்கோ அதிகாரமின்மை. | இந்நிலைமை இவ்வாறே காணப்படுகிறது. | மாற்றங்கள் செய்வதற்கு யாப்பு சீர்திருத்தம் தேவை | - |

**20 வருட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய பரிந்துரைகள்**
**2ஆம் படிமுறை**
**கிழக்கு மாகாண சபையின் பரிந்துரைகள் இலக்கம் - 01**

| பிரச்சினை | தற்போதுள்ள நிலைமை | மாற்று வழிகள் | பொறுப்பு |
|---|---|---|---|
| 1. அறவிடப்படும் வரி தொடர்பாக நிதி ஆணைக்குழுவிற்கோ மாகாண சபைக்கோ அதிகாரமின்மை. | இங்கு மாகாண சபை உறுப்பினர்கள் இல்லாத காரணத்தினால் அச்செயல்பாடு ஸ்தம்பிதம் அடைந்துள்ளது. | மக்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களைக் கொண்ட மாகாண சபைகளின் ஊடாக அவ்வதிகாரங்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். | மத்திய அரசு, மாகாண சபை, நிதி ஆணைக்குழு |
| 2. இரண்டு தசாப்தங்களாக மாகாண சபைகள் செயற்பட்டாலும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக மத்திய அரசின் தலைமைக்கு அரசியல் அதிஷ்டானம் இன்மை. | இதற்கு மத்திய அரசு மாத்திரம் அல்ல ஏனைய நிறுவனங்களும் ஒத்துழைப்பு நல்க வேண்டும். | மக்களால் தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்கள் மூலம் அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். மத்திய அரசு இவ்வாறான நடவடிக்கைகளின் போது விட்டுக்கொடுத்து செயல்பட வேண்டும். | மத்திய அரசு, மாகாண சபை, அரச கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அமைச்சின் அமைச்சர். |
| 3. மேலிருந்து கீழான செயல்திட்டம் தயாரிக்கும் தொடர்ச்சி யான படிமுறை உதாரணம்: வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு, கம நெகும, மக நெகும போன்ற வெளிநாட்டு நிதியுதவி யின் மூலம் செயற்படுத் தும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவது இன்றும் மேலிருந்து கீழோகவே. | மாகாண சபை, பிரதேச செயலாளர் காரியாலயங்களில் இருந்து முன்மொழிவுகள் பெறப்படுகின்றன. | மாகாண சபைக்கு முழு அளவிலான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் | மாகாண சபை |
| 4. சுய ஜீவனோபாயம் தொடர்பான தீர்மானங்களின் போது பிரஜைகளின் கருத்துக்களுக்கு இடமின்மை. | பிரஜைகளின் கருத்துக்களுக்கு முழுமையான இடம் இல்லை. | மாகாண சபை மற்றும் பிரதேச சபைகள் தெளிவுடன் கடமையாற்றுதல். | மாகாண சபை |
| 5. மாகாண சபையின் கீழ்க் காணப்பட்ட அரச நிருவாகம் மற்றும் கமநலச் சேவைகள் விடயப் பரப்பை மீண்டும் மாகாண சபைக்குள் உள்ளடக்குதல். | மத்திய அரசினால் செயல்படுத்தப்படுகி ன்றது. | இவ்விரு கடமைகளையும் மாகாண சபைகளே செய்ய வேண்டும். | மத்திய அரசு |
| 6. அரச சேவை நியமனங்கள், இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு தொடர்பாக மத்திய | தற்போதைக்கு மத்திய அரசினால் நிறைவேற்றப்படுகின் றது. சில | மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்கள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும். | மத்திய அரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| | அரசிற்கும், மாகாண சபைக்கும் இடையில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுதல். | பரிந்துரைகளை மாகாண சபைகளும் வழங்குகின்றன. | | |
| 7. | தேசிய பாடசாலைகள் மற்றும், தேசிய வைத்தியசாலைகளின் நிருவாகத்தை மீண்டும் மாகாண சபை விடயத்தினுள் உட்படுத்துதல். | பிரதான பொறுப்பு மத்திய அரசாங்கத்திடம் காணப்படுகின்றது. | தேசிய என்ற சொல்லை ஒதுக்கிவிட்டு அனைத்து அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும். | மத்திய அரசு |
| 8. | பயணிகள் போக்குவரத்துத் தொடர்பில் மத்திய அரசிற்கும் மாகாண சபைக்கும் இடையில் காணப்படும் பிணக்குகளைத் தீர்த்தல். | வீதி அபிவிருத்தி தொடர்பாக மட்டுமே திணைக்களம் ஒன்று காணப்படுகின்றது. | மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்கள் கிடைக்கப்பெற வேண்டும். | மாகாண சபை |
| 9. | மாகாண சபைக்குள் தமது பிரதிநிதிகள் இல்லாத நிலப்பரப்பில் வாழும் மக்களினதும் குலப்பண்மைத்துமுடைய குழுக்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | மாகாண சபைகள் ஊடாக உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவ தில்லை. | மக்கள் பிரதிநிதிகள் ஊடாக செயற்படுத்தப்பட வேண்டும். | மாகாண சபை |
| 10. | மாகாணத்திற்கே உரிய பொருளாதார மற்றும் கலாசார வளங்கள் தொடர்பாக தரவுகளைச் சேகரிக்கின்ற, ஆய்வுகள் செய்கின்ற உரிய செயற்திட்டங்கள் ஊடாக பிரதிபலன்மிக்க நிறுவனக் கட்டமைப்பை கட்டியெழுப்புதல். | ஒவ்வொரு பிரிவுகளும் தனித்தனியாக இயங்குகின்றன. மத்திய அரசின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக இடம்பெறுகின்றன. | மாகாண சபையின் மனித வளங்கள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு மாகாண சபையிலும் ஒருங்கிணைப்பு நிலையம் ஒன்று உருவாக்கப்படல் வேண்டும். | மகாண சபை |
| 11. | மத்திய அரசாங்கத்தின் அரச அதிகாரிகளுடன் ஒப்பிடுகையில் மாகாண சபை அரச அதிகாரிகளை குறைமதிப்பீடு செய்தல். | மத்திய அரசின் அதிகாரிகளிடம் இவ்வெண்ணமே காணப்படுகின்றது. | மாகாண அதிகாரிகளுக்கும் சமமான சந்தர்ப்பங்களும் ஏனைய காரணங்களும் வழங்கப்பட வேண்டும். | மத்திய அரசு, மாகாண சபை. |
| 12. | ஒரே விடயத்தை மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் நடைமுறைப்படுத்துதல் (இரட்டைச் செயற்பாடு) | ஒரே விடயங்களை எவ்வித தொடர்பாடல்களும் இன்றி நடைமுறைப்படுத்து கின்றனர். | அதிகாரங்கள் மற்றும் கடமைகள் தொடர்பாக மத்திய அரசுடன், முழுமையான தெளிவுடன் கடமையாற்றுதல். | மத்திய அரசு, மாகாண சபை. |
| 13. | மாகாண சபை முறைக்குள்ளும் சில விடயங்கள் இரட்டைச் செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருத்தல். | அடிக்கடி கலந்துரையாடல்கள் இடம்பெறுவதனால் அவ்வாறு இடம்பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவு. | மாகாண சபைக்குள்ளே கலந்துரையாடலும் அதற்குரிய காலத்தினுள் செயற்படுத்துதலும் | பிரதம செயலாளர் உட்பட அமைச்சுச் செயலாளர்கள். |

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | அதிகாரப் பகிர்வு தொடர்பான சட்டங்களை செயற்படுத்துவதற்கு மத்திய அரசின் அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்தல். | மத்திய அரசின் அதிகாரிகளின் எதிர்ப்புக்கள் வெளிவருகின்றன. | அதிகாரப் பகிர்வு தொடர்பாக அறிவூட்டலை மட்டும் எண்ணங்களிலான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும். சரியான அரசியல் வழிகாட்டலை மேற்கொள்ள வேண்டும். | மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்கள், மாவட்டச் செயலாளர் அரசியல் யாப்பு வகுப்பாளர்கள். |
| 15. | மாகாணத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கு நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காமை. | உரிய பிரதான நடவடிக்கைகள் மத்திய அரசினால் மேற்கொள்ளப்படுகின்றன. உரிய நிதி வசதிகள் கிடைக்கவில்லை. | நிதி ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை திறம்பட வைத்தல். | மத்திய அரசு, மாகாண சபை, நிதி அமைச்சு. |
| 16. | கொள்கை, திட்டமிடல் மற்றும் வரவு செலவு தயாரிப்பு போன்ற விடயங்கள் வெவ்வேறு பிரிவுகளாகச் செயற்படல், அன்றாட செலவுகள், முதலீட்டுச் செலவுகள் வெவ்வேறாக நடைமுறைப்படுத்துதல். | வேறு வேறாக செயற்படுகின்றது. ஆயினும் தீர்மானம் எடுப்பதற்கான அதிகாரம் இல்லை. | உரிய அதிகாரங்கள் மாகாண சபையின் கீழ் காணப்பட வேண்டும். | மத்திய அரசு, மாகாண சபை, உரிய அமைச்சர் |
| 17. | மாகாண ரீதியான சேவைகளை வழங்கும் போது தனியார் துறை உற்பத்திகளுக்கு அதிக கவனம் செலுத்தாமை. | தற்போது அது தொடர்பாக சரியான செயல்முறை ஒன்று இல்லை. | சரியான முகாமைத்துவத்தின் மூலம் அதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்தல். | மாகாண சபை |
| 18. | நிதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக ஒவ்வொரு மாகாண சபையிலிருந்தும் பிரதிநிதி ஒருவரை இணைப்பதிகாரியாக நியமித்தல். | அவ்வாறான பங்களிப்பில்லை. | தற்போதுள்ள நிலைமையை சீர் செய்தல் போதுமானது. மாகாண சபைகளின் தேவைகளை நிதி ஆணைக்குழுவின் மூலம் நெறிப்படுத்தும் செயல்முறையை திறம்பட வைத்தல். | பிரதம செயலாளர். |

© Copyright 2008 May Outreach Unit- Centre for Policy Alternatives

**20 வருட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய பரிந்துரைகள்**
**2ஆம் படிமுறை**
**கிழக்கு மாகாண சபையின் பரிந்துரைகள் இலக்கம் - 02**

| | பிரச்சினை | தற்போதுள்ள நிலைமை | மாற்று வழிகள் | பொறுப்பு |
|---|---|---|---|---|
| 1. | அறவிடப்படும் வரி தொடர்பாக நிதி ஆணைக்குழுவிற்கோ மாகாண சபைக்கோ அதிகாரமின்மை. | சுகாதாரப் பிரிவின் இவ்வாறு வரி அறவிடப்படுவதில்லை. | முழு அதிகாரங்களும் மாகாண சபைகளுக்கு கிடைக்க வேண்டும். | மத்திய அரசு |
| 2. | இரண்டு தசாப்தங்களாக மாகாண சபைகள் செயற்பட்டாலும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக மத்திய அரசின் தலைமைக்கு அரசியல் அதிஷ்டானம் இன்மை. | கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பு நிலமைகள் பெரும்பாலான தீர்மானங்களின் போது அழுத்தமாக அமைந்துள்ளது. | முழுமையான மாகாண சபையொன்றை அமைத்தலும் பின்னர் மத்திய அரசின் தலைமைத்துவத்துடன் கலந்துரையாடலும் | ஜனாதிபதி, பொறுப்பான அமைச்சர் |
| 3. | மாகாண சபைக்குள் இருக்கும் சிறு இனக் குழுக்களின் அபிலாஷைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த முடியாதுள்ளமை. | இவ்வாறான தேவைகளை நிறைவேற்றுவதற்கான அதிகாரங்கள் இல்லாத காரணத்தினால் உரிய முறையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை. | முழுமையான அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும். | மத்திய அரசு, சுகாதார அமைச்சு |
| 4. | மேலிருந்து கீழான செயல்திட்டம் தயாரிக்கும் தொடர்ச்சியான படிமுறை உதாரணம்: வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு, கம நெகும, மக நெகும போன்ற வெளிநாட்டு நிதியுதவியின் மூலம் செயற்படுத்தும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவது இன்றும் மேலிருந்து கீழோகவே. | சுயாதீனமான செயற்பாடுகள் மிகக் குறைவு கூடுதலான சந்தர்ப்பங்களில் மத்திய அரசின் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றது. தொடர்ச்சியான கொள்கைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் படுவதில்லை. | மாகாண சபைக்கு முழு அளவிலான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் | மாகாண சபை, தேசிய கொள்கை வகுப்பு நிலையம் |
| 5. | சுய ஜீவனோபாயம் தொடர்பான தீர்மானங்களின் போது பிரஜைகளின் கருத்துக்களுக்கு இடமின்மை. | உரிய கட்டமைப்பு எண்ணமோ இல்லை. | பிரஜைகளின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளக் கூடிய சரியான கட்டமைப்பு ஒன்று மாகாண சபைகளுக்கு வழங்க வேண்டும். | மாகாண சபை |
| 6. | மாகாண சபையின் கீழ்க் காணப்பட்ட அரச நிருவாகம் மற்றும் | கூடுதலான நிர்வாக அதிகாரங்கள் தற்போதைக்கு | மாவட்டச் செயலாளர் மாகாண சபையின் கீழ் நியமிக்கப்படுகின்றது. | மத்திய அரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| | கமநலச் சேவைகள் விடயப் பரப்பை மீண்டும் மாகாண சபைக்குள் உள்ளடக்குதல். | மத்திய அரசினால் மேற்கொள்ளப்படுகின்றது. | மாகாண சபைகளுக்கு கட்டாயமாக அதிகாரங்களை பெற்றுக்கொடுக்க வேண்டும். | |
| 7. | அரச சேவை நியமனங்கள், இடமாற்றம் மற்றும் பதவி உயர்வு தொடர்பாக மத்திய அரசிற்கும், மாகாண சபைக்கும் இடையில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுதல். | அனைத்து தீர்மானங்களும் மத்திய அரசாங்கத்தினாலே மேற்கொள்ளப்படுகின்றது. | வைத்தியர்களின் இடமாற்றம் மத்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட வேண்டிய அதே வேளை அதனோடு தொடர்புடைய ஏனைய அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும். | மத்திய அரசு |
| 8. | தேசிய பாடசாலைகள் மற்றும், தேசிய வைத்தியசாலைகளின் நிருவாகத்தை மீண்டும் மாகாண சபை விடயத்தினுள் உட்படுத்துதல். | அனைத்து செயற்பாடுகளும் மத்திய அரசாங்கத்தினாலே மேற்கொள்ளப்படுகின்றது. | அனைத்து அதிகாரங்களையும் மாகாண சபைகளுக்கு பெற்றுக்கொடுத்தல் பொருத்தமானது.<br>மத்திய அரசாங்கத்தின் சேவையாக்கலின் இடமாற்றம் மத்திய அரசினால் மேற்கொள்ளப்பட வேண்டும். | மத்திய அரசு |
| 9. | பயணிகள் போக்குவரத்துத் தொடர்பில் மத்திய அரசிற்கும் மாகாண சபைக்கும் இடையில் காணப்படும் பிணக்குகளைத் தீர்த்தல். | - | - | - |
| 10. | மாகாண சபைக்குள் தமது பிரதிநிதிகள் இல்லாத நிலப்பரப்பில் வாழும் மக்களினதும் குலப்பண்மைத்துமுடைய குழுக்களின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியின் பொருட்டு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல். | பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால் இந் நடவடிக்கை உரிய முறையில் இடம்பெறுவதில்லை. | மாகாண சபை பிரதிநிதிகளை நியமித்து உரிய செயல்முறைகளை மற்றும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். | மாகாண சபை |
| 11. | மாகாணத்திற்கே உரிய பொருளாதார மற்றும் கலாசார வளங்கள் தொடர்பாக தரவுகளைச் சேகரிக்கின்ற, ஆய்வுகள் செய்கின்ற உரிய செயற்திட்டங்கள் ஊடாக பிரதிபலன்மிக்க நிறுவனக் கட்டமைப்பை கட்டியெழுப்புதல். | தற்போதைக்கு சிற்சில செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. தரவுகள் சேகரிப்பதைத் தவிர வேறு செயற்பாடுகள் இல்லை. | பிரதம செயலாளரை மையப்படுத்தி அதிகளவான ஒதுக்கீடுகளையும் பயன்படுத்தி காரியாலயம் ஒன்றை அமைத்தல் வேண்டும். | - |
| 12. | மத்திய அரசாங்கத்தின் அரச அதிகாரிகளுடன் ஒப்பிடுகையில் மாகாண சபை அரச அதிகாரிகளை | மத்திய அரசின் அதிகாரிகளிடம் இவ்வெண்ணமே காணப்படுகின்றது. | உரிய பயிற்சிகள் மற்றும் வரப்பிரசாதங்கள் மாகாணத்தின் அதிகாரிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். | மத்திய அரசு, மாகாண சபை. |

| | | | | |
|---|---|---|---|---|
| | குறைமதிப்பீடு செய்தல். | | அனுபவம் வாய்ந்த அதிகாரிகளை மாகாண சபைக்குள் நியமிக்க வேண்டும். | |
| 13. | ஒரே விடயத்தை மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் நடைமுறைப்படுத்துதல் (இரட்டைச் செயற்பாடு) | ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது பிரச்சினைக்குரிய காரணியாகவே காணப்படுகின்றது. மத்திய அரசாங்கத்துடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | அதிகாரங்கள் மற்றும் கடமைகள் தொடர்பாக மத்திய அரசாங்கத்துடன் முழுமையான தெளிவுடன் கடமையாற்றுதல். | மத்திய அரசு, மாகாண சபை. |
| 14. | மாகாண சபை முறைக்குள்ளும் சில விடயங்கள் இரட்டைச் செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருத்தல். | சுகாதாரத் துறையினுள் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவு.<br>உரிய அதிகாரிகள் பொறுப்புடன் கடமையாற்றுகின்றனர். | விடயப் பரப்பு மற்றும் தீர்மானிக்கப்பட்ட திட்டங்கள் தொடர்பாக முழுமையாக தெளிவுபடுத்துதல். | பிரதம செயலாளர் உட்பட அமைச்சுச் செயலாளர்கள். |
| 15. | அதிகாரப் பகிர்வு தொடர்பான சட்டங்களை செயற்படுத்துவதற்கு மத்திய அரசின் அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்தல். | அதிகாரப் பகிர்வு தொடர்பில் மத்திய அரசின் அதிகாரிகளிடம் விருப்பமின்மை காணப்படுகிறது. | மத்திய அரசின் அதிகாரிகளுக்கு உரிய தெளிவை வழங்குதல், அதிகாரப் பகிர்வு தொடர்பாக தேசிய மட்டத்திலான கலந்துரையாடல் ஒன்றை ஏற்படுத்துதல். | மத்திய அரசு |
| 16. | மாகாணத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கு நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காமை. | போதுமான அளவு நிதி காணப்படுகின்றது. அதற்கு பிரதான காரணியாக அமைவது அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பாகும். | நிதிப் பங்களிப்பை வழங்குகின்ற நிறுவனங்களும் வழிகாட்டலுக்காக உரிய கட்டமைப்பை ஏற்படுத்த வேண்டும். | பிரதம செயலாளர், மாகாண அமைச்சுச் செயலாளர். |
| 17. | கொள்கை, திட்டமிடல் மற்றும் வரவு செலவு தயாரிப்பு போன்ற விடயங்கள் வெவ்வேறு பிரிவுகளாகச் செயற்படல், அன்றாட செலவுகள், முதலீட்டுச் செலவுகள் வெவ்வேறாக நடைமுறைப்படுத்துதல். | உரிய முறையில் இடம்பெறுவதில்லை. | வருடாந்த மதிப்பீட்டிற்கு உள்ளடங்கும் கட்டமைப்பொன்றை மாகாண சபையினுள் உருவாக்க வேண்டும். | மாகாண சபை |
| 18. | மாகாண ரீதியான சேவைகளை வழங்கும் போது தனியார் துறை உற்பத்திகளுக்கு அதிக கவனம் செலுத்தாமை. | - | - | - |

| | | | | |
|---|---|---|---|---|
| 19. | நிதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக ஒவ்வொரு மாகாண சபையிலிருந்தும் பிரதிநிதி ஒருவரை இணைப்பதிகாரியாக நியமித்தல். | தற்போதைக்கு அவ்வாறானதோர் நிலை இல்லை. | மிகவும் வரவேற்கத் தக்கது. | நிதி ஆணைக்குழு. மாகாண சபை, பொறுப்பு வாய்ந்த அமைச்சர் |

**20 வருட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய பரிந்துரைகள்**
**2ஆம் படிமுறை**
**கிழக்கு மாகாண சபையின் பரிந்துரைகள் இலக்கம் - 03**

| | பிரச்சினை | தற்போதுள்ள நிலைமை | மாற்று வழிகள் | பொறுப்பு |
|---|---|---|---|---|
| 1. | அறவிடப்படும் வரி தொடர்பாக நிதி ஆணைக்குழுவிற்கோ மாகாண சபைக்கோ அதிகாரமின்மை. | மாகாண சபைகளினால் வரி அறவிடப்படுவதில்லை. தேவையான அனைத்து நிதிகளையும் மத்திய அரசாங்கம் பெற்றுக்கொடுக்கின்றது. | வரிகள் தொடர்பாக தேசிய கொள்கை ஒன்று இருப்பதன் காரணமாக அதற்கு மேலதிகமாக மாற்று வழிகளைக் கூற முடியாது. | மத்திய அரசு |
| 2. | இரண்டு தசாப்தங்களாக மாகாண சபைகள் செயற்பட்டாலும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக மத்திய அரசின் தலைமைக்கு அரசியல் அதிஷ்டானம் இன்மை. | மத்திய அரசுக்கு உண்மையிலே அவ்வாறான ஒரு எண்ணம் இல்லை.<br>மாகாண சபைக்கு எதிரான கருத்துத் தெரிவிக்கும் பிரிவினரே மத்திய அரசில் காணப்படுகின்றனர். | அதிகாரப் பகிர்வு தொடர்பான அறிவூட்டலை வழங்குதல். வடக்கு கிழக்கிற்கென உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைக்கு உரிய கொள்கை ஒன்றை உருவாக்குதல். | மத்திய அரசு, கொள்கை வகுப்பாளர்கள். |
| 3. | மாகாண சபைக்குள் இருக்கும் சிறு இனக் குழுக்களின் அபிலாஷைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த முடியாதுள்ளமை. | இந்நிலமை இவ்வாறே காணப்படுகின்றது | இந்நிலமையை மாற்றுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாகாண சபை, பிரதம செயலாளர். |
| 4. | மேலிருந்து கீழான செயல்திட்டம் தயாரிக்கும் தொடர்ச்சியான படிமுறை உதாரணம்: வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு, கம நெகும, மக நெகும போன்ற வெளிநாட்டு நிதியுதவியின் மூலம் செயற்படுத்தும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவது இன்றும் மேலிருந்து கீழோகவே. | - | மத்திய அரசு, மாகாண சபை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரிய திட்டங்களை வகுப்பதற்கான சந்தர்ப்பத்தை பெற்றுக் கொடுத்தல். அவ்வாறு திட்டங்களைத் தயாரிக்கும் அதிகாரம் சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளமையினால் அவற்றை பயன்பாட்டிற்கு எடுத்தல். | மத்திய அரசு, மாகாண சபை, உள்ளூராட்சி மன்றங்கள். |
| 5. | சுய ஜீவனோபாயம் தொடர்பான தீர்மானங்களின் போது பிரஜைகளின் கருத்துக்களுக்கு | ஏனைய மாகாண சபைகள் காணப்படும் நிலமையை இங்கும் காணப்படுகின்றது. | பிரஜைகளின் கருத்துக்களுக்கு செவி மடுக்கும் அல்லது நடைமுறைப்படுத்தக் கூடிய கட்டமைப்பொன்றை | மாகாண சபை, அதிகாரிகள். |

| | | | | |
|---|---|---|---|---|
| 12. | மத்திய அரசாங்கத்தின் அரச அதிகாரிகளுடன் ஒப்பிடுகையில் மாகாண சபை அரச அதிகாரிகளை குறைமதிப்பீடு செய்தல். | இது உண்மை | மத்திய அரசின் அதிகாரிகளுக்கு தெளிவு நிலையை ஏற்படுத்துதல் (மாகாண சபை அதிகாரிகளும் அரச அதிகாரிகள் என்ற எண்ணத்தை அவர்களுக்கு ஏற்படுத்துதல். | மத்திய அரசு, செயலாளர்கள் |
| 13. | ஒரே விடயத்தை மத்திய அரசாங்கமும் மாகாண அரசாங்கமும் நடைமுறைப்படுத்துதல் (இரட்டைச் செயற்பாடு) | இது இவ்வாறே நடைபெறுகின்றது. | மத்திய அரசின் அமைச்சு மற்றும் மாகாண சபை அமைச்சினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் தெளிவாக வேறுபடுத்தி நடைமுறைப்படுத்தல்.<br>அவற்றின் பொறுப்புக்களை புரிந்துகொண்டு செயற்படுத்துதல்.<br>இரு அமைச்சுக்களும் தொடர்புபட்டு செயற்படல். | குறிப்பிட்ட அமைச்சின் செயலாளர்கள், மத்திய அரசு, மாகாண சபை. |
| 14. | மாகாண சபை முறைக்குள்ளும் சில விடயங்கள் இரட்டைச் செயற்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டிருத்தல். | இங்கு அவ்வாறானதான நிலமைகள் இடம் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைவு. | உரிய செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடி நடைமுறைப்படுத்தப்படல். | அமைச்சுச் செயலாளர்கள், அதிகாரிகள். |
| 15. | அதிகாரப் பகிர்வு தொடர்பான சட்டங்களை செயற்படுத்துவதற்கு மத்திய அரசின் அதிகாரிகள் எதிர்ப்புத் தெரிவித்தல். | அதிகாரப் பகிர்வு தொடர்பாக கருத்துத் தெரிவிக்கும் அதே வேளை அதற்கு எதிராகவும் கருத்துக்களை தெரிவித்தல்.<br>தீர்மானம் எடுக்கும் அதிகாரங்களை பகிர்வதற்கு விருப்பமின்மை மாகாண சபை முறையை எதிர்க்கும் ஒரு பிரிவினர் மத்திய அரசில் இருத்தல். | அதிகாரப் பகிர்வின் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தல். மாகாண சபைச் சட்டங்கள் தொடர்பாக தெளிவுபடுத்தல். இவை ஏற்படுத்தப்பட்டதன் தேவைப்பாடு தொடர்பாக தெளிவு நிலையை ஏற்படுத்துதல். | மத்திய அரசு செயலாளர்கள் கொள்கை வகுப்பாளர்கள். |
| 16. | மாகாணத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கு நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காமை. | மத்திய அரசின் அனுமதி பெற்றுக்கொள்வதற்கான தடைகள் காணப்படுதல்<br>நிதி ஆணைக்குழுவின் தடைகள் காணப்படுதல்.<br>மாகாண சபைச் சட்டத்தின் கீழ் வரிகளைச் சேர்த்தாலும் | முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்தல். மாகாண சபைகளால் அறவிடப்படுகின்ற வரிகளை அவர்களுக்கே வழங்குவதும் நிதி ஆணைக்குழுவினால் வழங்கப்படும் அனைத்து நிதிகளையும் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | மத்திய அரசு, நிதி ஆணைக்குழு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அந்நிதி அளவினைக் குறைத்துக் கொண்டே எமக்கு நிதி ஒதுக்கப்படுகின்றது. | | |
| 17. | கொள்கை, திட்டமிடல் மற்றும் வரவு செலவு தயாரிப்பு போன்ற விடயங்கள் வெவ்வேறு பிரிவுகளாகச் செயற்படல், அன்றாட செலவுகள், முதலீட்டுச் செலவுகள் வெவ்வேறாக நடைமுறைப்படுத்துதல். | - | - | - |
| 18. | மாகாண ரீதியான சேவைகளை வழங்கும் போது தனியார் துறை உற்பத்திகளுக்கு அதிக கவனம் செலுத்தாமை. | இதை செயற்படுத்துவது தொடர்பான வழிமுறை ஒன்று இல்லை. | இதை ஏற்படுத்துவதற்கான செயல்முறை ஒன்றை உருவாக்குதல் | மாகாண சபை |
| 19. | நிதி ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக ஒவ்வொரு மாகாண சபையிலிருந்தும் பிரதிநிதி ஒருவரை இணைப்பதிகாரியாக நியமித்தல். | - | - | - |

**20 வருட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்ட தேசிய பரிந்துரைகள்**
**2ஆம் படிமுறை**
**கிழக்கு மாகாண சபையின் பரிந்துரைகள் இலக்கம் - 04**

| | | தற்போதுள்ள நிலைமை | மாற்று வழிகள் | பொறுப்பு |
|---|---|---|---|---|
| 01. | அறவிடப்படும் வரி தொடர்பாக நிதி ஆணைக்குழுவிற்கோ மாகாண சபைக்கோ அதிகாரமின்மை. | - | - | - |
| 02. | இரண்டு தசாப்தங்களாக மாகாண சபைகள் செயற்பட்டாலும் அதிகாரப் பகிர்வு தொடர்பாக மத்திய அரசின் தலைமைக்கு அரசியல் அதிஷ்டானம் இன்மை. | மாகாண சபை சட்டங்கள் சரியா? பிழையா? என்று குறிப்பிடுவதை விட அது தற்போது நடைமுறையில் உள்ளது என்றே குறிப்பிட வேண்டும். | 13 வது அரசியல் அமைப்பு சீர்திருத்தத்தை Recentralized செய்ய வேண்டும். | - |
| 03. | மாகாண சபைக்குள் இருக்கும் சிறு இனக் குழுக்களின் அபிலாஷைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்த முடியாதுள்ளமை. | இலங்கையில் தமிழ் சிங்கள மொழிகளை அரச கரும மொழிகளாக பிரகடனப்படுத்தி இருப்பினும் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை திருகோணமலை போன்ற பிரதேசங்களில் ஓரளவு பிரச்சினைக்குரிய காரணியாகக் காணப்படுகின்றது. | எந்தவொரு நடவடிக்கையாக இருப்பினும் தமிழ் சிங்களம் இரண்டு மொழிகளிலும் செயற்படுதல் | மத்திய அரசு மாகாண சபை |
| 04. | மேலிருந்து கீழான செயல்திட்டம் தயாரிக்கும் தொடர்ச்சியான படிமுறை உதாரணம்: வரவு செலவுத் திட்டத் தயாரிப்பு, கம நெகும, மக நெகும போன்ற வெளிநாட்டு நிதியுதவியின் மூலம் செயற்படுத்தும் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவது இன்றும் மேலிருந்து கீழோகவே. | இச் செயற்பாடு தொடர்பாக எமது அனைத்து மாவட்டங்களிலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஏதாவது ஒரு திட்டம் தயாரிப்பதாயின் அது தொடர்பாக ஒருங்கிணைப்புக் குழுவுடன் கலந்துரையாடி தீர்மானம் எடுத்த பின்னரே அச்செயல்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். கமநெகும ஓரளவில் பார்க்கும் போது Politics சார்ந்ததாகவே Local Authority Projects Identify grass root மட்டத்திலே தீர்மானிக்கப்படுகின்றது. Local Authority மூலம் அடையாளம் காண்பவை டீ.எஸ் ஊடாகவே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. | கீழ் மட்டத்தில் தரவுகளை அறிந்து செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல். | - |
| 05. | தேசிய பாடசாலைகள் மற்றும், தேசிய வைத்தியசாலைகளின் நிருவாகத்தை மீண்டும் மாகாண சபை விடயத்தினுள் உட்படுத்துதல். | தேசிய பாடசாலைகள் மிகவும் நல்ல நிலையிலேயே உள்ளன. கல்வி தொடர்பான அதிகாரங்கள் வழங்கப்பட்டாலும் அவை எம்மிடம் இருந்து பரிக்கப்பட்டுள்ளன. Educational System இன்று Result Oriented ஆகியுள்ளது. மாணவர்கள் டியுஷனை நம்பியே உள்ளனர். எனவே தேசிய பாடசாலைகள் என்பது இனிமேலும் | இந்த நிறுவனங்களை மாகாண சபையின் கீழ் கொண்டுவருவதால் பிரச்சினைகள் ஏற்படலாம். தற்போது உள்ள நிலையில் அவற்றைக் கொண்டு நடத்துவதற்கான பொருளாதார ஆற்றல்கள் எம்மிடம் இல்லாத | மத்திய அரசு |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெறுமதியானதொன்றல்ல. | காரணத்தினால் அவை மத்திய அரசின் கீழ் இருப்பது நல்லது. இருப்பினும் வைத்தியர்களை நியமித்தல், இடமாற்றங்கள் தொர்பான அதிகாரம் மாகாண சபைக்கு வழங்கப்பட வேண்டும். | |
| 06. | மத்திய அரசாங்கத்தின் அரச அதிகாரிகளுடன் ஒப்பிடுகையில் மாகாண சபை அரச அதிகாரிகளை குறைமதிப்பீடு செய்தல். | கூடுதலானவர்கள் நம்புகின்றனர் Local Authority செய்ய வேண்டியது குப்பைகளை அல்லுவதும் மலசலகூடங்களை துப்புரவு செய்வதுமே என்று | மக்களின் மனோ நிலையை மாற்ற வேண்டும். சட்டத்திற்கும் மக்களுக்கும் இடையில் காணப்படும் இடைவெளியைக் குறைத்து சட்டம் தொடர்பான தெளிவை அவர்களுக்கு பெற்றுக்கொடுத்தல் வேண்டும். | - |
| 07. | மாகாணத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை அதிகரிப்பதற்கு நிதி ஒதுக்கீடுகள் கிடைக்காமை. | நிதிகளை சேகரிப்பதற்கான வசதிகள் இங்கு இல்லை. மாகாண சபையின் Revenue வை மத்திய அரசாங்கம் பாவனைக்கு எடுத்துள்ளது. | நிதி ஒதுக்கீடுகளை ஜனநாயக ரீதியாகவும் சுதந்திரமாகவும் செய்ய வேண்டும். மாகாண சபைகளுடன் கலந்துரையாடி தீர்மானங்களை எடுப்பதற்கு நிதி ஆணைக்குழு பக்கச் சார்பற்றிருக்க வேண்டும். அங்கு பிரதேசவாதிகள் அல்லாத அரசியல் கட்சி சாராத நபர்கள் இருத்தல் வேண்டும். | - |
